www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 10 | ஜூலை 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 59

# சமாதான முயற்சிகளைக் குழப்பும் அமெரிக்கா



அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விருப்பத்திற்கு இணங்கிப் போகா விட்டால் சமாதான முயற்சிகளி லிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியத்துவத்தை குறைக்க வேண்டும் அல்லது ஓரம் கட்ட வேண்டும் என்று அமெரிக்க அரச வட்டாரங்கள் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் கிடைத் துள்ளன.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு அமெரிக்கா இலங்கையின் சமாதான முயற்சிகளில் கட்டளை யிடும் அளவிற்கு வெளிப்படையாக ஈடுபடும் நிலைமை ஏற்படலாம்.

அமெரிக்கா எவ்வளவோ வற்புறுத்தி யும் பயமுறுத்தியும் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கை அரசாங்கத் திற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகள் இயக்கம் கலந்து கொள்ளாமையாலும் இலங்கை ரணில் அரசாங்கத்துடன் பேச்சுக் களை நடத்துவதிலிருந்து விலகி நிற்பதாலும் அமெரிக்கா புலிகள் இயக்கத்தின் மீதான அதன் ஆத்திரத் தை வெளிக்காட்டத் தொடங்கி யுள்ளது. புலிகள் இயக்கத்தின் மீது பல குற்றங்களைச் சாட்டியுள்ளதுடன் புலிகளை வேட்டையாட வேண்டியும் வரலாம் என்று ஆமிரேஜ் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்காவின் ஏகாதிபத்திய அக் கறைகளை பாதுகாத்து நிலை நாட்டுபவராக இருப்பதுடன் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா வெளிப்படையாக தலையிடுவதுடன் புலிகள் இயகத்ததை கட்டுப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டு வருகிறார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குப் பிறகு அமெரிக்கா இலங்கையின் சமாதான முயற்சிகளில் கட்டளை யிடும் சக்தியாக மாறலாம் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரி விக்கின்றன. எதிர்வரும் செப்டெம்பர் வரையில் இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்திற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விருப்பத்திற்கும் புலிகள் இயக்கத் ததை இணங்கச் செய்வதற்கு பலவித முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் அதற்குப் பிறகு தீர்க்கமான முடிவு களை எடுக்க வேண்டுமெனவும் தீர்மானிக் கப்பட்டிருக்கிறதாக தெரிகிறது.

புலிகள் இயகத்திற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு புலிகள் இணங்கா விட்டால்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்..

# நிருபம் சென் இந்தியாவின் வைஸ்ராயா?

இலங்கைத்தமிழ் மக்களை இந்திய அரசே ஆழ்வதாகவும் தானே இந்திய அரசின் சார்பில் தமிழ் மக்களை ஆளும் சிற்றரசர் அல்லது இந்திய ராஜப் பிரதிநிதி என்றும் இலங்கையி லிருக்கும் இந்தியத் தூதுவர் நிருபம் சென் நினைத்துக் கொண்டு செயற்படுகிறார். தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களை அண்மை யில் தனது இருப்பிடத்திற்கு அழைத்து பல அறிவுறுத்தல்களை கொடுத் துள்ளதுடன் கட்டளைகளையும் பிறப்பித்துள்ளதாக தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்த தேசியக் கூட்டமைப்பாகவன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தேவையான விதத்திலுமன்றி தொடர்ந்து த.வி.கூ. என்ற பெய ருடன் த.வி.கூட்டணியாகவே செயற் பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போக்கிற்கு இணங்கிப் போகாது மிதவாதப் போக் குடனும் ஜனநாயகமாகவும் இந்தியா வுடன் நெருக்கமாகவும் த.வி.கூ இயங்க வேண்டும் என்றே இந்தியா விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியை பதவி நீக்கம் செய்வதற்கு த.வி.கூட்டணிக் குள்ளும் வெளியிலும் எடுக்கப்படும் முயற்சிகள். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைமைக் குழுவிலிருந்து அவர் அகற்றப்பட்டமை ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) யின் பிரதித்தலைவர் த.சுபத்திரன் கொலை செய்யப்பட்டமை என்பவற்றுக்கு மத்தியிலே நிருபம் சென் த.வி.கூ. தலைவர்களை அழைத்து அறிவுறுத் தல்களை கொடுத்துள்ளதுடன் கட்டளைகளை பிறப்பித்துள்ளார்.

சமாதான முயற்சிகளில் புலிகளன்றி த.வி.கூட்டணியே முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பதும் இந்தியாவின் விருப்பமாகும்.

இதிலிருந்து மீண்டும் இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா அதனது மேலாதிக்க அக்கறைகளை



த.வி.கூட்டணியினூடாக நிலை நாட்டிக் கொள்வதற்கு அவசரப்ப டுகிறது என்பது தெரிய வருகிறது. அதன் அக்கறைகளுக்கு விசுவாச மானது த.வி.கூட்டணியே என்பதிலும் இந்தியா இன்னும் நம்பிக்கை இழந்து விடவில்லை என்றும் தெரிகிறது.

இந்தியாவின் பிடிக்குள் மாட்டிக் கொண்டு தமிழ் மக்களுக்கும் அவர் களின் போராட்டத்திற்கு ஏற்பட்ட கதியும். தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் மறக்கக் கூடியதாக இராது. தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பி அதனது அக்கறைகளை நிலைநாட்டிக் கொள்ள இந்தியா தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளும் வெளிப்படையாக தெரிந்தவையே.

இலங்கையின் பேரினவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு தமிழ் மக்கள் மீது நெருக்குதல்களை மேற் கொண்டு அதனது தேவைகளை இந்தியா நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்கிறது.

மீண்டும் தமிழ் மக்கள் இந்திய மேலாதிக்கப் பிடிக்குள் மாட்டிக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் தொடர்ந்து இந்திய மேலாதிக்கத் திற்கு எதிரான நிலைப்பாட்டி லிருந்தாலன்றி அவர்களின் உரிமை களை வென்றெடுக்க முடியாது.

# மக்கள் போராட்டத்தின் வெற்றி

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எதிராக கடந்த மாதம் 23ம் திகதி தோட்டத் தொழிலாளர் களாலும் மலையகத் தமிழ்மக்களாலும் நடத்தப்பட்ட அடையாள வேலை நிறுத்தமும். மறியல் போராட்டமும் வெற்றிகரமானதாக இருந்தது. தோட்டங்கள் இயங்காமையாலும். போக்குவரத்துக்கள் நடைபெறாத தாலும் முழு நுவரெலியா மாவட்டமும் ஸ்தம்பிதமாக இருந்தது.

அப்போராட்டத்திற்கு இ.தொ.கா. அழைப்பை விட்டிருந்த போதும் மக்கள் தொழிற்சங்க வேறுபாடின்றி போராட் டங்களில் கலந்து கொண்டனர். ம.ம.மு. இ.தே.தோ.தொ. சங்கத் தலைவர்கள் அப்போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருந்த போதும் அத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பெரும் எண்ணிக் கையில் கலந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் அத்தலைவர்களுக்கு பாடத்தைப் புகட்டியுள்ளனர்.

இ.தொ.கா.வை தவிர புதிய ஜனநாயக கட்சியும். மேல்கொத் மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம். என்பன போராட்டங்களை நடாத்துவதில் முழுமூச்சாக ஈடுபட் டுள்ளன. அவை எல்லா அமைப்பு களை சேர்ந்தவர்களையும் போராட்ட த்தில் ஈடுபட வைப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன. இ.தொ.கா. அப் போராட்டத்தை ஐக்கியப்பட்ட போராட் டமாக முன்னெடுக்கத் தவறியதைச் சுட்டிக் காட்டி அதனை விமர்சித் திருந்த போதும் பு.ஜ.க.. மே.கொ.தி.எ. மக்கள் இயக்கம் என்பன அதில் கலந்து கொண்டு அப்போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தன.

இப்போராட்டத்திற்கு எதிரான நிலைப் பாட்டைக் கொண்டிருந்த தலைவர் கள் எனப்படுவர்கள் அப்போராட்ட த்தை காட்டிக் கொடுத்ததுடன் மலையகத் தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் பேரின வாதத் திற்கும். ஏகாதிபத்திய முதலாளித் துவத்திற்கும் துணை போய் விட்டார்கள். நவீன் திஸாநாயக்காவின் கையாட்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட சில தோட்டத் தொழிலாளர் களை தாக்கி காடைத்தனம் புரிந்துள்ளனர்.

கணபதி கனகராஜ். அய்யாத்துரை போன்ற அறிக்கை மன்னர்களாக மௌனம் காத்தனர்.

ஆனால் மலையகத் தமிழ் மக்கள். தோட்டத் தொழிலாளர்கள் அவர் களின் போராட்டப் பாதையில் நம்பிக் கை இழந்துவிடவில்லை. உறுதியான போராட்டங்களின் முன் காட்டிக் கொடுப்புகளும். எதிர்ப்பு களும். தாக்குதல்களும் செயலிழந்து விடும்.

மக்களுக்கும் நாட்டிற்கும் தீங்கு விளைவிக்கும் மேல்கொத்மலைத் திட்டத்தை தடுத்து நிறுத்த அறிக்கைகளை விட ஐக்கியப்பட்ட மக்கள் போராட்ட இயக்கங்களே அவசியமானதாகும்.




படிப்பகம்

www.padippakam.com



# வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு மட்டும் ரூ.4593 கோடி தேவை

எதிர்வரும் நான்கு வருடங்களுக்கென இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் வெளிநாட்டு உதவி 46500 கோடி ரூபாவாகும். ஆனால் அழிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கை புனரமைப்பதற்கு மட்டும் ஏறக்குறைய 4593 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற | 568 கோடி ரூபாய் |
| 2. | சுகாதாரம் | 353 கோடி ரூபாய் |
| 3. | கல்வி | 205 கோடி ரூபாய் |
| 4. | வீடமைப்பு | 1005 கோடி ரூபாய் |
| 5. | உள்கட்டமைப்பு | 1651 கோடி ரூபாய் |
| 6. | விவசாயம் | 509 கோடி ரூபாய் |
| 7. | வீதி புனரமைப்பு | 191 கோடி ரூபாய் |
| 8. | நீர் மின்சக்தி | 111 கோடி ரூபாய் |
| | மொத்தம் | 4593 கோடி ரூபாய் |

இங்கு தரப்பட்டுள்ள கணிப்பு மிகவும் சராசரியானதாகும். வடக்கு கிழக்கை மீளக்கட்டியெழுப்புவது லேசான விடயமாக இருக்கப் போவதில்லை.

அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் வெளிநாட்டு உதவியில் எவ்வளவை வடக்கு கிழக்கு புனரமைப்பிற்காக அரசாங்கம் செலவிட முடிவு செய்துள்ளது என்பது பற்றி யாருக்கும் தெரியாது.

வடக்கு கிழக்கில் 400 சுகாதார நிலையங்களில் (வைத்திய சாலைகள். மருந்தகங்கள்) 55 முற்றாக தேசமாக்கப்பட்டுள்ளது. மேலும் 49 இயங்க முடியாத நிலையில் உள்ளது.

15 ஆயிரத்திற்கு மேற்பட்ட கல்விக்கூடங்கள் முற்றாக தகர்ந்துள்ளன. 326700 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன.

60 சதவீதமான பெரு வீதிகளும். புகையிரத வீதிகளும் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.10 புகையிரதப் பாலங்களும் 29 புகையிரத நிலையங்களும் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.

# மேல்கொத்மலைத் திட்டத்தை நிரமாணிக்க முடியுமா?

மேல்கொத்மலை நீர்மின் திட்டம் இலங்கை நாட்டிற்கும் மக்களுக்கும் அழிவுபூர்வமானதாகையால் பல பக்கங்களிலும் இருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது.

சூழலியல் அமைப்புகள். தொழிற்சங்கங்கள். அரசியற் கட்சிகள். அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றுடன் தனிப்பட பல புத்திஜீவிகளும் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

பல அமைப்புகளையும். தனிநபர்களையும் ஒன்றிணைத்து மேல்கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அமைக்கப்பட்டு கூட்டங்கள். கலந்துரையாடல்கள். துண்டுப்பிரசுர இயக்கம். சுவரொட்டி இயக்கம். கையெழுத்து இயக்கம் என்பவற்றை நடத்தியுள்ளது.

இதைத் தவிர இ.தொ.கா.வும் அத்திட்டத்தை எதிர்த்து வருகின்றது.

பௌத்த பிக்குகளும் எதிர்த்து வருகின்றனர். எனினும் மேல்கொத்மலை நீர்மின் திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலைகளுக்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகைகளில் நீர்மின் சக்தி அமைச்சு விளம்பரங்களை செய்துள்ளது.

அவ்விளம்பரங்களை அடுத்து மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளன. அத்திட்டத்தை முற்றாக கைவிடும்படி மீண்டும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பல பக்கங்களிலுமிருந்தும் தெரிவிக்கப்படும் எதிர்ப்புகள் ஒருமுகப்படுத்தப்பட்டு எதிர்ப்பியக்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மக்கள் நேரடியாக பங்கெடுக்கும் எதிர்ப்பியக்கங்களாக விஸ்தரிக்கப்படுமாயின் அவற்றை மீறி நிர்மாண வேலைகள் ஆரம்பிக்க முடியாது.

ஆக 150 மெகாவாட் நீர்மின் சக்தியை பெற்றுக் கொள்வதற்காக தலவாக்கொல்லை பிரதேசத்திலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் வளமான காணியை நீரில் மூழ்கடிப்பது எவ்வகையிலும் நியாயமாகாது ஜப்பானின் கடனுதவியால் நிர்மாணிக்கப்படவுள்ள இத்திட்டத்தினால் பெறப்படவுள்ள மின் சக்தி அப்பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள ஆடைத் தொழிற்சாலைகளுக்கு வழங்குவதற்கே போதுமானதாக இருக்கும்.

1977ஆம் ஆண்டிற்குப் பிறகு இலங்கையின் பொருளாதாரத்தில் ஜப்பானின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதில் ஒன்றாகவே மேல்கொத்மலைத் திட்டத்தையும் கொள்ளல் வேண்டும். ஜப்பானின் பழைய வாகனங்களின் பெரியதொரு சந்தையாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது. இதைத்தவிர மின்சார. மின்தொழில்நுட்ப பொருட்களும் இங்கு குவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் ஆளும்வர்க்கம் ஜப்பானின் கடன் உதவியை எப்படியாவது பெற்றுக் கொண்டு தனிப்பட லாபமடையும் நோக்கிலும் மேல்கொத்மலைத் திட்டத்தை நிர்மாணிக்க முன்வந்துள்ளது. அதில் பேரினவாத அடிப்படையும் இருக்கிறது. அடக்கப்படுகின்ற ஒரு தேசிய இனமான மலையகத் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசத்தின் பெரும் பகுதியை நீரில் மூழ்கடித்து அவர்களின் குடிப்பரம்பலை சிதறடிக்கும் நோக்கமும் இருக்கிறது. அதன் மூலம் பெருந்தோட்டப் பொருளாதாரத்துக்கும் விவசாயச் செய்கைக்கும் பாதிப்பு ஏற்படும். சூழலுக்கும் பாதிப்பு ஏற்பட்டு இயற்கை அனர்த்தங்களும் ஏற்படும்.

மேல்கொத்மலைத் திட்டத்தின் பின்னால் இருக்கும் ஜப்பானிய ஏகாதிபத்திய அக்கறைகளையும் இலங்கையின் ஆளும்வர்க்கத்தின் முதலாளித்துவ பௌத்த-சிங்கள பேரினவாத அக்கறைகளையும் தோற்கடித்து. அத்திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏகாதிபத்திய சக்திகள் மேல்கொத்மலை போன்ற திட்டங்களை அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பேரில் எம்மீது திணிக்கின்றன. அவற்றை நிராகரித்து எமது நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ற மாற்று மின் சக்தி திட்டங்களை ஏற்படுத்திக் கொள்வோம்.

• • • • • •

# வவுனியாவில் தமிழ் கூட்டமைப்பு எம்.பி.யின் சாதனை

வவுனியாவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் கூட்டமைப்பு எம்.பி. ஒருவர் தனிப்பட்டவர்களின் விவகாரங் களில் அதிகமாகவே தலையிட்டு வருகிறார். அண்மையில் வவுனியாவி லுள்ள ஒரு பாடசாலை அதிபருக்கு கிடைக்கவிருந்த கனேடிய புலமைப்பரிசிலைத் தடுத்து நிறுத்திப் பெரும் சேவை புரிந்துள்ளார்.

கோமாரங்குளம் தமிழ் மகாவித்தியால அதிபருக்கு கனேடிய கல்வி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் கனடா செல்வதற்கு இருந்த வாய்ப்பை இல்லாமல் செய்ததன் மூலம் அந்த தமிழர் கூட்டமைப்பு எம்.பி. வவுனியா மாவட்டக் கல்வி வளர்ச்சிக்கு பெரும் சேவையாற்றியுள்ளார்.

அதாவது அந்த அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும். அவர் கனடாவுக்குச் சென்றால் திரும்பி வரமாட்டாரெனவும் கனேடிய தூதரக விசா அதிகாரிக்கு அந்த எம்.பி. பெட்டிசன் அடித்ததாக கூறப்படுகிறது. அந்த பெட்டிசன் காரணமாகவே அந்த குறிப்பிட்ட அதிபருக்கு கனடா செல்வதற்கான விசா மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதன் பிறகு கல்வியமைச்சின் அதிகாரிகள் கனேடிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு உண்மை நிலைமையை வினவியபோது காலம் பிந்தி விட்டது அதாவது புலமைப்பரிசில் கல்வித்திட்டம் தொடங்கப்பட்டு விட்டது. அந்த அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லையென்றும் அவர் புலமைப் பரிசில் கற்கை நெறி முடிவடைந்த பிறகு இலங்கைக்கு திரும்பி விடுவார் என்றும் கல்வியமைச்சின் அதிகாரிகள் கனேடிய தூதரகத்திற்கு எடுத்துக் கூறியதாக தெரிகிறது. இருந்த போதும் காலம் பிந்திவிட்டதால் புலமைப்பரிசில் கற்கை நெறியில் கலந்து கொள்வதற்காக அந்த அதிபருக்கு கனடாவுக்குச் செல்ல முடியவில்லை.

அந்த குறிப்பிட்ட எம்.பி.க்கு வேண்டிய ஒரு ஆசிரியையின் ஒழுங்கீனங்களுக்கு எதிராக அந்த அதிபர் நடவடிக்கை எடுத்ததற்கு பதிலடியாகவே அந்த எம்.பி. அந்த பெட்டிசனை கனேடிய தூதரகத்திற்கு எழுதியதாக கூறப்படுகின்றது.

இலங்கையிலிருந்து 29 அதிபர்கள் அப்புலமைப்பரிசில் கற்கை நெறியில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். வவுனியா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த அந்த அதிபர் அவரின் வாய்ப்பை இழந்துவிட்டார்.

பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் எத்தனையோ வேலைகள் காத்துக் கிடக்கின்ற போது அதிபரொருவரின் புலமைப்பரிசில் வாய்ப்பை கெடுப்பதுதான் அந்த எம்.பி.யின் வேலையாக மாறிவிட்டதை நினைத்து தமிழ் மக்கள் அழுவதா? சிரிப்பதா?

# நாலு நடக்கும் நற்குணண் உலகிலே

## இப்படியும் ஒரு நட்பு

கைலாசபதி மீது மிகவும் கீழ்தரமான தனிப்பட்ட தாக்குதல்களைத் தொடுக்கிறவர்கள் சிலர் இன்னமும் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சிவத்தம்பி இப்போது மிகவும் இனியவராகியிருக்கிறார். வசதியான போது தனக்குக் கைலாசபதியுடன் இருந்து வந்த நட்புறவு பற்றிப் பேசும் சிவத்தம்பி என்றாவது கைலாசபதியைப் பற்றி அவதூறு எதையும் மறுத்திருக்கிறாரா? தன் மீதான நியாயமான தாக்குதல்களுக்குக் கூட மற்றவர்கட்கு நோக்கந் தேடுகிற சிவத்தம்பிக்கு. கைலாசபதியைக் கண்டபடி தாக்குகிறவர்களுடன் நட்பை இறுக்கமாக்க இயலுவது எப்படி?

கைலாசபதி மீதான வசை மொழிகள் பற்றிச் சிவத்தம்பிக்கு உள்ளூர மன மகிழ்ச்சி என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

## சோழியன் குடுமி

டி.பி.சிவராம் "நோத் ஈஸ்ற் ஃபுரன்ற்றியர்" என்ற விடுதலைப் புலிகள் சார்பான வார ஏட்டிலிருந்து கழன்று அல்லது கழற்றப்பட்டு விட்டார். இதற்கு அவர் விடுதலைப் புலிகளின் 'உள் அரசியலில்' குறுக்கிட முயன்றது ஒரு காரணம் என்று சொல்லப்படுகின்றது. வீரகேசரியில் அவர் இப்போது அமைதிப் பேச்சுவார்த்தைகளில் அவநம்பிக்கையோடும் அமெரிக்க நோக்கங்கள் பற்றிய கடுமையான நோக்குடனும் எழுதி வருகிறார். இவற்றிற் பல நாம் போன முறை சுட்டிக் காட்டியது போல புதிய ஜனநாயகக் கட்சி எப்போதோ எச்சரித்த விடயந்தான்.

ஆனாலுங் கவனிக்க வேண்டிய ஒரு விடயமும் உண்டு. இந்திய அரசாங்கத்தின் விஷமத்தனம் பற்றி அவர் மிகவும் அடக்கி வாசிக்கிறார். இது வீரகேசரிக்கு அவர் எழுதுவதாலா. அல்லது வேறு காரணத்தாலா?

சோழியன் குடுமி சும்மா ஆடுமா? இது பழமொழி.

## சிஹல உறுமல்கள்

இலங்கைக்கு 'உதவி' வழங்கும் நாடுகள் உதவ முன்வந்துள்ள நாற்பத்தையாயிரங் கோடி ரூபாவில் 97சதவீதம் கடன் என்பதும் அது கூட நிபந்தனைக்குட்பட்டது என்பதிலும் இரகசியமில்லை.

பொருளாதார நெருக்கடியில் உள்ள ஜப்பானின் தாராளமான மனநிலையில் மர்மம் எதுவும் இல்லை.

ஏகாதிபத்திய நாடுகளோ மேலாதிக்க வல்லரசுகளோ யாருக்கும் நல்ல நோக்கத்துக்காக உதவுவதில்லை. இந்த உண்மை சிஹல உறுமய தலைவர்கட்கு விளங்கியிருப்பது மகிழ்வுக்குரியது. அமைதியின் பேரில் இந்த நாடு மேலும் கடனாளியாவது பற்றிய அவர்களது கவலை பற்றி நாம் பாராட்டாமலிருக்க முடியுமா? ஆனாலும் இதே கடனுதவி போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தால் சிஹல உறுமயவின் நிலைப்பாடு என்னவாக இருந்திருக்கும்?

இந்த நாட்டைப் பெரிய கடனாளியாக்கியதே பேரினவாதப் போர் தான். அந்தக் கடனை அவர்கள் ஏன் கண்டிக்கவில்லை. இவை பற்றி யோசிக்கும் போது சிஹல உறுமயவின் தலைமையின் சித்த சுவாதீனம் பற்றியும் யோசிக்க வேண்டியுள்ளது.

## எல்லார்க்கும் சொல்லுமாம் பல்லி

பகவான்(?) சத்திய சாயி பாபா தடுக்கி விழுந்த செய்தியை நமது ஏடுகள் அதிகம் பிரபலப்படுத்தவில்லை. பத்து ஆண்டுகள் முன்பு சாயிபாபாவின் நிறுவன அலுவலகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் விசாரணையில்லாமல் அமுக்கப்பட்டு விட்டது. சூட்டுச் சத்தங் கேட்டு 'பகவான்' பதறி ஓடின கதையும் நமது ஏடுகளில் வரவில்லை. அதற்குத் தான் பேர் பக்தி!

இந்தப் பகவானுக்குத் தான் தடுக்கி விழப் போகிற விடயமே தெரியாது. ஆனால் பக்தர்களுக்கெல்லாம் எதிர்காலப் பலன் சொல்லுகிறாரே அது எப்படி?

"எல்லார்க்கும் சொல்லுமாம் பல்லி - காடிப்பானைக்குள்ளே விழும் துள்ளி" என்று கேள்விப்பட்டிருப்பீர்கள்.

## மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் ஏதோ!

சதாம் ஹூஸைன் ஒழித்து வைத்திருந்த பேரழிவு ஆயுதங்களை இன்னமும் அமெரிக்கப் பிரித்தானியப் படையினரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவை சிரியாவுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக அவிழ்த்துவிட்ட புலுடாவும் எடுபடவில்லை. இப்போது அமெரிக்காவின் கொயபெல்ஸ் என்ற கீர்த்தியைப் பெற்றுள்ள றம்ஸ்ஃபெல்ட் விரைவில் அவை கண்டுபிடிக்கப்படும் என்று உறுதி கூறியுள்ளார்.

அவற்றை அமெரிக்காவிலிருந்து அவர்கள் கொண்டு போய் யாருமறியாமல் பதுக்கி வைக்கும் வரை யாவரும் பொறுமையாக இருங்கள்.

திருநீலகண்ட நாயனாரிடம் சிவபெருமான் துறவி வேடத்தில் வந்து அவரிடம் கொடுத்து வைத்த திருவோடு சிவபெருமானின் திருவிளையாடலால் மறைவாகி விட்டதும். திரும்பி வந்த சிவபெருமான். தொண்டரைக் கடுமையான பகிடி வதைக்கு உட்படுத்திப் பிறகு ஓட்டை எடுத்துக் கொடுத்ததும் பெரிய புராணத்தில் உள்ள கதை. இப்போது நடக்கிறது இன்னொரு புராணக் கதை.

## அரசாங்கக் கருணை வெள்ளம்

வெள்ளத்தாற் பாதிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகட்கு 4.6 கோடி ரூபா நஷ்டஈடு வழங்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வெள்ளத்தாற் பாதிக்கப்பட்ட வேறெவருக்கும் போகாவிட்டாலும் இந்த முதலாளிமாருக்கு நிச்சயமாக நிதியுதவி போய்ச் சேரும். அதுதான் அரசாங்கத்தின் கருணை வெள்ளம் பாயும் திசை. வெள்ளத்தால் எத்தனையோ நாட்கள் வேலை இழந்தவர்கட்கும் இன்னமும் முழு நேர வேலைவாய்ப்பு இல்லாமல் தவிப்பவர்கட்கும் என்ன நஷ்டஈடு தரப்படும்? எப்போதாவது அது பற்றி அரசாங்கம் கவலைப்படுமா?

தேர்தல் மூலம் யார் யாரைப் பதவியில் அமர்த்தினாலும் அரசாங்கம் யாருடையதோ அவர்களுக்குத் தானே உதவிகள் கிட்டும்!

படிப்பகம்

www.padippakam.com



# ஆனந்தசங்கரியை அகற்ற கடும் முயற்சி!

தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகள் பூதாகரமானவை என்பது எவரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அரசியல். சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் தொட்டு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் வரை அளந்து கொள்ள முடியாத அளவுக்கு அவை வளர்ந்து காணப்படுகின்றன. இவற்றுக்கான மாற்றுத் தீர்வுகள் ஆக அடிமட்டத்திலிருந்தே கடுமையான சவால்களுக்கு ஊடாகத் தேட வேண்டி உள்ளது. ஆனால் தங்களை மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இவை பற்றிய எவ்வித அக்கறைகளோ திட்ட யோசனைகளோ அவர்களிடம் கிடையாது.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே கிடைத்த பதவிகளை எப்படித் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதிலும் அடுத்த தேர்தல் வந்தால் மீண்டும் நின்று வெல்ல என்னென்ன உத்திகளைக் கையாளலாம் என்பதிலேயே முழுக் கவனமும் இருந்து வருகின்றது.

இப்போது கூட்டணிக்குள்ளும் கூட்டமைப்பிலும் உள்ள முக்கிய பிரச்சினை கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியை எவ்வாறு கையாள்வது பற்றியதேயாகும். அவர் ஏற்கனவே புலிகளுடன் முரண்பட்டுக் கொண்டதால் ஒதுக்கப்பட்டுள்ளார். அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட கைவிட வேண்டும் என்ற அளவுக்கு விடயம் முற்றிப் போய்விட்டது. இதனால் ஆனந்தசங்கரியார் மிக மனமுடைந்த நிலையில் இருந்து வருகிறார். கூட்டணிக்குள் உள்ளவர்களே தனக்குக் குழி பறிக்க நிற்பது தான் அவருக்கு வேதனையாம். அதுவும் தானே முன்னின்று கடந்த தேர்தலில் வேட்பாளராக்கிய சிலர் இப்போது பா.உ.ஆகி தனக்கு எதிராக செயற்பட்டு வருவதைக்காணும் போது சங்கரியாருக்கு துக்கம் தாங்க முடியவில்லையாம். அதேவேளை கூட்டமைப்பில் உள்ள சில கட்சிகளின் பிரமுகர்கள் தமது முன்னைய புலி எதிர்ப்பு கர்ண கடூர நிலைப்பாட்டைக் கைவிட்டு புலிகளைப் புகழ்ந்துரைப்பதில் முன்னின்று வருகிறார்கள். இது தமிழ் மக்கள் மீது கொண்ட பாசமோ புலிகள் மீது ஏற்பட்ட பற்றோ அல்ல. அடுத்த தேர்தலில் எம்.பி. ஆகிவிட வேண்டும் என்ற நப்பாசையில் தான் என்றே கூட்டமைப்பு வட்டாரங்களில் பேசப்படுகிறது. பாராளுமன்ற ஆசனங்களில் சுகம் கண்டு அவற்றை அனுபவித்து வந்த தமிழர் தலைமைகளின் பாரம்பரியம் என்றுமே அதற்கு அப்பால் செல்ல முடியாது என்ற உண்மையைத்தான் கூட்டணி. கூட்டமைப்பு கட்சிகளின் நிலைப்பாடு துலக்கமாக எடுத்துரைக்கிறது.

# தனியார் மயத்தால் கப்பற் தொழிற்துறை பாரிய நெருக்கடி

கொழும்புத் துறைமுகத்திற்கு வருடந்தோறும் 3.800 கப்பல்கள் வருகின்றன. முன்பு கப்பல்களுக்கு எரிபொருளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் உப கம்பனியான லங்கா மறைன் சேர்விசஸ் வழங்கி வந்தது.

இப்போது லங்கா மறைன் சேர்விசஸ் தனியார்மயப்படுத்தப்பட்டு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டிடம் கையளிக்கப்பட்ட பின் குதப்படுத்தப்பட்ட எண்ணெயின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது.

தொன் ஒன்று சிங்கப்பூரில் 180 அமெரிக்க டொலராகவும் புஜிராவில் 166-1/2 அமெரிக்க டொலராகவும் அதேவேளை கொழும்பில் 240 அமெரிக்க டொலராகவும் உள்ளது. இதனால் கப்பற் தொழிற்துறையினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இது தொடர்பாக பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

தனியார் மயப்படுத்தலின் குதப்படுத்தப்பட்ட எண்ணெயின் கொழும்பு விலை தொன் ஒன்றிற்கு 200 அமெரிக்க டொலராகவிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்பு காஸ் கொம்பனியை ஷெல் கம்பனிக்கும். லங்கா லுப்றிக்கன்ஸ் லிமிட்டட்டிற்கும் கையளித்த பின் எரிவாயுவின் விலைகள் பல மடங்கு அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

உலக வங்கியின் கட்டளைப்படி இலாபத்தில் இயங்கும் ஸ்தாபனங்களையும் தனியார்மயப்படுத்தி இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மிக்க வளங்கள் யாவும் படிப்படியாக அன்னிய சக்திகளின் கைகளிற்குச் செல்கின்றன.

இவ்வாறு யாவும் தனியார்மயமாகும் போது நமது நாட்டில் எஞ்சி இருக்கப் போவது என்ன. பாராளுமன்றக் கட்டிடமும். அலரி மாளிகையும். ஜனாதிபதி மாளிகையும் மட்டும் தானா? அல்லது அவையும் தனியாரின் கைகளில் ஒப்படைக்கப்படுமா?

●

# காங்கேசன் ஊழியர்களுக்கு அநீதி

காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தித் தொழிற்சாலையின் அவலநிலை யாவரும் அறிந்ததே. அதன் தற்போதைய 154 ஊழியர்கள் ஏப்ரல் 22ஆம் திகதி கிடைத்த கடிதத்தின்படி ஒரு மாதத்தில் வேலை நீக்கம் பெறுகின்றீர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தை இன்றைய அரசாங்கத்தினால் சீமெந்து கூட்டுத்தாபனத் தலைவராக நியமிக்கப்பட்ட முன்னாள் தோட்டத் துரையே எழுதியுள்ளார். ஆனால் அக் கடிதம் மே மாதம் 22ஆம் திகதி அளவிலேயே ஊழியர்களின் கைகளுக்கு கிடைத்துள்ளது.

மேற்படி கடிதத்தின்படி சுயமாக வேலையை விட்டு நீங்கும் ஊழியர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவாக மூன்று லட்சம் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கனவே அரசாங்கம் சுயமாக வேலையை விட்டு நீங்குவோருக்கு அவர்களது சேவை. தரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து லட்சம் ரூபாவிற்கு மேல் வழங்கி வருகின்றது. ஆனால் அந்த நடைமுறை காங்கேசன் சீமெந்து ஊழியர்களுக்கு மறுக்கப்பட்டு தலைவரின் தான் தோன்றித் தனமான முடிவின்படி மூன்று லட்சத்தை மட்டுமே கொடுத்து. ஊழியர்களைத் துரத்துவதற்கு முன் நிற்கின்றார். இது ஒரு பெரும் அநீதி மட்டுமன்றி தமிழ் ஊழியர்கள் என்ற பேரினவாத நிலைப்பாட்டையும் கொண்டதாகும்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அமைச்சின் கீழ் வரும் காங்கேசன் சீமெந்து ஊழியர்களுக்கு குறைந்த நஷ்ட ஈடு வழங்க முன் நிற்கும் இக் கூட்டுத் தாபனத் தலைவர் பயன்படுத்தும் ஆடம்பர வாகனத்திற்கு மாதம் ஒரு லட்சம் ரூபா வாடகை செலுத்துவதாக அறிய முடிகிறது. அவ்வாறே ஒரு இயக்குனரின் வாகனத்திற்கு ரூபா நாற்பதினாயிரம் வாடகை செலுத்தப்படுகிறது என்றும் அறிய முடிகிறது. ஊழியர்களுக்கு கை விரிப்பு உயர் அதிகாரிகள் உல்லாச அனுபவிப்பு. இதனை அரசியல் ரீதியாக ஊழியர்கள் உணராத வரை விமோசனம் இல்லை.

# பிரித்தானியா கம்பனிகளை மூடுவதிலும் முதலிடம்

பிரித்தானியாவில் சூரியன் அஸ்தமிக்காது என திமிர்த்தனமாக கூறிய காலமுண்டு. உலகில் முதலாவதாக கைத்தொழில் மய்மான நாடு என்ற பெருமையுடையது. முதலாவதாகத் தான் கைப்பற்றிய குடியேற்ற நாடான அயர்லாந்திற்கு இன்றும் சுதந்திரம் வழங்காத பெருமை அதற்குண்டு. தனது பண்டங்களைச் சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக சுதந்திர வர்த்தகம் பற்றிப் பேசி பின்னர் ஏனைய நாடுகளுடன் சந்தைக்காகப் போட்டியிட்டபோது தீர்வைகள். கட்டுப்பாடுகள் என்பவற்றைப் புகுத்தியதும் இதே பிரித்தானியா தான். முதலாளித்துவ பாராளுமன்ற முறையைப் புகுத்தியதும். உலகிலேயே முதற் தடவையாகப் பொலிஸ் படையைத் தோற்றுவித்தும் முதலாளித்துவ அமைப்பு முறையை இறுக்கிக் கொள்வதில் பிரித்தானியா முன்நின்றது.

முதலாளித்துவ மூலதனத்தால். சுரண்டல் அமைப்பு முறையால் சுபீட்சம் கிடைக்கும் எனவும் கட்டுக் கதைகள் பரப்பப்பட்டன. தனியார் மூலதனமும் அதற்கான கம்பனிகளும் உற்பத்தியைப் பெருக்கி வேலை இன்மையை இல்லா தொழிக்கும் எனக் கூறப்பட்டது. இன்றும் இந்த வாய்ப்பாட்டை மீண்டும் மீண்டும் உரத்துக் கூறச் சிலர் மறப்பதில்லை.

இத்தகைய சூழலிலேயே பிரித்தானியாவில் கம்பனிகள் இழுத்து மூடப்பட்டு வருவது பற்றிக் கூற வேண்டும். 2000ஆம் ஆண்டின் இறுதியளவில் அந்த நாட்டில் நாற்பது இலட்சம் கம்பனிகள் பதிவாகியிருந்தன. வருடந்தோறும் இரண்டு இலட்சம் கம்பனிகள் பதிவாகின்றன. பதிவு செய்யப்பட்ட 40 இலட்சத்தில் 2000ஆம் ஆண்டளவில் இயங்கிக் கொண்டிருந்த கம்பனிகளின் எண்ணிக்கை பதின்மூன்று இலட்சம் மட்டுமே. மிகுதி இருபத்தியேழு இலட்சம் கம்பனிகள் மூடுவிழா கண்டு விட்டன. இயங்கும் 13 இலட்சம் கம்பனிகளில் பதினான்காயிரம் (14.000) கம்பனிகள் மட்டுமே கம்பனிச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பொதுக் கம்பனிகளாய் உள்ளன. அதாவது ஒரு சதவீதமான கம்பனிகளே பொதுக்கம்பனிகள்.

மேற்கூறிய புள்ளிவிவரங்களை பட்டயக் கணக்காளரான கியூ விலியம்ஸ் தனது நூல் ஒன்றிற்கான முகவுரையை 2001ஆம் ஆண்டு யூன் மாதத்தில் எழுதியபோது குறிப்பிட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட கம்பனிகளில் 27 இலட்சம் கம்பனிகள் இயங்காமற் போனதற்கு என்ன காரணம் என்பதை முதலாளித்துவ அமைப்பில் வர்த்தகர்கள் ஓகோவென்றிருப்பார்கள் எனப் பல்லவி பாடுபவர்கள் விளக்குவார்களா?

- சிறீ -

# கைதிகளுக்கு விடுதலை இல்லை

## காணாமல் போனோருக்கு பதில் இல்லை

பத்தொன்பது வருட கோர யுத்தத்தின் விளைவால் அன்றாட வாழ்வில் உடல். உள வேதனையால் பாதிக்கப்பட்டவர்களில் இன்றும் மீள முடியாது உள்ளவர்கள் இரு பிரிவினர். ஒரு பகுதியினர் தமிழ் அரசியல் கைதிகள். மற்றப் பிரிவினர் காணாமல் போனோரின் பெற்றோர். மனைவிமார். பிள்ளைகள். உறவினர். புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்து யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருந்தும் இன்றுவரை இவர்களுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் எத்தனையோ தடவைகள் உண்ணாவிரதம் இருந்தும் வெறும் வாக்குறுதிகள் மட்டுமே கிடைத்தன. அவ்வாறே காணாமல் போனோரின் பெற்றோர். உறவினர் எத்தனையோ வகையில் முயன்றும். போராட்டங்கள் நடாத்தியும் உரிய பதில் கிடைக்கவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான இன்றைய சமாதான சூழலில் புலிகள் தென்னிலங்கையின் அடிக்கிராமங்கள் வரை சென்று உறவாடிச் செல்கிறார்கள். ஆனால். புலிச் சந்தேகநபர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் அதே தென்னிலங்கைச் சிறைகளில் இன்றும் விடுதலையின்றி அடைக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளனர். இது என்ன நீதி. எத்தகைய நியாயம். எனவே. இவ்விரு பகுதியினரின் வாழ்வுப் பிரச்சினைக்கு உரிய பதிலும் பரிகாரமும் காணப்பட வேண்டும் என்பதைப் 'புதியபூமி' வலியுறுத்துகிறது.

# தேயிலைத் தொழிற்சாலைகளையும் விட்டு வைப்பதாய் இல்லை

தேயிலைத் தொழிற்சாலைகளை உடைத்து அவற்றின் கட்டிடப் பொருட்களையும் தொழிற்சாலை இயந்திரங்களையும் தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் விற்பனை செய்து வருகின்றன. தேயிலைத் தோட்டங்களுக்கு எவ்வித முதலீடும் செய்யாமல் லாபம் சம்பாதிப்பதுடன் அங்கிருக்கும் மரங்களையும் ஏனைய பொருட்களையும் விற்று வந்தன.

தற்போது தொழிற்சாலைப் பொருட்களையும் விற்கத் தொடங்கி விட்டன. தொழிற்சாலைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். சில இடங்களில் அவ் விற்பனைகளை தொழிலாளர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இராகலை ஸ்டெப்பேர்ட் தோட்டத்தில் தொழிற்சாலைப் பொருட்களை விற்பனை செய்யத் தோட்ட அதிகாரி எடுத்த முயற்சியை தொழிலாளர்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர். எதிர்ப்பைக் காட்டிய தொழிலாளர்களில் சிலர தோட்ட அதிகாரியால் தாக்கப்பட்டுள்ளனர். அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தோட்ட அதிகாரிக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட் டுள்ளது.

பெருந்தோட்டப் பொருளாதாரம் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு வருகிறது. தோட்ட தொழிற்சாலைகளை மூடுவதும். தொழிற்சாலைகளை உடைத்து. தொழிற்சாலைப் பொருட்களை விற்பனை செய்வதும் பெருந்தோட்டப் பொருளா தாரத்தைச் சீரழிப்பதற்கான நடவடிக்கைகளே ஆகும். அந்த அடிப்படையிலேயே தொழிலாளர்கள் தொழிற்சாலைப் பொருட்களை விற்பதற்கு எதிராகப் போராடி வருகின்றனர். பெருந்தோட்டப் பொருளாதாரம் சீரழிக்கப்படுவதனால் பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வர்க்க ரீதியாக பாதிக்கப்படுவதுடன். மலையகத் தமிழ் மக்கள் என்ற தேசிய இனத்தின் பொருளாதார அடிப்படைகள் தகர்க்கப்பட்டு இனரீதியான பாதிப்பும் ஏற்படும்.

# ஜீ8 உச்சி மாநாடும் வறிய நாடுகளும்

உலகின் செல்வந்த நாடுகளின் அரசுத் தலைவர்கள் சென்ற மாதம் பிரான்சில் மிகவும் பாதுகாப்புடன் கூடிய. ஈவியனில் உச்சி மாநாட்டை நடாத்தியது.

பிரிட்டன். கனடா. பிரான்ஸ். ஜேர்மனி. இத்தாலி. யப்பான். அமெரிக்கா. ரஷ்யா ஆகிய எட்டு செல்வந்த நாடுகளையே ஜீ 8 என அழைக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான உலகமயமாதலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் பிரான்ஸ். சுவிஸ் எல்லையில் மிகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தினர். 15.000 பிரான்ஸிய ஆயுதப்படையினரும். 10.000 சுவிற்சிலாந்து ஆயுதப் படைகளும். சில விமானங்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தன. இரண்டு வருடங்களுக்குமுன் ஜெனோவா உச்சி மாநாட்டின் போது ஏற்பட்ட பயங்கர மோதலை ஒத்த மோதலைத் தடுப்பதற்கே இந்த ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யப்பட்டன. இது மட்டுமல்ல மாநாடு இடம்பெறும் மண்டபத்திற்கு அப்பால் முப்பது கிலோமீற்றர் (அதாவது 18 மைல்) தூரத்திலேயே பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு மாநாட்டு மண்டபம் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க. வறிய நாடுகளின் உச்சி மாநாடொன்றும் மாலியில் இடம்பெற்றது. இசையுடனும் பாரம்பரிய வேடுவரின் அணிவகுப்புடனும் வறிய நாடுகளின் உச்சி மாநாடு ஆரம்பமானது. மாநாட்டிற்கான பிரதிநிதிகளில் ஒருவரான பரி அமினாற்றா ரூறே "ஜீ8 உச்சி மாநாடு எமது எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியாது. நாங்களே எமக்கு என்ன தேவையென்பதைத் தீர்மானிக்க வேண்டும்" என்றார். நைஜீரியாவைச் சேர்ந்த அபூக்கர் இசா கூறுகையில். "நாம் செலுத்தும் கடனிலிருந்து எம்மால் என்றுமே மீள முடியாது" என்றார். உலகின் மிகவும் மோசமான வறிய மக்களில் எழுபது வீதமானோர் ஆபிரிக்காவில் உள்ளனர். சுமார் நானூறு பிரதிநிதிகள் மாலி மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பிறேசில் நாட்டின் ஜனாதிபதியான லூலா டீ சில்வா உலகளாவிய பட்டினிக்கு எதிராக ஒரு நிதியம் ஏற்படுத்த வேண்டுமென ஜீ 8 மாநாட்டில் தெரிவித்தார். வளர்முக நாடுகளின் சில குறிப்பிட்ட நாடுகள் குறித்த ஜீ8 மாநட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உலக உற்பத்தியில் அரைவாசியை குறித்த ஜீ 8 நாடுகள் உற்பத்தி செய்கின்றன என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

வறுமைக்கு எதிரான நிதியத்திற்கு குறித்த செல்வந்த நாடுகளின் ஆயுத விற்பனைக்கு ஒரு வரி போட்டு நிதியைச் சேகரிக்கலாம் என பிறேசில் நாட்டு ஜனாதிபதி லூலா டீ சில்வா மாநாட்டில் தெரிவித்தார். கைத்தொழில்மயமான நாடுகளின் நலன்களுக்காகவாவது வளர்முகநாடுகளின் வளர்ச்சியில் உதவி செய்வது அவற்றின் பண்டங்களுக்கு சந்தையை வலுப்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

– பொருளியல் நிருபர் –

படிப்பகம்

www.padippakam.com



# உதவுங் கரங்கள்:
## போரிலுங் கொள்ளை. தீர்விலுங் கொள்ளை!

இலங்கைக்கு மட்டுமல்ல எந்த நாட்டுக்கும் வழங்கப்படும் அயல் உதவியும் உண்மையில் 'உதவி பெறும்' நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் உதவியல்ல. அது 'உதவி வழங்கும்' நாடுகளின் முதலாளிமாருக்குச் செய்யப்படுகிற உதவி மட்டுமே.

சீனாவும் சோவியத் யூனியனும் உண்மையான சோசலிச நிலைப்பாட்டில் நின்ற ஒரு காலத்தில். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரிலும் ஏகாதிபத்திய இருப்புப் பிடியினின்று முன்னாள் கொலனிகள் தமது பொருளாதாரத்தை மீட்கும் நோக்கிலும் வழங்கிய உதவிகள் முக்கியமான விலக்குக்கள். இவை பெருமளவும் நிபந்தனையற்ற உதவிகளாகவும் உதவி பெறும் நாடுகளின் தேவைகளின் அடிப்படையிலும் நன்கொடையாகவோ மிகக் குறைந்த வட்டியுடன் அல்லது வட்டியில்லாமல் நீண்ட காலத்தின் பின்பு மீளச் செலுத்தக் கூடியவிதமாகவோ வழங்கப்பட்டவை. சில சர்வதேச அரசியல் நிலவரங்களில் மேலாதிக்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்ட நாடுகள் கூடிய உதவி பெற்றுள்ளன. எப்படிப் பாந்த்தாலும். மனிதாபிமான உதவி உட்பட. எல்லா அயல் உதவியிலும் அரசியல் நோக்கமும் பொருளாதார நோக்கமும் உள்ளது.

நாம் கவனிக்க வேண்டியன எவையென்றால். அரசியல் நோக்கம் எப்படியானது. அது நிறைவேறுவதால் யாருக்கு நன்மை என்பது பொருளாதார நோக்கங்களின் நீண்டகால இலக்கு என்ன என்பதுமே.

ஏன் இலங்கையின் பொருளாதாரம் சீரழிந்தது என்பதற்கு நாட்டின் ஆளும் வர்க்கத்தின் கையாலாகாத்தனமும் சுயநலமும் முக்கியமான காரணம். அவர்களது குறைபாடுகள் தனியே பொருளாதார நலிவை உருவாக்கவில்லை. இன்னும் பல நாடுகளிற் போல இங்கும் ஏகாதிபத்தியம் பல வகைகளிலும் நமது மக்களின் உழைப்பையும் மூல வளங்களையும் மலிவு விலையிற் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. இந்தச் சூறையாடல் இப்போது மேலும் தீவிரமாகி விட்டது.

ஏகாதிபத்தியத்தின் சூறையாடல் ஒரு நாட்டில் தொடர்வதற்கு. அதற்குச் சாதகமான ஒரு அரசியல் அதிகாரம் தேவை. சூறையாடலைத் தட்டிக் கேட்கும் சக்திகளும் மாற்று அரசியல் அதிகாரத்தை ஏற்படுத்தவல்ல போராட்டச் சக்திகளும் ஒடுக்கப்படுவதும் தேவை. எனவே ஏகாதிபத்தியம் தன் கொள்ளையடிப்பைத் தொடருகிற அதேவேளை. தனக்கு உடந்தையான ஆட்சியும் ஆட்சிமுறையும் கவிழாமலும் கவனித்துக் கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உதவி பல வேறு வடிவங்களில் வழங்கப்படுகிறது. அரசாங்கங்கள் நேரடியாக வழங்கும் இராணுவ உதவி. இங்கும் இராணுவத் தொழில் நுட்பமும் ஆயுதங்களும் உண்மையில் இலவசமாக வழங்கப்படுவதில்லை. இவற்றுக்கான விலையைக் கடன் என்ற பேரிலோ வேறு வகையிலோ செலுத்த வேண்டியே வருகிறது. வேறு உதவிகள் சுரண்டப்படும் நாடுகளின் பொருளாதாரம் சுரண்டும் நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலையை உருவாக்கும் நோக்கில் பல்வேறு நிபந்தனைகட்குட்பட்டு வழங்கப்படுகின்றன.

**- இமயவரம்பன் -**

உடனடியான அரசியல். பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ள வலிமையற்ற அரசுகள் விரும்பியும் விரும்பாமலும் இந்த உதவி என்கிற பொறிக்குள் அகப்பட்டுக் கொள்கின்றன. இதன் ஒட்டுமொத்தமான விளைவு. நாடு மேலுங் கடனாளியாவதும் தேசிய உற்பத்தியிற் பெரும் பகுதி வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தவே பயன்படுவதும் தான்.

1977ல் யூஎன்.பி. அதிகாரத்திற்கு வந்தது. யூஎன்.பி.யின் வர்க்க அடையாளம் தரகு முதலாளியம் என்பதும் இந்த நாட்டை அயலாருக்குக் கீழ்படுத்தி அதன் மூலம் தமது செல்வத்தையும் அதிகாரத்தையும் பேணலாம் என்பது தான் அதன் எதிர்பார்ப்பு என்பதிலும் எவருக்கும் இருந்திருக்கக்கூடிய ஐயங்கள் எல்லாம் 1978இல் அறிவிக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் மறைந்திருக்க வேண்டும்.

இந்த நாட்டை நிரந்தரமாகவே ஏகாதிபத்தியத்தின் அடிமையாக வைத்திருக்கும் நோக்கிலேயே பேரினவாதக் கொள்கையும் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு எதிரான பாரபட்சமும் வெளிவெளியான இராணுவ ஒடுக்குமுறையாகவும் போராகவும் மாற்றப்பட்டன. இதன் மூலம் நாட்டின் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்தும் அரசியல் நெருக்கடியிலிருந்தும் கவனம் திசை திருப்பப்பட்டது. இதன் விளைவாக இந்த நாட்டின் அரசியல் அதிகாரம் ஏகாதிபத்திய நலன்களுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டது. இந்தப் பிடியிலிருந்து யூஎன்.பி.க்கு மாற்றாக இருந்து வந்த தேசிய முதலாளியக் கட்சியும் அதன் 'இடதுசாரிக்' கூட்டாளிகளும் விடுபட்டமை அந்த முயற்சியின் பெரும் வெற்றி என்பதில் நமக்கு ஐயம் இல்லை.

1983இல் பேரினவாத இன ஒழிப்புப் போர் எழுவதற்கு முன்னமே இலங்கை அரசுக்கான ஏகாதிபத்திய இராணுவ ஆதரவுக்கான உத்தரவாதங்கள் பெறும் காரியங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாகவே பிராந்திய மேலாதிக்க நோக்கமுடைய இந்தியா இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் மறைமுகமான குறுக்கீட்டை 1978க்குப் பின்னர் துணிவுடன் மேற்கொண்டது.

1983 முதல் 2001 வரை அமெரிக்கா நேரடியாகவும் இஸ்ரேல் மூலமும் இலங்கை அரசின் இன ஒழிப்புப் போருக்குப் பெருமளவிலான உதவி வழங்கிவந்துள்ளது. அந்த அமெரிக்கா இன்னமும் தனது இராணுவ 'உதவிகளைத்' தொடர்ந்தும் வழங்கிக் கொண்டே இருக்கிறது. இப்போது சமாதான முயற்சிகளின் பாதுகாவலனாகத் தன்னைக் காட்டிக் கொண்டு விடுதலைப்புலிகளை இடையிடையே மிரட்டி அறிக்கை விடுத்தும் பிற வழிகளிலும் அரசாங்கத்துடன் இணங்கிப் போகும்படி நெருக்குவாரம் செலுத்துகிறது.

தொடர்ச்சி 4ம் பக்கம்.

# படுகொலைகளும் மக்கள் பீதியும்

நாடு முழுவதிலும் படுகொலைகள் சர்வசாதாரணமாகி விட்டன. இப்படு கொலைக் கலாசாரத்தின் சமூக வேர்கள் விரித்து ஆராய வேண்டியவைகளாகும். நாம் இங்கே நோக்கி நிற்பது வடக்கு கிழக்கில் தொடரப்படும் கொலைகளையேயாகும். தேசிய விடுதலைக்கு என தமிழ் இளைஞர் இயக்கங்கள் தொடங்கப் பட்ட நாட்களில் இருந்தே இப்படு கொலைகள் ஆரம்பித்து விட்டன. துரோகி. சமூக விரோதி. காட்டிக் கொடுப்பவன். உளவாளி. அந்நிய கைக்கூலி. மாற்று இயக்கத்தவன் போன்ற பெயர்களில் படுகொலைகளுக்கு உள்ளாகியோரின் தொகை மதிப்பிடப்பட்டால் சில ஆயிரங்களைத் தாண்டி நிற்கும் என்பது நிச்சயமானது. சிலருக்கு இது பழைய கதையாகிக் கொள்ளலாம். ஆனால் தமது குடும்பத்தவர்களை. உறவுகளை. உற்றார். நண்பர்களை இழந்து கொண்டவர்களின் நெஞ்சங்களில் இருந்து அக்கொலைகளின் தாக்கங்களையும் அதன் விளைவுகளையும் மறந்து விட முடியாது. சிறுபராயத்தைத் தாண்டி சுய சிந்திப்பிற்குள் இறங்கும் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தனது தந்தை. தாய். சகோதரர். உறவினர் ஒரு தமிழ் இயக்கத்தால் படுகொலை செய்யப்பட்டவர் என்பதைத் தெரிந்து கொள்ளும் கணத்தில் அவர்களது உள்ளமும் சிந்தனையும் எத்தகைய தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகும் என்பதை எந்தத் தமிழ் இயக்கத்தவராவது சிந்தித்துப் பார்க்கிறார்களா என்ற வினா மிகமிக முக்கியமானதாகும்.

சரி இவை யாவும் கடந்த காலத்திற்குரியது என்று எடுத்துக் கொண்டால் இன்றைய சமாதான சூழலில் இடம்பெற்று வரும் படுகொலைகளை எவ்வாறு அர்த்தம் கொள்வது. பழையதன் தொடர்ச்சி என்பதா? அல்லது புதியதன் ஆரம்பம் என்பதா? புரிந்துணர்வு ஒப்பந்தம். யுத்த நிறுத்தம். சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்பு என்பன மத்தியில் ஒரு புதிய நிலைமை வந்து விட்டது. ஒரு பழைய கறைபடிந்த காட்சிகள் மீளவும் அரங்கேறமாட்டாது என்றே மக்கள் நம்பிக் கொண்டனர். ஆனால் மக்களது அந்நம்பிக்கை சிதறடிக்கப்பட்டதுடன் பயப்பீதி கௌவிக் கொள்ளவும் செய்தது.

வடக்கு கிழக்கில். கொழும்பில் அடையாளம் காண முடியாத அளவுக்கு இடம்பெற்று வரும் கொலைகளால் தமிழ் மக்கள் அச்சமடைவதும் அவநம்பிக்கை கொள்வதும் சாராம்சத்தில் மக்களின் மனோதிடத்தை நிலைகுலையச் செய்யவே செய்யும். இது பேரினவாதம். அமெரிக்க மேலாதிக்கம். இந்திய பிராந்திய மேலாதிக்கம் என்பன ஒரே நேர்க்கோட்டில் கைகோர்த்து நிற்கும் இவ்வேளை ஒன்றுபட்டு நின்று அதற்கு முகம் கொடுக்க வேண்டிய தமிழ் மக்களின் உறுதிப்பாட்டை சீர்குலைக்கவே செய்யும். ஐக்கியம் சரியான அரசியல் நிலைப்பாட்டாலும் அதனை முன்னெடுத்துச் செல்லும் உரிய தந்திரோபாயத்தாலும் மட்டுமே மக்கள் மத்தியில் சாத்தியமாக்க முடியும். பதிலுக்கு படுகொர்லைகள் பழிவாங்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டால் எதிரிகளின் கைகளைப் பலப்படுத்துவதாகவே அமைந்து விடும். இன்றைய சமாதான நெருக்கடிச் சூழலில் இது பலமான சிந்தனைக்குரிய தொன்றாகும்.

**- கிருஷ்ணன் -**

### புதிய பூமிக்கு கடிதம்

# இனப்பிரச்சினையில் லாபமடையும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லையாம்

தோழமையுள்ள புதியபூமி ஆசிரியருக்கு

'ஏதோ ஆதாயம் பெறத்தான் அமெரிக்கா இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் அக்கறை காட்டுகிறது என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அந்நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லை என்பதே எனது துணிவாகும். இவ்வாறு அமெரிக்காவில் வாழும் இலங்கைத் தமிழரான கே.சிவப்பிரகாசம் என்பவர் கூறினார். அவர் கொழும்பு தமிழ் சங்கத்தில் இடம்பெற்ற ஒன்று கூடலில் கலந்து கொண்டு பேசும்போது தெரிவித்தார்.

வியற்நாம் முதல் ஈரான் வரை அமெரிக்கா எதற்காக தலையிட்டது என்பது சிறுகுழந்தைகளுக்கும் தெரியும். தொலைக்காட்சியில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷைபார்க்கின்ற போது ஒரு கொலையாளியை பார்க்கும் வெறுப்புடனேயே சிறுகுழந்தைகளும் உணர்கின்றனர். தற்போது பாலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான ஹமாஸ் இயக்கத்திற்கு எதிராகவும் நேரடியாகவும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் புஷ் அறிவித்துள்ளார்.

வியற்னாம் முதல் ஈராக் வரை அமெரிக்கப் படைகள் செய்த கொலைகள், அழிவுகள் பற்றி மீண்டும் மீண்டும் பேசத் தேவையில்லை என்றே நினைக்கிறேன்.

அமெரிக்காவின் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்னாசியாவையும், அதன் சந்தையாகவும் கட்டுப்பாட்டுப் பிராந்தியமாகவும் கொண்டு வரப்பட வேண்டும். இந்தியாவிலும் இலங்கையிலும் அமெரிக்கப் படைத் தளங்கள் இருக்க வேண்டும். அதற்காக அமெரிக்கா எதையும் செய்யத் தயங்காது. சமாதான பேச்சுவார்த்தைகளை பயன்படுத்துகிறது. தேவை ஏற்படும்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் ஒடுக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயங்கப் போவதில்லை.

நிலை இப்படி இருக்கும் போது யார் இந்த அமெரிக்காவில் வாழும் இலங்கை சிவப்பிரகாசம் என்று கேட்கத் தோன்றுகிறதா? அவர் வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 1983 வரை இருந்தவர்.

வீரகேசரியின் யூ.என்.பி. ஆதரவு நிலைப்பாடு உறுதி செய்யப்படுவதற்கு அவரும் காரணமாவார். வீரகேசரி நிறுவனம் இயங்கும் கட்டிடம் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் வீடாக இருந்தபடியால் வீரகேசரியின் யூ.என்.பியை விமர்சிக்க இயலாது என்று கூறப்பட்ட போதும் 1977 பொதுத்தேர்தலில் யூ.என்.பிக்கு ஆதரவாக ஆசிரியர் தலையங்ககளையும் தலைப்பு செய்திகளையும் பிரசுரிக்கும் அளவிற்கு சென்றிருக்கத் தேவை இல்லை. அந்தளவிற்கு வீரகேசரி சொந்தக்காரர்களின் விருப்பத்தை எழுத்தில் போட்டவர் அவர்.

பேரினவாத, பெருமுதலாளித்துவ கொள்கைகளைக் கொண்ட யூ.என்.பி.யை பற்றி தமிழ் மக்கள் மத்தியில் அதிகமான நம்பிக்கையை ஏற்படுத்துவதில் அவரின் பத்திரிகை தர்மம் பெரிதும் துணை புரிந்துள்ளது. அவ்வாறு வாக்களித்து வாங்கிய அவரால் தொடர்ந்து யூ.என்.பி. ஆட்சியின் போதே இங்கிருக்க முடியவில்லை. 1977, 1981, 1983 இன வன்முறைகள், யாழ் நூலக எரிப்பு தமிழ் மக்கள் மீதான யுத்தம் என்பவற்றுக்குப் பின்னும் யூ.என்.பி. பற்றி ஒரு மெதுவான போக்கை வீரகேசரி தொடர்ந்து கடைப்பிடிக்க அவர் அத்திவாரமிட்டிருந்தார். யூ.என்.பி. ஆட்சியின் போது நடத்தப்பட்ட 1983 இனவன்முறையின் பின்னர் அவரால் தொடர்ந்து இங்கிருக்க முடியவில்லை. அதனால் யூ.என்.பி. பற்றி எழுத வேண்டிய தேவையும் அவருக்கு ஏற்படவில்லை.

அமெரிக்காவிற்குச் சென்று, பிழைத்து பணம் பண்ணிவிட்டு இங்கு வந்து தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு வக்காளத்து வாங்குகிறார். இதுவும் தேவையுடனேயே செய்யப்படுகிறது என்பது புரியாததா?

யூ.என்.பி. தமிழ் மக்கள் மீது நடத்திய யுத்தத்திற்கும், பொதுசன ஐக்கிய முன்னணி தொடர்ந்து நடத்திய யுத்தத்திற்கும் அமெரிக்கா தார்மீக ரீதியாக ஆதரவை மட்டுமன்றி, ஆயுதங்களையும் கொடுத்தது. யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான ஆலோசனைகளையும் பயிற்சியையும் கொடுத்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பு அதிநவீன போர்க் கப்பல் ஒன்றையும் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளது. இலங்கையிலிருந்த அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்லிஸூம், கிரிஸ்டினா ரொக்கா, ஆமிரேஜ் போன்றவர்களும் சமாதான நடவடிக்கைகளில் இலங்கைத் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகள் இயக்கமும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென 'கட்டளை இட்டு வந்தனர் வருகின்றனர்.

அமெரிக்காவை சொர்க்கபூமி என்று கூறும் அவருக்கு அங்குள்ள ஏழைகள், பிச்சைக்காரர்கள் பற்றி எதுவும் தெரியாதா? பல லட்சக்கணக்கானோர் சிறைகளில் இருப்பது தெரியாதா? அரசியல் புகலிடம் தேடி அங்கு சென்ற ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் நிலத்திற்கு அடியிலுள்ள பாதாள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதை அறியாரா?

அவர் மட்டுமல்ல பல தமிழ் எழுத்தாளர்களும், பிரமுகர்களும் இன்னும் மாறவில்லை. டி.சிவராம், டி.பி.எஸ்.ஜெயராஜ் போன்றவர்களும் இவ்வாறான இந்திய, அமெரிக்க மாயைகளை ஏற்படுத்தியவர்கள்தான். டி.சிவராம் அண்மைக் காலம் அமெரிக்காவுக்கும், இந்தியாவிற்கும், ஜப்பானுக்கும் எதிராக எழுதி வருகிறார். ஆனால் இன்றைய இக்கட்டான நிலைமைக்கு வித்திட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தை தூசு தட்டி எடுக்கும்படி கூறுவதிலிருந்து அவரின் கோளாறு குணமடையவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

தில்லைக் கூத்தன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதுபவரும் கூட 'சர்வதேச சமூகத்தின்' தலையீட்டில் அதிகம் நம்பிக்கை வைத்திருக்கிறார். தற்போது சர்வதேச சமூகம் தமிழ் மக்களைக் கைவிட்டு விட்டதாக எழுதுகிறார். இது தமிழ் தேசியவாதத்தின் இயலாமை.

சிவப்பிரகாசத்தின் பெருமுதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு அமெரிக்காவை மெச்ச வைக்கிறது.

படித்தவர்கள் என்போர் எதைச் சொன்னாலும் ஏற்கும் தமிழ்ச் சமூகம், அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழ் மக்களின் நண்பன் என்றால் ஏற்குமா?

விடுதலைப் போராட்டங்களை பயங்கரவாதம் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட பல அமைப்புகளை சர்வதேச பயங்கரவாத இயக்கங்களென பிரகடனம் செய்த அமெரிக்க ஏகாதிபத்தியம் விடுதலையின் நண்பனாவது எப்படி?

நன்றி
இப்படிக்கு
**கா. திருச்செல்வம்**

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 ஜூலை 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 59
எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## மீண்டும் போர் மூளுமா?

மீண்டும் போர் தொடங்கப்பட்டால் இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்காவும் இந்தியாவும் உதவி செய்யும் என்று பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் (பாதுகாப்பு அமைச்சரல்ல) மிலிந்த மொறகொட மீண்டும் தெரிவித்துள்ளார். யூன் 14 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கப்பலொன்று தாக்கப்பட்ட சம்பவத்திற்கு அடுத்து மீண்டும் யுத்தம் மூண்டுவிடுமோ என்ற பதற்றம் நிலவுகின்ற வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதில் மிகவும் கரிசனையுடன் அமைச்சர் மிலிந்த மொறகொட செயற்பட்டுவருகிறார். அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் மிகவும் நெருக்கமாக பழகிவரும் அமெரிக்காவிடமிருந்து இராணுவ உதவிகளை பெற்றுக்கொள்வதில் ஆர்வமுடன் இருந்து வருகிறார். சமாதான் சூழ்நிலையிலும் யுத்தக்கப்பல்களை இந்தியாவிடமிருந்தும் அமெரிக்காவிடமிருந்தும் பெற்றுக் கொண்டமைக்கு மிலிந்த மொறகொட முக்கிய பங்காற்றியுள்ளார் என்பது இரகசியமானதல்ல. மீண்டும் போர் ஏற்பட்டால் எதனையும் முகம்கொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் கடந்த 19 மாத யுத்தநிறுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டுவிடுமோ என்று மக்கள் அமைதி இழந்திருக்கின்றனர்.

அமெரிக்காவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. அதனால் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தையில் இருந்து ஒதுங்கியிருக்கப்போவதாக அறிவித்தது. ஏற்கனவே நடைபெற்ற பேச்சு வார்த்தை களில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட வியங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பாக வடக்கு கிழக்கை புனரமைப்பதற்காக நடவடிக்கை களை வேகமாக மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

டோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டிற்கு அழைப்பு கிடைத்தபோதும் வடக்கு கிழக்கை புனரமைப்பதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத் தினால்தான் அம்மாநாட்டில் கலந்துகொள்ள முடியுமென திட்டவட்டமாக விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவித்திருந்தது. அரசாங்கம் சாதகமாக நடந்து கொள்ளவில்லை புலிகள் இயக்கம் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ள வில்லை.

இதனையடுத்து இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் முறுகல் நிலையை ஏற்படுத்தும் சம்பவங்கள் நடைபெற்றுவருகின்றன. அதில் கடந்த யூன் 14 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு அப்பால் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு சொந்தமான கப்பல் தாக்கப்பட்டமை மிகவும் பாரதூரமாக கொள்ளப்படுகிறது. இதற்கு முன்பு பெப்ரவரி 7 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்படையினரால் சோதனைக்குள்ளாவதை மறுத்து புலிகளின் படகை அதில் பிரயாணம் செய்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் வெடிவைத்து தகர்த்துக் கொண்டனர். மார்ச் 20 ஆம் திகதி சீன மீன்பிடிக்கப்பலொன்று தாக்கி முழ்கடிக்கப்பட்டது. இதனையார் செய்தது என்று இன்னும் நிருபிக்கப்படவில்லை.

யூன் 14 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு அப்பால் கடற்படையினரின் சோதனைக்கு உட்படவிரும்பாத புலிகள் அவர்கள் பிரயாணம் செய்த கப்பலை அவர்களே தர்க்கி அழித்தனர் என்று கடற்படையும் ரணில் அரசாங்கமும் தெரிவித்தது. சர்வதேச கடற்பரப்பில் எண்ணெய் ஏற்றிக்கொண்டு வந்த தங்களின் கப்பலை இலங்கை கடற்படை தாக்கி அழித்ததாக புலிகள் இயக்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளதுடன் அதில் பிரயாணம் செய்த தங்களின் 12 மாலுமிகளையும் கடற்படையினர் கைது செய்தனர் என்றும் கூறியுள்ளனர். அதை கடற்படையினர் மறுத்துள்ளனர். ஆனால் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் ஆயுதங்களை ஏற்றிக் கொண்டுவந்த புலிகளின் கப்பலை கடற்படையினர் தாக்கி அழித்ததாக குறிப்பிட்டுள்ளது. இது பற்றி சர்வதேச கண்காணிப்புக் குழு விசாரணைகளை நடத்திவருகிறது.

இச்சம்பவத்தை அடுத்து புலிகள் தாக்குதல்களை தொடங்கிவிடக்கூடும் என்ற அச்சத்தால் நாடெங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்களை இராணுவத்தினர் சோதனையிட முற்பட்டபோது பதற்றம் ஏற்பட்டுள்ளது.

யூன் 18 இல் பருத்தித்துறையில் இராணுவம் சுற்றிவளைத்து தேடுதல்களை நடத்தியுள்ளது. அதே தினத்தில் திருகோணமலை சீனன்குடாவில் பொலிசாரும் விமானப்படையினரும் வீடுவீடாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

வடக்கு கிழக்கில் ஆட்கடத்தல்களும் கொலைகளும் அதிகரித்துள்ளன. பாதுகாப்பு பிரிவினரின் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

கொழும்பிலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் இயக்கத்தின் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிலர் வெள்ளவத்தையில் கடந்தமாதம் கைது செய்யப்பட்ட பின்பு கொழும்பில் புதிய சோதனைசாவடிக்கள் அமைக்கப்பட்டுள்ளன. புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனா.

இவ்வாறான சூழ்நிலையில் மீண்டும் யுத்தத்தை நோக்கியே நிலைமைகள் நகர்வதாக மக்கள் மத்தியில் சந்தேகமும் பதற்றமும் நிலவுகிறது.

டோக்கியோ மாநாட்டில் புலிகள் இயக்கம் கலந்து கொள்ளாததை அடுத்து ரிச்சட் ஆமிரேஜ் டோக்கியோ வானொலிக்கு அளித்த பேட்டியில் புலிகள் இயக்கத்திற்கு கடும் எச்சரிக்கை விடுக்கும் விதத்தில் கருத்துக்களை தெரிவித்துள்ளார். புலிகளை வேட்டையாட வேண்டிவருமெனவும், புலிகள் வன்முறையை அரசியல் வழிமுறையாக பயன்படுத்துவதை தடுக்க அமெரிக்கா அழுத்தங்களை கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாதவர்கள் வரலாற்றில் மிகவும் மோசமானவர்களாக மதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார். இக்கருத் துக்கள் புலிகளை யுத்தத்திற்கு தள்ளுவதை நோக்கமாகக் கொண்டதாக இருக்கின்றது.

எனவே சமாதானத்தை நேசிப்பவர்கள் யுத்தம் மீண்டும் மூளுமா? இல்லையா? என்பதை ஆராய்வதையும் யுத்தம் மூண்டால் புலிகள் இயக்கம் தாக்குப் பிடிக்குமா? அரசங்கம் தாக்குப் பிடிக்குமா? என்பதை ஆராய்வதையும் விட்டு யுத்தம் மீண்டும் மூண்டால் பொதுவாக இலங்கை மக்களுக்கும் நாட்டிற்கும் மேலும் ஏற்படப்போகும் பேரழிவுகள் பற்றி எச்சரிப்பவர்களாக மாற வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள கையறுநிலையிலிருந்து சமாதான முன்னெடுப்புகளை மீண்டும் முன்னெடுப் பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் தேசியவாத தலைமைகள் எப்போதும் வெளிநாட்டு சக்திகள் சர்வதேச சமூகம் என்றே அழைந்து திரிந்தன. பிராந்திய மேலாதிக்க சக்திகள் ஏகாதிபத்திய சக்திகள் என்ற கணிப்பின்றி எல்லோரையும் தேசியவாத போராட்டத்திற்கு ஆதரவாக திருப்பிவிடலாம் என்று நம்பியதுடன் தமிழ்மக்களையும் நம்பவைத்தன இன்று அமெரிக்கா முதல் அண்டை நாடான இந்தியா வரை தமிழ் மக்களின் போராட்டத்திற்கு மாறான நிலைப்பாடுகளை எடுத்தபோதும் சில தமிழ் தேசியவாத தலைவர்களுக்கு இன்னும் உறைக்கவில்லை. சிலர் அவர்களின் குறுகிய தேசியவாத முதலாளித்துவ ஏகாதிபத்திய நிலைப்பாடு காரணமாக வெளிநாட்டுச்சக்திகளுக்கே துணைபோகின்றனர்.

இந்தநிலைமையிலிருந்து மிண்டு தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுக்கும்; உறுதி செய்துகொள்ளும் புதிய வழிமுறைகளும், தந்திரோபாயங்களும் வகுத்துக்கொள்ளப்பட்ட வேண்டியது அவசியமாகும்..

- ஆசிரியர் குழு -

# இலங்கை மறு கொலனியாக்கம் பெறுகிறது எதிர்த்து நிற்க வேண்டியது கடமையாகிறது

அன்றைய பிரித்தானிய வெள்ளைக் காரர்களின் ஆட்சி நிர்வாகத்தைப் பற்றியும் அவர்களது மொழி. கல்வி. நடையுடை பாவனை பற்றியும் சிலர் ஏற்றிப் போற்றி வந்ததைக் கேட்டிருக் கின்றோம். அவர்களுக்கு விசுவாச மாகச் சேவகம் புரிந்தவர்களைப் பற்றியும் அறிந்திருகிறோம். வெள்ளைக் காரர்கள் செய்வதெல்லாம் சிறந்தது உயர்வானது நவீனமானது நாம் எல்லாம் தாழ்வானவர்கள் என்ற எண்ணக்கரு நம்மவர்கள் மத்தியிலே ஊன்றி வளர்க்கப்பட்டது. இது அறியாமை காரணமாக மட்டுமன்றி இவ் அந்நியத்தனத்தை நிலவுடமைப் பழமைவாதத்தின் ஊடாக உள்வாங் கிக் கொண்டதன் விளைவுமாகும். இவ்வாறு வெள்ளையர் புகழ்பாடுவ தற்கு மற்றொரு காரணம் இலங்கை யில் அவர்களையும் அவர்களது கொலனித்துவ ஆட்சியையும் எதிர்த்த தேசிய சுதந்திரத்திற்கான போராட்டம் எதுவும் முன்னெடுக்கப்பட்ட அளவில் கொலனித்துவ எதிர்ப்புப் போராட்டங் களை முப்பது நாற்பதுகளில் முன்னெடுத்தனர்.

இத்தகைய சூழலிலேயே வெள்ளை எசமானர் சுதந்திரம் எனக் கூறித் தமக்கு விசுவாசமான இலங்கையின் மேட்டுக்குடி வந்த நிலவுடமை முதலா ளித்துவ உயர் வர்க்கத்தினரிடம் ஆட்சியைக் கைமாற்றிக் கொடுத்துச் சென்றனர். இலங்கையின் ஆளும் வர்க்க சக்திகள் இரு நிலைப்பட்டவர் களாகி ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏகாதிபத்திய விசுவாசிகளாகத் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் குறிப்பிட்டளவு தூரத்திற்கு கொலனித்துவத்தின் கீழான ஆட்சி நிர்வாகத்தின் தொடர்ச்சியில் சிற்சில மாற்றங்களை தேசிய ரீதியில் மாற்றிய மைத்துக் கொண்டனர். பொருளா தாரத் துறைகளிலும் அவ்வப்போது மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வும் செய்தனர். இவை உலகம் பூராவும் ஐம்பது. அறுபது. எழுபது களில் இடம்பெற்ற கொலனித்துவ ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வலுமிக்க செயற்பாடுகளின் ஒரு அம்சமாகவும் திகழ்ந்தது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட அரசியல் பொருளாதார சமூக. கல்வி பண்பாட்டுத் தளங்களிலான மாற்றங்கள் குறிப்பிட்டளவு தூரத்திற்கு கொலனித்துவ மீத மிச்சங்களுக்கு எதிரானவையாக இருந்தன. அதன் மூலம் மேற்கூறிய முனைகளில் ஒருவகைத் தேசியத் தன்மை காணப் பட்டன. இத்தேசியத் தன்மையை முழுமைப்படுத்தி சகல தேசிய இனங்களுக்குரிய சமத்துவத்தை வழங்காது பேரினவாதத்தை வளர்த்துக் கொண்டமையும் அதனை ஏகாதிபத்தியம் நன்கு பயன்படுத்தி வந்தமையும் ஆய்வுக்குரிய மற்றொரு அம்சமாகும். இருந்த போதிலும் இலங்கையில் மாற்றம் பெற்றுவந்த தேசிய பொருளாதார. அரசியல். சமூக. கல்வி. பண்பாட்டு போக்குகள்ளை ஏகாதிபத்திய சக்திகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றுக்கு குழி பறிக்கவும் சீரழித்து சின்னப் படுத்தவும் பதிலுக்கு நமது நவ கொலனித்துவ போக்கை வளர்க்கவு மான சந்தர்ப்பங்களையே எதிர் பார்த்து வந்தனர். அதற்குரிய சந்தர்ப்பம் 1977இல் ஜே.ஆர். ஆட்சியில் கிடைத்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னான காலப் பகுதியில் சோஷலிசத்திற்கும் முதலாளித்து வத்திற்கும் கடுமையான போட்டி நிலவியது. சோஷலிசம் ஒவ்வொரு முனைகளிலும் மேவி நின்ற போக்குக் காணப்பட்டது. ஏகாதிபத்தியத்தால் தான் நினைத்தவாறு உலகை ஆட்டிப் படைக்க முடியாத அளவுக்கு பொருளாதார ராணுவ சமநிலை பேணப்பட்டது. இதனால் அமெரிக்கா உலகை நவ கொலனித்துவத் திட்டங்களுக்குள் கொண்டுவருவது இலகுவானதாக இருக்கவில்லை. ஆனால் பனிப்போர் காலம் எனக் கூறப்படும் காலப் பகுதியை அமெரிக்காவும் மேற்குலக முதலாளித் துவமும் திட்டமிட்ட வகையில் பயன் படுத்தி சோஷலிசத்தை முறியடிப்பதில் தமது முழுப் பலத்தையும் பயன் படுத்திக் கொண்டன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பின் சோவியத் யூனியனிலும் சோஷலிசத்தை வீழ்ச்சி யடையச் செய்வதில் அமெரிக்கா வெற்றி பெற்றுக் கொண்டது. சோஷலிசம் தற்காலிகப் பின்னடை வுக்கும் முதலாளித்துவம் முன்னேறிச் செல்வதற்கும் வாய்ப்புகள் கிடைத்தன. புதிய பொருளாதார உலக ஒழுங்கு என்னும் ஏகாதிபத்திய பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டது. பொருளாதார அரசியல் திட்டங்கள் ஏகாதிபத்திய

**வெகுஜனன்**

சக்திகளால் தீட்டப்பட்டன. தனித்து விடப்பட்ட மூன்றாம் உலக நாடுகள் மீது படிப்படியாக பொருளாதார அரசியல் அழுத்தங்கள் வலுவடைந்து வந்தன. அவை தமது தேசிய பொருளாதார. அரசியல். சமூக. பண் பாட்டு அடிப்படைகளைப் படிப்படி யாகக் கையிழக்கும் நிர்பந்தங்களுக்கு உள்ளாகி வந்தன. மறு கொலனி யாக்கம் என்பது வேகப்படுத்தப்பட்டு இன்று உலகமயமாதல் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் கண்ணெதிரே கண்டு கொண்டிருக் கின்றோம். இலங்கையில் இதற்கான ஆரம்பத்தை 1978இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன புதிய அரசியலமைப் பைக் கொண்டுவந்ததன் மூலம் தொடக்கி வைத்தார். தாராளமயம். தனியார்மயம் என்பது இலங்கைக் குள் 1980களின் ஆரம்பத்துடன் புகுந்து கொண்டது. தேசிய பொருளா தாரத்தின் ஒவ்வொரு அடிப்படை களும் ஒவ்வொன்றாகத் தூக்கி வீசப்பட்டன. திறந்த பொருளாதாரம் என்பதன் கீழ் நமது நாட்டின் உற்பத்திகள் யாவும் நாசமடைந்து கொண்டன. உற்பத்திக்குப் பதிலாக இறக்குமதிக்கே முதலிடம் வழங்கப் பட்டது. இதன் மூலம் அந்நிய முதலா ளிகளும் உள்ளூர் தரகு முதலாளி களும் பெருலாபம் அடைந்தனர்.

இத்தாராளமயம். தனியார்மயம் என்பன உலகமயமாதல் என்பதாக வளர்ச்சி கண்டது. இவற்றின் வளர்ச்சிப் போக்கிற்கு தகவல் தொழில் நுட்பம் பக்கபலமாகிக் கொண்டது. இன்று அமெரிக்காவின் தலைமையி லான உலகமயமாதல் நிகழ்ச்சித் திட்டத்தில் அமெரிக்க மேற்குலக ஜப்பானிய பெரு முதலீட்டாளர்கள் ஒன்றிணைந்து தமது பல்தேசியக் கம்பனிகள் மூலம் மூன்றாம் உலக நாடுகளில் வேகமாகப் புகுந்து வரு கின்றனர். உலகவங்கி. சர்வதேச நாணய நிதியம். ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இவ் உலகமயமாதல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான வரைபுகளை நமது நாட்டின் ஆளும் வர்க்கத்திடம் கையளித்து அதன் கீழ் செயற்படுமாறு வழிகாட்டுகின்றன. அந்நிய இறக்குமதிகளுக்கு தாராளமயச் சந்தைப் பொருளாதாரம் என்பது பயன்படுத்தப்படுகிறது. தனியார். மயத்தின் மூலம் ஏற்கனவே இருந்த அரசாங்க பொதுக் கூட்டுத் தாபனங்கள் பல்தேசியக் கம்பனி களுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளன. இதனால் நமது நாட்டு மக்களின் உழைப்பும் வளங்களும் கூட்டுக் கொள்ளை போகின்றன. சகல துறைகளும் தனியார்மயப்படுத்து வதை உலக வங்கி வற்புறுத்தி வருகின்றது. அதற்கு ஆளும் வர்க்க சக்திகள் ஆமாம் தெரிவித்து விடுகின்றனர். உலக முதலாளித்துவ முதலீட்டாளர்களுக்கு போகுமிட மெல்லாம் ஆட்சி தலைவர்கள் அழைப்பு விடுத்த வண்ணமே இருக்கின்றனர். இதனையே நாடு மறுகொலனியாக்கம் செய்யப்படு கின்றது எனக் கூறிக்கொள்ளலாம். அண்மையில் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட நாற் பத்தையாயிரம் கோடி ரூபா இலங்கையை மறுகொலனியாக்கம் செய்வதற் காகக் கொடுக்கப்பட்ட கடனேயாகும். இதன் மூலம் உலக மயமாதல் நிகழ்ச்சித் திட்டங்களை இலங்கையில் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உலக வங்கிக்கு ஏற்பட்டுள்ளது.

அன்று பிரித்தானிய கொலனித்துவ வாதிகள் இலங்கையைத் தமது கொலனியாக ஆக்கிவைத்து சுரண்டிக் கொள்ளையடித்துச் சென்றனர். அக்கொலனிய நச்சுத்தனங்களால் இந்நாடு சகல நச்சுத்தனங்களாலும் சீரழிக்கப்பட்டு பின்தள்ளப்பட்டது. இன்று அமெரிக்கா தலைமையில் மீண்டும் இலங்கை மறு கொலனி யாக்கம் செய்யப்படுகிறது. அன்று பிரித்தானிய வெள்ளைத் துரைத்தனத் திற்கு குடை. ஆலவட்டம் பிடித்த நிலவுடமை மேட்டுக்குடி வந்த ஆளும் வர்க்க சக்திகள் தான் இன்று அமெரிக்கா தலைமையிலான மறு கொலனியாக்கத்திற்கு செங்கம்பளம் விரித்து வரவேற்கிறார்கள். அதற்கான உலகமயமாதலையும் அதன் ஒரு பகுதியான தகவல் தொழில்நுட்பத்தின் மேன்மையையும் புகழ்ந்து பேசிப் பிரசாரப்படுத்துவதற்கு ஒரு அடிமைப் புத்திஜீவிக் கூட்டத்தையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதல் நிகழ்ச்சித் திட்டத்தின் சாராம்சம் பழைய கொலனித்துவ கேடுகெட்டத் தனங்களில் இருந்து மீட்கப்பட்ட ஒவ்வொரு துறைகளையும் நவீன வழிமுறைகளில் மீண்டும் மறுகொலனி யாக்கம் செய்வதேயாகும். இதன்மூலம் முழு உலகையும் ஏகாதிபத்திய ஆதிக்கம் செலுத்தி ஒரே குடைக்குக் கீழ் கொண்டு வருவதேயாகும். இவற்றின் எதிர் விளைவு நமது நாடு உட்பட மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுகிறது. வறுமை இவேலை யின்மை. வீடின்மை. உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்மை. சூழல் மாசடைதல். கொடிய நோய்கள். பெருகிவரும் சமூச் சீரழிவுகள். பண்பாட்டுச் சிதைவுகள் நாட்டையும் மக்களையும் மிகப்பெரும் நாசங்களுக்கு இட்டுச் செல்கின்றன. இந்நிலையில்தான் நாடு. மக்கள். எதிர்காலம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் ஒவ்வொருவரும் இலங்கையில் செயல்பட வேண்டிய கட்டாயத்திற்கு உட்படல் வேண்டும். ●

www.padippakam.com



# மலையக சிறுவர்களை வீட்டுவேலைக்கு அமர்த்தும் முகவர் நிலையங்கள்

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிரான சர்வதேச தினம் யூன் 12 ஆம் திகதி. இலங்கையில மலையகத்தமிழ் சிறுவாகளும் சிறுமிகளுமே அதிகமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் கடைகளிலும்இ வீடுகளிலும் அதிகமான மலையக சிறுவர்களும் சிறுமியர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிரான சர்வதேச தினத்தன்று மலையகத்தில் அட்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றுக்கு பிரதம அதிதியாக வந்திருந்த கொழும்பைச் சேர்ந்த சீமாட்டி ஒருவர் திரும்பி போகும் போது அவரது வீட்டில் வேலை செய்வதற்காக மலையகத் தமிழ் சிறுமி ஒருவரை அழைத்துச் சென்றுள்ளார் அச்சீமாட்டி என்.ஜீ.ஓவை நடத்தும் தமிழ்ப் பெண்ணிலைவாதி என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் பேசும் போது சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது. வறுமையின் காரணமாக வேலைக்கு செல்வோரை பிள்ளை உழைப்பாளிகள் என்று அங்கீகரித்து ஐ.நா.சபையால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள சம்பளத்தையும் ஏனைய தொழில் உரிமைகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் ஒரு பிள்ளை உழைப்பாளியை கடத்தி செல்வதை நியாயப்படுத்தும் வகையிலேயே பேசியுள்ளார். அவரை பிரதம அதிதியாக அழைத்த என்.ஜீ.ஓ காரர்கள் தான் பாவம்.

கொழும்பில் மலையகத்தமிழ் சிறுவர் சிறுமியர்களை வீட்டு வேலைகளுக்கு சப்பிளை பண்ணும் முகவர் நிலையங்கள் இயங்குவதாக அறியமுடிகிறது. ஒறுகொடவத்தையிலும். மட்டக்குளியிலும் அம்மாதிரியான முகவர் நிலையங்கள் இயங்குகின்றதாக தெரிகிறது: அம்முகவர் நிலையங்களில் சிறுவர். சிறுமியரின் பெயர். வயது. முகவரி என்பவற்றுடன் படங்களும்

**ம. ஆழகேசன்**

இருக்கின்றனவாம். தேவையான அவர்கள் அம்முகவர் நிலையங்களுக்கு சென்று தேவையானவர்களை தெரிவு செய்துவிட்டு முகவர்களுக்குரிய கமிஷனையும் கொடுத்தால் இரண்டொரு தினங்களில் தேவைப்பட்டவர்களின் வீடுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சிறுவர் சிறுமியர் அனுப்பி வைக்கப்படுவார்களாம்.

அநேகமாக தோட்டங்களில் தொழிற்சங்க தலைவர்களாக இருப்பவர்களே அம்முகவர்களுக்கு சிறுவர் சிறுமியர்களை சப்பிளை பண்ணுகிறார்களாம்.

இதைவிடவும் கொழும்பில் இயங்கும் தொழிற்சங்க காரியாலயங்களினூடாகவும் வீட்டு வேலைகளுக்காக சிறுவர் சிறுமியர் சப்பிளை பண்ணப்படுகிறார்களாம்.

புதிதாக கொழும்பில் திறக்கப்பட்ட தொழிற்சங்க காரியாலயத்தில் நாளாந்தம் மலையக சிறுமிகளையும். பெண்களையும் காணக்கூடியதாக இருந்ததாக அக்காரியாலயத்திற்கு அண்மையில் வசிக்கும் ஒருவர் தெரிவித்தார். அவர்கள் வேலை வாய்ப்பு தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு அங்கு செல்பவர்களில் பெரும்பாலானோர் வீட்டு வேலைகளுக்காகவும் சிலர் கடை. ஆடை தொழிற்சாலை வேலைகளுக்காகவும் அனுப்பப்படுவதாகவும் தெரியவருகிறது.

மலையக சிறுவர் சிறுமியர்களையும் பெண்களையும் வீட்டு வேலைகளுக்காக அனுப்புவதற்கு எதிராக அறிவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும். மலையக சிறுவர் சிறுமியர்களை வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்படுவதை நிறுத்தாதவரை மலையகத்தமிழ் மக்கள் அவர்களது அடிமைத் தனத்தை ஒழிக்க தயாராகவில்லை என்றே கொள்ளப்படும். வீட்டு வேலைக்கு செல்வோர் 24 மணிநேரமும் வேலை செய்ய வேண்டியவர்களாக இருப்பதுடன். அடிமையாக நடத்தப்படுகிறார்கள். பாலியல் போன்ற பலவிதமான சுரண்டல்களுக்கு ஆளாகிறார்கள்.

கடைகளிலும். ஆடைத்தொழிற்சாலைகளிலும். காரியாலயங்களிலும் வேலை செய்பவர்கள் மிகவும் மோசமாக சுரண்டப்படுகின்றனர். அளவிற்கு அதிகமான நேரம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வாராந்த. வருடாந்த லீவுகள் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

# அடாவடித்தனமும் காடைத்தனமும் அதிகார அரசியலின் லட்சணங்கள்



நுவரெலியாவிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் வேலை செய்யும் வெயிட்டர்களும். மனேஜரும் கடந்த மாதம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானினால் ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டுள்ளதாக வாராந்த ஆங்கிலப் பத்திரிகையொன்று அறிக்கை செய்துள்ளது.

இதேபோன்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லிலந்த பெரேரா கடந்த ஏப்ரல் மாதம் நுவரெலியாவில் வைத்து ஒரு பொலிஸ் அதிகாரியை தாக்கியதாகச் செய்திகள் பிரசுரமாகியிருந்தன.

நுவரெலியா காற்றுப்பட்டதும் அமைச்சர்களுக்கும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும். ஏனைய அரசியல்வாதிகளுக்கும் "தில்" வந்துவிடுகிறதோ என்னவோ மேற்கண்டவாறான சம்பவங்கள் நுவரெலியாவிலேயே அதிகமாக நடந்துள்ளன.



நுவரெலியாவில் நடைபெற்றன என்பதற்காக பொறுப்புள்ள அரசியல்வாதிகள் காலநிலையை குறை கூற முடியாதுதானே.

நுவரெலியாவிலுள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றுக்கு அவரது மெய்ப்பாதுகாவலர்களுடன் அமைச்சர் தொண்டமான் சாப்பிடச் சென்றிருக்கிறார். தான் கொடுத்த "ஆடர்களை" சரியாக எடுக்கவில்லை என்று கூறி வெயிட்டர்களை அமைச்சர் ஈவிரக்கமின்றி தாக்கியதாகவும் அதைப்பற்றி விசாரித்த ஹோட்டல் மனேஜரையும் ஈவிரக்கமின்றி தாக்கியதாகவும் செய்திகள் வெளியாகின. தாக்கப்பட்டவர்கள் அச்சம்பவம் பற்றி பொலிஸில் முறையிடவோ பத்திரிகைகளுக்கு தகவல்களை கொடுக்கவோ பயந்தவர்களாக இருக்கின்றனர்.

அமைச்சர் ஆறுமுகத்தின் மீது இவ்வாறான குற்றம் சாட்டப்பட்டது இதுதான் முதற் தடவையல்ல.

சில வருடங்களுக்கு முன்பு டிக்கோயா வைத்தியசாலையில் கடமையாற்றிய அலுவலர்களையும். வைத்தியரையும் தாக்கியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அதற்காக அட்டன் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பின்னர் அவ்வழக்கு சமரசம் செய்யப்பட்டது.

இதேபோன்று பொரளை பொலிஸ் நிலையத்திலும் அமைச்சர் ஆறுமுகம் பொலிஸாரை ஆத்திரமூட்டுவதாகவும் அவமதிப்பதாகவும் நடந்து கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அதற்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

அவர் சில பொலிஸ் அலுவலர்க்ளைக் கொண்டு சில பேரைத் தாக்கியதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன. அதாவது அவரின் கையாள் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையத்திற்கு சென்ற ஒருவர் பொலிஸ் நிலையத்தில் வைத்து சில பொலிஸ் அலுவலர்களால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாத வசந்தகால விடுமுறையின்போது நுவரெலியாவில் கார் ஓட்டப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பொலிஸாரின் ஒழுங்கு விதிக்கு இணங்காமல் நடந்ததுடன். பொலிஸ் அதிகாரி ஒருவரைத் தாக்கியதாகவும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லிலந்தபெரேரா மீது குற்றஞ்சாட்டப்பட்டு செய்திகள் வெளியாகியிருந்தன. அதைப்பற்றிப் பாதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி முறைப்பாடு

**டி. சுபாஸ்**

செய்திருந்த போதும் லிலந்த பெரேராவுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

அமைச்சர் ஆறுமுகம் லிலந்தபெரேரா எம்.பி. ஆகியோருக்கு எதிராக மட்டுமன்றி அண்மைக்காலமாக பல ஐ.தே.கட்சி எம்.பி.க்களுக்கு எதிராக இவ்வாறான அடாவடித்தனம். காடைத்தனம் பற்றி குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பிரதமரோ ஐ.தே.கட்சி பொதுச் செயலாளரோ அவர்கள் மீது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஐ.தே.கட்சி அரசியல்வாதிகள் மட்டுமன்றி பொதுஜன ஐக்கிய முன்ன்ணி அரசியல்வாதிகளும் கடந்த காலத்தில் மேற்படி அடாவடித்தனங்களிலும் காடைத்தனங்களிலும் ஈடுபட்டதாக அறிக்கை செய்யப்பட்டிருந்தன. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அரசியல் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இவ்வாறானவர்கள் குற்றச்செயல்களைப் புரிவதுடன் அதற்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாமலிருக்கவும் சட்டத்தையும் ஒழுங்கையும் அவர்களின் கைகளில் எடுத்துக் கொண்டு செயற்படுகின்றனர். அவர்களின் அரசியல் அதிகாரம் அவ்வாறான காடைத்தனங்களையும். அடாவடித்தனங்களையும். தலையீடுகளையும் நியாயப்படுத்துவதாக கொள்ளப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் சட்டத்தின் முன் எல்லோரும் சமமாக நடத்தப்படுவர் என்பது கேலிக்கூத்தாக்கப்படுகிறது.

அமைச்சர்கள். எம்.பி.க்கள் மட்டுமன்றி அவர்களின் செயலாளர்களும் குற்றச் செயல்களை புரிவதாகவும். பொலிசாரின் நடவடிக்கைகளில் தலையிடுவதாகவும். அவர்களின் ஆதரவாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்காமல் தடுப்பதாகவும் தகவல்கள் நிறையவே கிடைத்துள்ளன.

அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்கள் காடைத்தனங்கள் அத்துமீறல்களை அவர்களின் வீரதீர செயல்களாக புகழ்ந்து பாடி அங்கீகரிக்கும் அவர்களின் ரசிகர் கூட்டங்கள் இருக்கும் வரையிலும். அவர்களைத் தட்டிக் கேட்கும் சட்ட. நீதி நிறுவனங்கள் இல்லாதவிடத்து அவை அரசியல்வாதிகளின் லட்சணங்களாகவே இருக்கும். அவர்களே 'மக்களின் தலைவர்களாக' இருப்பர்.

# அமைதிச் சூழ்நிலையில் யுத்தமாகவும் யுத்தச் சூழ்நிலையில் அமைதியாகவும் இருந்த ஆத்மா

**– ரி. ஜோர்ஜ் –**

இதனை மாக்ஸிஸ்ட்டு லெனினிஸ்ட்டுக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் கம்யூனிஸ்ட்டுக்களை வெறும் நாத்திகர்களாகவும். வன்முறையாளர்களாகவும் ஓரங்கட்ட எடுக்கும் முயற்சிகளுக்கு பதிலடியாகும். சோவியத்யூனியனின் வீழ்ச்சி. சீனாவின் மீள முதலாளித்துவத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கும் நிலை என்பவற்றுக்கிடையில் கம்யூனிஸ்ட்டுக்கள் பற்றி மதத்தை அனுஸ்ட்டிப்பவர்கள் மேற்படி கூறுகின்ற கருத்துக்கள் நிராகரிக்க வேண்டியதல்ல எனப்படுகிறது.

சேகுவேராவின் 75வது பிறந்த நாளை நினைவு கூறுகின்ற சந்தர்ப்பத்திலேயே மேற்படி க்ருத்துக்கள் வெளியாகியுள்ளன.

1928 யூன் மாதம் 14ம் திகதி ஆர்ஜென்டீனாவில் பிறந்த சேகுவேரா கியூப விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு ஆற்றிய பங்கும் கியூபாவில் புரட்சிகர நிர்மாணங்களை மேற்கொள்ள எடுத்த முயற்சிகளும் கொங்கோ விடுதலைப் போராட்டத்தில் அவரின் பங்களிப்பும் சிலாகித்து குறிப்பிடக் கூடியவைகளாகும். பொலிவிய போராட்டத்தில் கலந்து கொண்டு 1967 ஒக்டோபர் 9ம் திகதி அவர் பொலிவிய படையினால் கொடுமையான சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

ஆளும் வர்க்கத்தினரின் பிரசாரங்களை முறியடிக்கக் கூடிய எளிமையான பிரசார முறைகள். ஆளும் வர்க்கத்தினரின் சலுகைகளுக்காக பின்தங்கிய சூழ்நிலையிலுள்ள மக்கள் பலியாகாமல் இருப்பதற்கு செய்யப்பட வேண்டிய தொடர்ச்சியான வேலை முறை. சோஷலிஸ மனிதனின் உயரிய பண்புகள். கெரில்லா போராட்டம் என்பன சேகுவேராவின் தலைசிறந்த வழிகாட்டிக் கோட்பாடுகளாகும்.

இந்து மதத்தையும். பௌத்த மதத்தையும் போலன்றி கிறிஸ்தவமும். இஸ்லாமும் உலகளாவிய சமயங்களாக இருக்கின்றன. இவ்வற்றை விட மாக்சிசம் உலகளாவிய தத்துவமாக இருந்தது: இன்னமும் இருக்கிறது. அதனால் சில விடுதலை இறையியலாளர்கள் கம்யூனிஸத்தை மதச் சார்பற்றவர்களின் உலகளாவிய மதமென்று கூறுகின்றனர். இப்படிக் கூறுவதற்கு வேறு உள்நோக்கங்கள் இருந்தாலும் லத்தீன் அமெரிக்க. ஆபிரிக்க நாடுகளில் மாக்சிசத்தை அடிப்படையாகக் கொண்ட விடுதலை இயக்கங்களின் செல் வாக்கை மறுக்க முடியாது. மாக்சிசத்தை நிராகரிக்க முடியாத போக்காக கொள்ள முடியும். கிறிஸ்தவத்தில் மக்களின் விடுதலையை முதன்மைப்படுத்தும் விடுதலை இறையியலாளர்கள் மாக்சிச இயக்கங்களுடனும் போராட்டங்களுடனும் மிகவும் நெருக்கமாக செயற்படுகின்றனர். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிர்ப்பந்தம் அல்லது தேவை காரணமாக மாக்சிசத்தை நியாயப்படுத்துவதற்காக கிறிஸ்துவத்திற்கும் மாக்சிசத்திற்குமிடையே இருக்கும் ஒருமைப்பாடுகளான சில விடயங்களை கூறுகின்றனர்.

அவர்கள் "கம்யூனிஸத்திற்கும் திருச்சபைக்கும் தியாகிகளின் இரத்தமே வித்தாகிறது" என்று கூறுகின்றனர். அவர்கள் கியூப தலைவர் பிடல்



கஸ்ரோவை விடுதலை சிந்தனையாளராகவும் சேகுவேராவை இயேசு கிறிஸ்துவிற்கு ஒப்பானவராகவும் கொள்கின்றனர். சேகுவேரா

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (13)

~ தேசபக்தன் ~

தேசிய மட்டத்திலுஞ் சரி. சர்வதேசிய மட்டத்திலுஞ் சரி. வெகுசன ஊடகங்களைப் பொறுத்தவரை அவை உள்ளூர்ப் பெருமுதலாளிகளின் கையில் அல்லது ஏகபோக முதலாளிய நிறுவனங்களின் கையில் உள்ளன என்பதில் நமக்கு ஐயமில்லை.

ஊடகச் சுதந்திரம் என்பது பற்றிய மயக்கங்களும் இன்னமும் பல காலந் தொடர முடியாது. முதலாளிய சமுதாயத்தில். அதிலுஞ் சிறப்பாக ஏகாதிபத்தியத்திடம் பணிந்து சமரசம் செய்யும் நிலையில் உள்ள ஒரு தேசிய முதலாளியமும் ஏகாதிபத்தியத்திற்கு நிரந்தர ஏவலாளராக இருந்து வந்துள்ள தரகு முதலாளியமும் ஆதிக்கத்திலுள்ள ஒரு மூன்றாமுலக நாட்டில். பெரிய ஊடக நிறுவனங்கள் அந்த முதலாளிய நலன்களையே பிரதிபலிப்பதை நாம் காணலாம்.

எந்தச் சூழ்நிலையிலும். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களினது முக்கியமாகச் சமூக மாற்றத்துக்கான போராட்டச் சக்திகளினது. குரலாக எந்தப் பெரிய பத்திரிகை நிறுவனமும் செயற்பட்டதில்லை. இன்று ஊடகங்களின் இயக்கத்துக்கு முதலாளியத்தின் ஆதரவு தேவைப்படுகிறது. விளம்பர வருமானம் இல்லாமல் ஒரு பெரிய பத்திரிகையையோ தொலைக்காட்சி நிறுவனத்தையோ வானொலியையோ கூட நடத்துவது இயலாது.

எனவே மாற்றுச் சமுதாயமொன்றை வேண்டி நிற்கிற ஒரு அரசியல் இயக்கமோ கட்சியோ தனக்கான தகவல் ஊடகங்களைச் சிறிய அளவிலென்றாலும் பேண வேண்டியிருக்கும். ஒரு கட்சியில் உறுப்பினர் வலிமையும் சமூகத்தில் அதற்குள்ள பரவலான ஆதரவும் அதற்கு ஒரு கட்சிப் பத்திரிகையையோ சில சமயம் ஒரு வெகுசனச் செய்தி ஏட்டை வார அடிப்படையிலோ நாளேடாகவோ நடத்துவதற்கு அனுமதிக்கலாம். இந்தியாவின் திரிபுவாதக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தமக்கு வலிமை உள்ள மாநிலங்களில் நாளேடுகளை நடத்துவது பலருமறிந்தது. எனினும் லாப நோக்கில் இதை நடத்துவதற்கு மாநில அரசியல் அதிகாரம் இருக்க வேண்டும் அல்லது தேசிய முதலாளித்துவத்தின் ஆதரவு இருக்க வேண்டும். இத்தகைய நாளேடுகள் மூலம் பாராளுமன்ற அரசியல் தேவைகளை நிறைவு செய்யலாம்.

இயலுமான பணியாக இருக்க முடியாது.

எனவே புரட்சிகரக் கட்சியின் அணுகுமுறை வித்தியாசமாக இருக்க வேண்டும். பத்திரிகை விற்பனையின் எண்ணிக்கையை விட. எத்தனை பேர் அதைப் பெற்று வாசிக்கிறார்கள். வாசித்த விடயங்கள் இன்னும் எத்தனை பேரிடம் போகின்றன என்பது கூடியளவு முக்கியமானது. இவ் வகையில் ஒரு கட்சி ஏட்டின் சில ஆயிரம் பிரதிகள் ஒரு பெரிய பத்திரிகை நிறுவனம் வெளியிடும் பிரபல சஞ்சிகை ஒன்றின் ஒரு லட்சம் பிரதிகளளவு அல்லது அதை விடப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எனவே வணிக நிறுவனங்களை விட முக்கியமான அளவில் வாசிப்பின் தரமும் தகுதியும் பற்றிய அக்கறையும் பொதுவாகவே வாசிப்பை ஊக்குவிப்பதும் பத்திரிகையை வெளியிடுவதினளவு முக்கியமான பணிகளாகின்றன.

அடிப்படையில் மறுப்புக்களை முன் வைக்க முடியாது. எனவே முதலாளிய ஊடகங்கள் எவ்வாறு செய்திகளைத் திரித்தும் மறைத்தும் வெளியிடுகின்றன என்பதை மிகுந்த திறமையுடனும் எளிதாகவும் நல்ல வலிய உதாரணங்கள் மூலம் சுட்டிக் காட்டுவதன் மூலம் முதலாளியப் பொய்களால் மூடப்பட்டுள்ள உண்மைகளை மக்களே தேடி அறியுமளவுக்கு மக்களுக்கு அறிவூட்டுவதும் விவாதங்களை ஊக்குவிப்பதும் முக்கியமான ஒரு கடமையாகிறது.

## முதலாளிய ஊடக ஆதிக்கச் சூழலிற் பாட்டாளி வர்க்கக் கட்சி தனது கருத்துக்களை முன்னெடுப்பது எவ்விதம்?

உண்மையான புரட்சிகரச் சிந்தனையை முன்னெடுக்கிற ஒரு நாளேட்டு க்கு விளம்பர உதவி இல்லாதது ஒரு புறம் இருக்க. விநியோகத்திற்கே பல தடைகள் இருக்கும். எனவே புரட்சிகர அரசியல் சார்ந்த ஒரு வெகுசன நாளேட்டின் பரவலான விநியோகமும் பெரும் அளவிலான விற்பனையும் குறிப்பிட்ட சில காலங்களில் அரசியல் எழுச்சி மிக்க நிலவரங்களின் கீழ் மட்டுமே இயலுமானது. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கும் வரை. அந்த வர்க்கநலன் சார்ந்த ஒரு வெகுசன நாளேட்டை வெற்றிகரமாக நடத்துவது என்பது ஒரு அரசியற் கட்சியின் வேலைத் திட்டத்தில்

ஒரு கட்சி ஏடு. ஆக மிஞ்சினால். வாரமொரு முறை வரக்கூடும். அதனாற் பெரிய பத்திரிகை நிறுவனங்கள் மூலமும் வானொலி. தொலைக் காட்சி ஆகிய ஊடகங்கள் மூலமும் அன்றாடம் பரப்பப்படும் முதலாளியப் பிரசாரத்திற்கும் பிற்போக்கான எண்ணங்களை வளர்க்கும் உண்மைக்கு மாறான தகவல்கட்கும் நாளாந்த

மறுபுறம். சில முதலாளிய ஊடகங்கட்குத் தமது 'நடுநிலைமையை' மக்களுக்கு எடுத்துக் காட்டும் தேவை இருக்கிறது. அதுபோக ஊடகங்களிடையிலான வணிகப் போட்டியின் காரணமாக மக்களைக் கவருவதற்கான தேவை உள்ளது. பரபரப்பான செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடுவது இதனாலேயே. தொலைக்காட்சி நிறுவனங்களிலும். வணிகப் போட்டி காரணமாகப் பரபரப்பூட்டும் செய்திகளையும் 'சூடான' விவாதங்களையும் ஒளிபரப்புவதை நாம் அறிவோம். எனவே தமது வர்க்க நலனுக்கு முரணான விடயங்களையும் முதலாளிய ஊடகங்கள் வரையறைக்கு உட்பட்டு அனுமதிக்கின்றன. அதைவிட. ஊடகங்களிற் திறமையுடன் செயற்படும் ஊடகவியாளர்களிற் கணிசமானவர்கள் சுதந்திரமாகச் சிந்திக்கும் முனைப்புடையவர்களாக இருப்பதால். செய்தி இருட்டடிப்புக்கு எதிரான உணர்வு அவர்களிடம் இருப்பது இயல்பு. எனவே மாற்றுக் கருத்துக்கள் பத்திரிகைகளில் வருவதற்கு அவர்கள் துணையாகின்றனர். இதைப் பத்திரிகை நிறுவனங்களும் ஊடகங்களும் தமது லாபநோக்கிற்கமைய ஏற்கின்றன. அதேவேளை மாற்றுக் கருத்துக்கள் எல்லை மீறிப் போகாது தடுப்பதிலும் அவர்கள் கவனமாக இருப்பார்கள். இச் சூழ்நிலையை எவ்வாறு புரட்சிகர சக்திகள் பயன்படுத்துவது என்ற கேள்வி எழுகிறது. முதலாளியப் பத்திரிகைகளையும் பிற ஊடகங்களையும் முற்றாக நிராகரிப்பது ஒரு தீவிர நிலைப்பாடு. இது எப்போதாவது ஒரு சில நிலவரங்களில் இயலுமானது. முதலாளிய விஷமத்தனத்துக்கு எதிராகக் குறிப்பிட்ட நிறுவனங்களைப் பகிஷ்கரிக்கும்படி மக்களிடம் கோரிக்கை விடுவது மூலம் முதலாளிய ஊடகங்களை முறியடிக்க இயலாது. எனினும் அவ்வாறான இயக்கங்களுக்கு அரசியல் அடிப்படையில் பயன் உண்டு. ஆயினும் இது ஒரு எதிர்ப்பு நடவடிக்கையே .குறிப்பிட்ட சில பிரச்சினைகள் தொடர்பான ஒரு பிரசாரமாகவும் போராட்டமாகவும் அமைகிற இந்த நடவடிக்கை வலிய மாற்று ஊடகங்களே இல்லாத நமது சூழலில் வரையறைக்குட்பட்ட பயனையே அளிக்கும். நமது தேவை நமது கருத்துக்களை மக்கள் மத்தியிற் கொண்டு செல்வதோடு மக்கள் மத்தியிலிருந்தே சமூக அமைப்புப் பற்றிய கேள்விகள் எழுவதை ஊக்குவிப்பதும் என்றால். ஊடகங்களின் நடுநிலைமைப் பாசாங்கை

தொர்டர்ச்சி 10ஆம் பக்கம்.

---

# யாழ் குடாநாட்டு இயற்கை வளங்கள்

இன்றைய உலகமயமாதலின் நச்சு விளைவுகளுக்கு எதிராக நமது இயற்கை வளங்களைப் பாதுகாத்து அவற்றை முறையாகப் பயன்படுத்துவது மனிதர்களின் சமூக வளர்ச்சிக்கு அவசியமானதாகும். அத்தகைய பரந்த செயற்பாட்டின் மூலம் ஏகாதிபத்திய உலகமயமாதல் சுரண்டல் சூறையாடலுக்கு எதிராகவும் சூழல் மாசடைவதைத் தடுக்கவும் எம்மால் முடியும். அந்த வகையிலேயே இத்தொடர் கட்டுரையை இயற்கை வள ஆர்வலர் க.நடனசபாபதி எழுதியுள்ளார். அவர் ஏற்கனவே புதியபூமியில் நிலநீர் பற்றிய கட்டுரையைத் தொடராக எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஆசிரியர்)

### (அ) கடல் வளம் :

கடலிலிருந்து மீனையும் கடல் வாழ் உயிரினங்களையும் கடல் .வளங்கள் என்று சாதாரணமாகக் கருதுகின்றோம். ஆனால் கடல் வளங்களில் தாவரங்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

பயிர்த்தொழிலுக்கு முக்கியமான. தேவையான இரசாயனப் பொருள்கள் N,P,K, நைதரசன்-N, போஸ்பரஸ்-P, பொட்டாசியம்-K, இவை பயிர் வளர அத்தியாவசியமானவை. பயிர்கள் நிலத்திலிருந்து Pயையும் Kயையும் சிரமமின்றிப் பெறுகின்றன. நைதரசன் வளிமண்டலத்தில் பெருமளவு இருந்த போதிலும். நிலத்தை அடைவதில்லை. பயிர்களாலும் அவற்றை வளியிலிருந்து ஈர்த்துக் கொள்ள முடிவதில்லை. இதனை ஏற்படுத்தவல்லது அவரையினத் தாவரங்கள். நெல் போன்ற பயிர்களை நடுமுன் அவரையினத் தாவரங்களை உருவாக்கினால் நைதரசனை வளியிலிருந்து ஈர்த்து வேர் முடிச்சுகளில் இருத்திக் கொள்ளும். அவரையின் வேர் முடிச்சுகள் நிலத்தடியில் தங்கியிருக்க விட்டால் பின்பு நடப்போகின்ற பயிருக்குத் தேவையான நைதரசன் (Nitrogen) கிடைத்து விடும். சில சந்தர்ப்பங்களில் சணல் பயிரை முதலில் நிலத்தில் உருவாக்கினால் வளிமண்டல நைதரசன் பயிருக்கு கிடைத்து விடும்.

கடலில் பெறப்படும் பச்சை. நீல அல்காவும் அவரை இனங்களைப் போலவே வளிமண்டல நைதரசனை நிலத்திற்குள் உறிஞ்சி வைக்கும் ஆற்றல் படைத்தவை. இதன் நிமித்தம் பயிர்களுக்குத் தேவையான நைதரசனைப் பெற பச்சை. நீல அல்காக்களை தற்போது பாவிக்கத் தொடங்கி உள்ளார்கள்.

இலங்கையில் பெறப்படும் கடற்தாவரங்களில் முக்கால் பகுதி அளவு யாழ். குடாநாட்டு மண்டைதீவு கடலில் கிடைக்கிறதாம்.

புத்தளத்திற்கு அருகில் கற்பிட்டி என்னும் கடற்கரைக் கிராமம் இருக்கிறது. இக் கிராமத்திற்கு நீர்கொழும்பு போன்ற இடத்து மீனவர் சென்று வாடிவீடுகளை அங்கே அமைத்து சில பருவ காலங்களில் தங்கள் மீன்பிடித் தொழிலை விருத்தி செய்து கொள்வார்கள்.

கற்பிட்டி வாசிகள் கடல்பாசி கரை ஒதுங்குகின்றபோது அவற்றைச் சேகரித்துச் சுத்தம் செய்து காய்ச்சுவார்கள். இவை கொதித்து ஆறியவுடன் இறுகிவிடும். ஜெல்லி உருவைப் பெற்றுவிடும். இதில் தேங்காய்ப்பாலைச் சேர்த்து கஞ்சியாக்கி இடை உணவாக உட்கொள்வர். இந்தக் கடற்பாசிக்கு இவர்கள் வழங்கும் பெயர் - கஞ்சிப் பாசி. இந்தக் கடற்பாசி கிறிகிலேறியா வர்க்கத்தைச் சேர்ந்தது. உலர்த்தி தூய்மை செய்யப்பட்ட இந்தக் கடற்பாசியை சைனாமொஸ் (China Moss) என வர்த்தகர்கள் பெயரிட்டு விற்கிறார்கள். கொழும்புக் கடைகளில் இதனைக் காணலாம். இந்த வகைப் பாசிகள் மண்டைதீவு. வேலணைக் கடற்கரைகளில் சில காலங்களில் ஒதுங்கும். இவற்றை சாதாரணமாகப் பார்க்கும் போது கபில நிறமாகக் காணப்படும். நல்ல நீரில் நன்றாகக் கழுவி சூரிய . வெப்பத்தில் காயவிட்டால் வெண்ணிறம் அடையும். இந்தப் பாசி வருஷத்தில் சில மாதங்களில் தான் கரை ஒதுங்கும். இதனைச் செயற்கையாக வளர்த்தெடுக்கும் முறையை 1970களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல் பகுதியில் பணியாற்றிய கலாநிதி சிவபாலன் அறிமுகம் செய்தார். அமைதியான கடற்பரப்பில் இரண்டு கோல்களை நட்டு. இழைக் கயிற்றைக் கட்டி. இழை இடுக்குகளில் பாசித் துண்டங்களைச் செருகி. நீரில் தோய்விட்டு வந்தால் ஒரு மாத காலத்திற்குள் இவை வளர்ச்சி காணும். வளர்ந்தவற்றில் துண்டுகளைக் கத்தரித்து எடுத்து தூய்மையாக்கி எடுத்தால் இக் கடற்பாசியைப் பெறலாம். இதைக் கொண்டு பல வடிவ ஜெல்லி உணவுப் பண்டங்களைத் தயாரித்து எடுக்கலாம். இந்த முறை மண்டைதீவை அண்டிய பகுதியில் வாழ்ந்த மீன்பிடி தொழிலில் ஈடுபட்டோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் பாசியை வளர்த்தெடுக்கக் கூடிய இடத்தில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ள முடியாதபடியால் இவர்கள் இப்பாசி வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுத் தங்கள் வருவாயைப் பெருக்க ஏதுவாகும். கடற்பாசிக்கு மேன்னாட்டு நாகரிகத்தில் மூழ்கியவர்களுக்கு அதிக நாட்டமுண்டு. இதனைக் கொண்டு செய்யப்பட்ட தின்பண்டங்களுக்கு மவுசு உண்டு.

## இயற்கைவள ஆர்வலர் க. நடனசபாபதி

### (ஆ) தாவர நெய்கள்

தாவர நெய்கள் - பழைய காலங்களில் பரவியிருந்தன. அவையாவன :

(1) தேங்காய். (2) எள். (3) புன்னை (4) வேம்பு. (5) இலுப்பை. (6)ஆமணக்கு முதலியன.

தற்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் 1. தாவர நெய் 2. சோயா நெய் 3. சூரியகாந்தி நெய் 4. பனமர நெய் முதலியன.

அந்த நாட்களில் கோவில் தலவிருட்சங்களாக இலுப்பை. புன்னை முதலியவற்றையும் சில இடங்களில் வேப்பமரம் ஆகியவற்றையும் அமைப்பதன் நோக்கம் இந்த மரங்களிலிருந்து பெறப்படும் நெய்யையே கோவிலில் விளக்கு எரிக்கப் பாவிக்க வேண்டும். ஆனால் இந்த நோக்கம் கைவிடப்பட்டு தெங்கின் நெய். பசு நெய் ஆகியனவற்றில் ஆலயங்களில் விளக்குகள் எரிக்கப்படுகின்றது. இது ஒரு தவறான நடைமுறையாகும்.

குடாநாட்டின் சில பகுதிகளில் மட்டும் அன்றாடச் சமையலுக்கு இலுப்பெண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. குடாநாட்டின் வேறு பகுதிகளில் இலுப்பு நெய் பாவனை அறியாதவொன்றாகும்.

ஆமணக்குச் செடிகளின் வேரில் நீர் தங்கக் கூடாது. மேலும் இச்செடியை ஆடு முதலியன கடித்து நொறுக்காது. இதனால் இவற்றை நீர் அடியில் தங்காத மணல்வெளிகளில் தாராளமாகப் பயிரிடலாம். இம் முயற்சி பருத்தித்துறை வல்லிபுரக் கோவில் மணற்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது. வெற்றியின் அடையாளங்கள் தென்பட்டன. பருத்தித்துறை பிரதேச சபை இந்தப் பரீட்சார்த்த முயற்சிக்கு ஐந்து ஏக்கர் விஸ்தீரணமான மணற்பரப்பைத் தந்து உதவியது. பல ஆண்டுகளுக்கு முன் ஐந்து ஏக்கர் துண்டுகளாக நூற்றிற்கு மேற்பட்ட துண்டுகள் சவுக்கு மரம் பயிரிட இலவசமாக பருத்தித்துறை D.R.O. அலுவலகத்தினால் வழங்கப்பட்டது. சவுக்கு மரங்கள் விறகுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் சூறையாடப்பட்டதனால் சவுக்கு மரம் நடும் முயற்சியை மக்கள் கைவிட்டு விட்டனர். ஆகையால் இந்தத் துண்டுகள் கைவிடப்பட்ட நிலையில் தற்போது உள்ளது. இந்தத் துண்டு நிலங்களில் ஆமணக்குச் செடிகளைப் பயிரிடலாம். இதனால் பெருவாரியான நெய் கிடைப்பதோடு தேவைகளை நிவர்த்தி செய்யலாம். Brake Oil போன்றவைகளுக்கும் வைத்தியத் தேவைகளுக்கும் ஆமணக்கு நெய் பெரிதும் பயன்படும். இந்தப் பயிர்ச் செய்கையை இப்பிரதேச மக்கள் மேற்கொள்ளலாம்.

கவனிப்பாரற்றுக் கிடக்கும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# விடுதலைப் போராட்டங்களில் பங்குகொள்ளும் பெண்களின் பிரச்சினைகள்

**தோழியர் பார்வதி (2)**

### பெண்கள் அரசியற் களத்திற்குப் பிந்தி வந்தவர்கள்

அடிமை முறை நிலவிய காலந் தொட்டு. சிறப்புரிமையுடைய வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்கள் நாட்டின் அரசியல் விவகாரங்களை நடத்துவதில் தமது ஆற்றலை விருத்தி செய்து வந்துள்ளனர். இரண்டு வர்க்கங்களையுஞ் சேர்ந்த பெண்கட்கும் அடிமைப்பட்ட ஆண்கட்கும் கேடான முறையில் அவர்கள் தமது தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்தனர். இது இன்றுவரை ஏதோ ஒரு வடிவிற் தொடருகிறது. தாயுரிமை தூக்கியெறியப்பட்டமையே பெண்பாலினருக்கு நேர்ந்த உலக வரலாற்றுத் தோல்வி எனவும் ஆண்கள் வீட்டிலும் ஆணை செலுத்தத் தலைப்பட்டனர் எனவும் சொன்ன ஏங்கல்ஸை இங்கு நினைவிலிருத்துவது தகும். பெண் தரந்தாழ்த்தப்பட்டுச் சேவகஞ் செய்யும் நிலைக்கு இறக்கப்பட்டார். அவர் ஆணின் காம இச்சையின் அடிமையாகவும் குழந்தைகளை உற்பத்தி செய்யும் கருவியாகவும் ஆனார். சொத்துடைமை மீது தமது தனி உரித்துக் காரணமாக ஆண்கள் ஆளுவோராயினர். வரலாற்று வழி வந்த தாயுரிமை இழந்ததன் பயனாகப் பெண்கள் ஆளப்பட்டோராயின் ஆண்கள் சிந்தனை சார்ந்த பணிகளை எடுக்கையிற். பெண்கள் உடலுழைப்புக்கு ஒதுக்கப்பட்ட முறையிலமைந்ததான அன்றைய வேலைப் பங்கீடு. உலகைப் பகுத்தாய்ந்து தொகுத்திணைக்கும் செயலில் ஆண்களுக்கு திரட்டப்பட்ட அனுபவத்தை வழங்கியது. பெண்கள் வீட்டு வேலைகளைக் கொண்ட கண்காணாத உலகிற் காணமாற் போயினர். இவ்வாறு. ஆண்கள் உலக அறிவுத்துறை மீது ஏகபோகஞ் செலுத்தினர்: உலகை வரைவிலக் கணஞ் செய்வதில் மட்டுமன்றி மாற்றுவதிலும் அவர்கள் செயலூக்கத்துடன் பங்குபற்றினர். ஆண்கள் வாக்குரிமை பெற்று வெகு காலத்தின் பின்பே பெண்கள் வாக்குரிமை பெற்றனர் என்பதை எண்ணிப் பாருங்கள். இன்றைய 21ஆம் நூற்றாண்டிற் கூடக் குவெய்த்தில் பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. ஆப்கானிஸ்தானில் (இப்போது ஹமீட் கர்ஸாய் தலைமையிலான நிலமானியப் பிரபுக்களின் கூட்டமைப்பால் பிரதியீடு செய்யப்பட்ட) தலிபான் போன்ற மத அடிப்படையிலான. உலக வரலாற்றின் இடைநிலைக்கால நிலமானிய ஆட்சியாளர்கட்கும் அராபிய வளைகுடா நாடுகளின் ஷேக்குகட்கும் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் ஆதரவு வழங்குகையிற். பெண்கள் பொது வாழ்விற் புகாதவாறு மறிக்கப்படுகின்றனர். நேபாளத்தை எடுத்துக் கொண்டால். இங்கே நிலவும் நிலமானிய முடியரசு முறை காரணமாகப். பெண்களுக்கும் கருப்பையில் இருக்குங் காலந் தொட்டே ஆளும் உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. ஒப்பிடுகையில் அண்மைக்காலத்தினவானவையும் நடைமுறையிலுள்ள பிரதான அரசியற் கட்சிக்கு மிகவும் பகைமையானவையுமான கம்யூனிஸ்ற் கட்சிகள் உட்பட. அரசியற் கட்சிகளில் பெண்களின் தலைமைத்துவத்தை விருத்தி செய்வதற்கான போராட்டத்தின் மீது இவை யாவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நடைமுறையிலுள்ள உற்பத்தி முறை சாதகமானதல்ல இன்றைய சமுதாயத்தின் தளமும் மேற்கட்டுமானமும் பொதுவாகவே சுரண்டலை. அதிலுங் குறிப்பாகப். பெண்களின் குழந்தைப் பேற்று. வீட்டுப் பணி உழைப்பின் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது. சொத்துடமை உறவுகளைப் பொறுத்தவரை. ஆண்களின் சொத்துக்களைப் பேணுவோராகவும் அச்சொத்துக்களை ஆண்வழிச் சந்ததிக்கு வழங்குவதற்காக ஆண்பிள்ளைகளைப் பெறுவோராகவுமே பெண்கள் கருதப்படுகின்றனர். நடைமுறையிலுள்ள சமூக. பண்பாட்டு. கல்வி. அரசியல். மேற்கட்டுமானக் கூறுகள் யாவுமே இந்தச் சுரண்டலை ஆதரிக்கிற முனைப்போடு உள்ளன. திருமணம் என்கிற ஒழுங்கமைப்பை எடுத்துக் கொள்ளுங்கள். சொத்துடமை உறவுகளில் ஆண்கள் தமது மேலாதிக்கந் தொடர்ந்தும் பேணுவதற்குரிய ஒரு வசதிக்கான சம்பந்தமே அது. பெண்களைப் பொறுத்தளவில்.

அச் சம்பந்தம் அவர்களை வீட்டு அடிமைகளாக விளிம்பு நிலைக்குத் தள்ளி விடுகிறது. வருந்தத்தக்க விதமாக இது. குறைந்தளவி லெனினும். கம்யூனிஸ்ட்டுகட்கும் பொருந்துகிறது.

வலுவான இடதுசாரி இயக்கங்களைக் கொண்ட நேபாளம். காலத்துக்குக் காலம். செயலூக்கமுள்ள பெண்கள் பலரைத் தந்துள்ளன. எனினும் அவர்கள் அடையாளங் காணப்பட்டவுடனேயே மறைந்து விடுகிறார்கள். நம்பிக்கை தரக்கூடிய பல பெண்களை நம்மிடமிருந்து பறித்ததான திருமணம் என்ற ஒழுங்கமைப்பு அதற்கான முறைப் பண்பு வாய்ந்ததான நிலமானிய முறைத் தந்தை வழிச் சமூகம் உள்ள நேபாளம் போன்ற நாடுகளில். பெண் கம்யூனிஸ்ற்றுக்களின் திருமண வாழ்க்கை மேலுஞ் சிக்கலானதாகலாம். நேபாளத்தில் மக்கள் யுத்தம் தொடுக்கப்பட்ட பின்பு தனியார் உடைமை என்ற சிந்தனைக்கூறு மெல்ல மறைந்து வருகிற போதும். தேவையின் பேரால் நிகழும் வேலைப் பங்கீடு போன்று. நிலமானியத்தின் பண்பாட்டு வேர்கள் பல வடிவங்களில் நுழைந்து விடுகின்றன. ஒரு பெண் தாயாகும் போது ஏற்படும் ஒற்றைத் தரப்பிலான சுமையும் இவற்றுடன் சேர்ந்து கொள்கிறது. ஒவ்வொரு குழந்தையின் பிறப்புடனும் பெண் வீட்டு வேலை அடிமைத்தளத்துள் மேலும் ஆழமாக அமிழ்கிறார். நேபாளத்தில் மக்கள் யுத்தத்திற் செயற்பாட்டுடன் இயங்கிய பெண்கள் பலர். குழந்தைகளைப் பெறுவது. ஒழுங்கு நடவடிக்கைகட்கு உட்படுத்தப்படுவது போன்றது என்று முறைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் நீண்ட காலத்துக்குக் கட்சி நடவடிக்கைகளினின்று விலகியிருக்கின்றனர். இவ்வகையிற். தமது விருப்பிற்கமைந்த தோழர்களை மணஞ் செய்த அறிவாற்றலும் செயலூக்கமும் உள்ள கம்யூனிஸ்ற் பெண்கள். புலனாகாமலே மறைந்து போகும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். தமது பிள்ளைப் பேற்றுக்காலத்தில் வெகுசன அமைப்புக்களிடமிருந்தோ கட்சியிடமிருந்தோ ஆதரவைப் பெற இயலாதுள்ளவையான. வெள்ளை அதிகாரம் (மரபுவாத மேட்டுக்குடிகளின் அதிகாரம்-மொ.வெ.) நிலவும் பகுதிகளில். இது சிறப்பாகப் பொருந்தும். எனினும். றொல்பா. றுகும் தளப் பிரதேசங்களில் வெகுசன ஆதரவும் கட்சி வலுப்பெற்றமையுங் காரணமாகப். பெண் தலைவர்களது இவ்வாறான தாய்மையின் சுமை முக்கியமான காரணங்களுள் ஒன்றாகும். மக்கள் யுத்தம் அந்தக் கோலத்தை மாற்றுகிறது போற் தெரிகிறது. எனினும். பெண்களின் தலைமைத்துவத்தின் தொடர்ச்சி பற்றிய கேள்வி. குறிப்பாக அவர்கள் திருமணஞ் செய்து குழந்தைகளைப் பெற முடிவு செய்கிற நிலையில். மக்கள் யுத்தத்தினுள்ளும் எழுகிறது. இது ஏனெனில். முன்னேறிய நாடுகளில் உள்ள தந்தைவழிச் சமூகங்களை விட அதிக ஒடுக்குகளைக் கட்சியும் வெகுசனங்களும் தாங்கி நிற்க இயலுமானதன் விளைவாக. அப்பிரதேசங்களில் இப்பிரச்சனை தீர்க்கப்பட்டு வருகிறது. நேபாள நிலமானியச் சமூகத்தின் இன்னொரு அம்சம் ஏதெனின். பெண்கள் குழந்தைகளைப் பெறுமாறு. குறிப்பாக ஆண் குழந்தைகளைப் பெறுமாறு நெருக்கப்படுவதாகும். மக்கள் யுத்தம் தொடுக்கப்பட்டதையடுத்து இவ்வம்சம் ஒரு அளவுக்கு மறுதலிக்கப்பட்டுள்ளதாயினும். இன்னமும் ஒரு குழந்தையையாவது பெறுமாறு நெருக்குவாரம் இருக்கிறது.

வெளிவெளியாகவோ மறைமுகமாகவோ. பெண் ஊழியர்களைத் திருமணம் செய்யுமாறு நெருக்குவாரத்தை உண்டாக்கும் போக்கும் உள்ளது. ஏனெனில் மணமாகாத பெண்கள். மணமாகாதவர் என்ற அவர்களது சமூக அந்தஸ்த்துக் காரணமாக. ஆண்களதும் பெண்களதும் சந்தேகத்துக்குப் பெரிதும் இலக்காகின்றனர். இதன் விளைவாக. அவர்கள் திருமணத்துக்கு ஆயத்தமாகு முன்னரே. தமது விருப்பிற்கு மாறாக மணமுடிக்கும்படி நேருகிறது. அதிலும் முக்கியமாக. அரசியற் தவறுகளை விடப் பாலியற் தவறுகளைப் பாரியனவாகக் கருதும் ஒரு போக்கும் உள்ளது.

### பெண்களின் போராட்டம் ஆண்களினதிலுஞ் சிக்கலானது

கம்யூனிஸ்ற் பெண்களைப் பெறுத்தவரை. அவர்கள் போராட்டத்திலும் உட்கட்சிப் போராட்டத்திலும் அகப். போராட்டத்திலும் ஈடுபடுவது போதாது. கட்சியில் அவர்கள் பெரும்பான்மைப் போக்கைச் சார்ந்தவர்களாக இருந்தபோது கூட. அவர்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர். அவர்கள் தந்தைவழிச் சமூகத்தின் விளைவாக உருவானோர் என்பதால். அவர்களது அகப் போராட்டம். தனி மனிதர்கள் என்றளவில் தமக்கெதிரான போராட்டமாக மட்டுமல்லாது. தம்மீது தந்தைவழிச் சமூக விழுமியங்களாற் சுமத்தப்பட்ட விதியை நோகும் மனப்பாங்கு. தாழ்வு மனப்பான்மை. குற்ற உணர்வு. பழிவாங்கப்படும் உணர்வு போன்ற பாதிப்புகட்கு எதிரான போராட்டமாகவும் அமைகிறது. அவர்கள் மணமாகாதவர்களாகவோ. விவாகரத்துப் பெற்றவராகவோ. ஒரு முறைக்கும் அதிகமாக மணமானவராகவோ இருக்க நேர்ந்தால். அவர்கள் மேலுஞ் சிக்கலான போராட்டத்தை எதிர்நோக்க வேண்டி நேருகிறது. அலெக்ஸண்ட்றா கொல்லன்வ்ரயின் கட்டுரைகளின் தொகுப்பில் இது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மெய்யாகவே அவர் இவ்வாறான திருமணங்கட்கெதிரான கிளர்ச்சிக்கு அதிசிறந்த எடுத்துக்காட்டாகத் திகழுகிறார். புரட்சிப் பணியில் கவனத்தைக் குவிக்க வேண்டி. முதலாவது கணவனையும் குழந்தையையும் விட்டு விலகிப். பின்பு. திருமண உறவு பற்றிய மாறாத வகையிலான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்த காரணத்தால். இரண்டாவது கணவனையும் பிரிந்தார். மரபுவழி மணவாழ்வுக்கு எதிரான அவரது கிளர்ச்சி காரணமாக. முதலாளிய சமுதாயத்திடமிருந்து மட்டுமல்லாது பழமைவாதக் கம்யூனிஸ்ற்றுக்களிடமிருந்தும் அவர் சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்தது. இதன் விளைவாக அவர் தனது "தண்ணீர்க் கிண்ணக் கொள்கைக்காக" (பாலுறவு என்பது ஒரு கிண்ணம் தண்ணீரை அருந்துவது போல எளிதாக இருக்க வேண்டும் என்ற அவரது கொள்கைக்காக) பழமைவாதக் கம்யூனிஸ்ற்றுக்களிடையே அறியப்பட்ட அளவுக்குக் கம்யூனிஸ்ற் இயக்கத்துக்கும் பாட்டாளி வர்க்கப் பெண்கள் இயக்கத்துக்கும் அவர் வழங்கிய பங்களிப்புக்காக அறியப்படவில்லை. இன்னொரு உதாரணம். ஜியாங் சிங். அவர் தனது முந்திய திருமணங்கட்காக முதலாளியப் பத்திரிகைகளதும் பிரமுகர்களதும் அவதூறுகட்குள்ளானார். தனது கட்சியினுட் கூட அவர் கனிவுடன் நடத்தப்படவில்லை. மாஓவை மணமுடிப்பதற்கு முன் நிபந்தனையாக. அவர் பல ஆண்டுகளாக அரசியலினின்று விலகி இருக்க உடன்பட வேண்டியிருந்தது. இம் முடிவு. வலதுசாரியான லியூ ஷாஓசி கட்சித் தலைமைப்பீடத்திலிருந்த போது எடுக்கப்பட்டது. ●

---

## சமாதான முயற்சிகளை...

1ஆம் பக்க தொடர்ச்சி...

"அமெரிக்காவின் சமாதான முயற்சிகளை" முன்னெடுக்கவுள்ளதாக தெரிகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வாஷிங்டனில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ உரையாற்றவிருக்கிறார். அவ்வுரையை அடுத்து இலங்கையின் சமாதான முயற்சிகளில் பல மாற்றங்கள் ஏற்படலாம். அதாவது இலங்கையின் சமாதான முயற்சிகளினூடாக அமெரிக்கா அதன் அக்கறைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கான அழைப்பாக அவ்வுரையை அமைப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் மிலிந்த மொரகொடவும் நிலைமைகளை நகர்த்தி வருகின்றனர். சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலுக்குள்ளேயே இலங்கை அதன் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் கூறி வருவது அறிந்ததே. அவரது மேற்படி உரையில் அல்லது உரையை அடுத்து 'சமாதான முயற்சிகளில்' அமெரிக்காவின் உதவியையும் தலையீட்டையும் வெளிப்படை யாகவும் நேரடியாகவும் கேட்கும் நிலை ஏற்படலாம்.

அதனையடுத்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும் மிலிந்த மொரகொடவினதும் விருப்பப்படி பேச்சு வார்த்தைகளில் புலிகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அதாவது த.வி.கூட்டணி போன்ற ஏனைய தமிழ் அமைப்புகளையும் பேச்சு வார்த்தைகளில் இணைத்துக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம் அதனது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளும்.

முதலில் புலிகளின் தலைமையை அமெரிக்காவிற்கு இணங்கிப் போகுமாறு வற்புறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். சரிவரா விட்டால் அமெரிக்காவிற்கு ஒத்துப் போகும் இன்னொரு தலைமையை புலிகள் இயக்கத்தில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறான முயற்சிகளினால் புலிகளின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் நோக்கம் நிறைவேறா விட்டால் புலிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் சமாதான முயற்சிகளிலிருந்து அவர்களை ஓரம் கட்டும் முயற்சி களை அமெரிக்கா எடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது. பாலஸ்தீன சமாதான முயற்சிகளில் யாசீர் அரபாத்தின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டதும் ஹமாஸ் இயக்கத்திற்கு எதிராக அமெரிக்கா தாக்குதல்களை நடத்தும் என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்யக்கூடிய இலங்கைத் தமிழ் தலைமைகளை இணைத்துக் கொள்வதில் அமெரிக்கா மறைமுகமாக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிகிறது.

இலங்கையில் அமெரிக்கா அதன் தரை. கடல். விமான கடைத்தளங்களை இலகுவாக அமைத்துக் கொண்டு இலங்கையை அதற்கு மிகவும் லாபமான சந்தையாகவும் வைத்துக் கொண்டு அதன் பூகோளரீதியான நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது போன்றும். இதுவரையில் பேரினவாதத்திற்கு விட்டுக் கொடுக்காமல் அரசியல் தீர்வை காண பேச்சுவார்த்தையை நடத்தியது போன்றும். ரணில்.' மொரகொட ஆகியோரின் ஆசிவாதத்தால் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் ஏனைய ஏகாதிபத்தியங்களிடமும் மாட்டிக் கொண்டுள்ள "இலங்கை சமாதான முயற்சிகளை" விடுவிப்பதற்கும் முக்கியமான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

---

## அமைதிச் சூழ்நிலை...

6ஆம் பக்க தொடர்ச்சி...

பொது வுடமை வாழ்க்கை முறைக்கான சிந்தனைகளை வளர்த்தவர் என்றும் அதில் மக்களின் விடுதலையும் பொது நலமும் எப்போதும் கிறிஸ்தவத்திற்கு ஏற்புடையதே என்று விடுதலை இறையியலாளர்கள் கூறுகின்றனர். அவர் கிறிஸ்தவத்திலிருந்து வேறுபட்டாலும் மதசார்பற்றவர்களின் வாழ்க்கை நெறி பற்றி உலகளாவிய பார்வையை முன்வைத்தார் என்று கூறுவதுடன் கம்யூனிஸத்தை மதசார்பற்றவர்களின் உலகளாவிய மதம் என்று கூறுகின்றனர்.

'சேகுவேரா' அமைதிச் சூழ்நிலையில் யுத்தமாகவும் யுத்தச் சூழ்நிலையில் அமைதியாகவும் இருந்த ஒரு ஆத்மா (Che Guevara was a spirit that would be "at war in peace" and "at peace in war") என்று சிலர் கூறுகின்றனர். அந்தளவிற்கு எந்த சூழ்நிலையிலும் நிதானமாகவும். உறுதியாகவும் இருந்தார் என்பதாகும்.

ஆனால் அவர் 'கொங்கோ போராட்டத்தில்' தான் பாரிய தவறுகளை இழைத்துவிட்டதாகவும் அதற்காக தன்னை ஒருபோதும் தான் மன்னிக்கப்போவதில்லை என்றும் அத் தவறுகளை தான் ஒருபோதும் இனி செய்யப்போவதில்லை{ என்றும் அவர் சுயவிமர்சனம் செய்திருந்தார்.

இதைவிட அவர் எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் யுத்தத்தை முதன்மைப்படுத்தவில்லை என்றும் மக்கள் போராட்டப் பாதையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் சிறுமுதலாளித்துவ குணாம்சம் கொண்ட சாகஸக்காரன் என்றும் சில மாக்ஸிஸ்ட்டு லெனினிஸ்ட்டுக்கள் விமர்சனம் செய்வதுண்டு.

ஆனால் அவர் மாக்ஸிச-லெனினிஸத்தின் அடிப்படையையோ. சோஷலிஸத்தையோ. கம்யூனிஸத்தையோ நிராகரிக்கவில்லை. ரஷ்ய-சீன புரட்சிகளிலிருந்து வித்தியாசமான தந்திரோபாயங்களை சூழலுக்கு ஏற்ற வகையில் பிரயோகிப்பதில் சில பரீட்சார்த்தங்களை செய்துள்ளார். வியட்னாம் விடுதலைப் போராட்டத்தில் அவரின் கொள்கையையும் நடைமுறையும் பெரிதும் பின்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றும் ஆசிய. ஆபிரிக்க. ஐரோப்பிய. அரேபிய நாடுகளில் நடைபெறும் போராட்டங்களில் சே யிடமிருந்து பல விடயங்கள் கற்றுக் கொள்ளப்படுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்துடன் வர்க்க விடுதலைப் போராட்டத்தை இணைப்பதும் எல்லாப் போராட்டங்களிலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை மையப்படுத்துவதும் அவற்றில் சிலவாகும்.

மிகவும் பின்தங்கிய நாடுகளில் வாழும் மக்களின் போராட்டங்களில் பிரதான எதிரியான ஏகாதிபத்தியத்தை இலக்கு வைப்பதிலிருந்து தப்ப முடியாது விலகி நிற்கவும் முடியாது.

புதிய ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ்நிலையிலும் 'சே'யின் படிப்பினைகளையும் கொண்டு மக்கள் விடுதலைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகியுள்ளது.

படிப்பகம்

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [15]

'தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை கோருவதற்குரிய தகுதிப்பாடு உடையவர்களா' என்றொரு விநோதமான ஐயப்பாடு பொதுவர் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டது.

தமிழ் விடுதலை இயக்கங்கள் என்ற பேரில் கடந்த இருபது வருடங்களாக இளைஞர்கள் தமது வாழ்வை இழந்தும். உயிர்களைத் தியாகம் செய்தும் இன்னுமின்னும் போராடிக் கொண்டிருக்கையில் ஏன் இந்தச் சந்தேகம் எழுந்ததென நாம் ஆராய்தல் அவசியந்தானே!

தமிழ் விடுதலை இயக்கங்கள் தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிப்பவர்கள் தாங்கள் மட்டுமே என்ற தன்முனைப்புக் கொண்டமையால் மக்கள் சார்பை மறந்து மக்களின் மேய்ப்பர்களாக தங்களைப் பாவனை செய்துகொண்டு செயற்படுவதால் விளையும் அனர்த்தங்கள் ஏராளம்.

எதிரிக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டைக் கையாள்வது போல் மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைக் கையாளுவதே அடிப்படைக் கோளாறாகும்.

பேரினவாத அரசையும் சாதாரண தமிழ் மக்களையும் சமதராசில் வைத்து நிறுத்தே தமது தண்டனைகளை வழங்குகின்ற கொடுமையால் மக்கள் மத்தியில் விடுதலை இயக்கங்களுக்கு விரோதமான மனப்பாங்கு துளிர்விட்டு வளருவதனை நாம் அவதானிக்க முடிகிறது. இத்தகைய விரோதம் பெரும் விருட்சமாக வளருமெனில் அதனால் விளையப் போகும் ஆபத்துக்களை நாம் அறிந்துகொள்ள முயலாதிருக்க முடியாது.

விடுதலைக்கென்று புறப்பட்ட இளைஞர்கள் அனைவரும் இந்தியாவுக்கு செல்லக் கிடைத்த படகில் எதில் ஏறிக்கொண்டார்களோ அதற்கேற்ப அவ்வவ இயக்கங்களில் இணைந்து கொண்டனர். அவரவரின் ஊரில் எந்த இயக்கம் ஈடுபாடு அதிகம் கொண்டிருந்ததோ அவ்வவ்வியக்கங்களில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடத் தம்மை இணைத்துக் கொண்டனர். இவ்விளைஞர் இயக்கங்களின் குட்டி முதலாளித்துவக் குணாம்சங்களின் குளறுபடிகளால் நான் முந்தி நீ முந்தி. என்று இவர்கள் தம்மிடையே வீரப்பிரதாபங்களில் ஈடுபடத் தவறவில்லை. இதனால் கடந்த இரு தசாப்தங்களில் விளைந்த விபரீதங்கள் கணக்கிலடங்காதனவாகும்.

தங்களை மக்கள் மத்தியில் பிரபலமாக்குவதற்காக சாதாரண மக்களுக்கு பகிரங்கமாக தந்திக்கம்பத் தண்டனைகள் வழங்குவதும் தமது பெயர்களை அதன் பின் பொறிப்பதும் போராட்ட நடவடிக்கையின் தொடக்கங்களாக உருக்கொண்டன. சம்பவங்கள் நடக்க. நடக்க. சாமானியர்களாக சாகடிக்கப்பட்டவர்களை 'சமூகவிரோதி'கள் என அடையாளப்படுத்தி வீரர்களைப் புகழ்ந்துவிட்டு தமது அன்றாட அலுவல்களை அலுங்காமல் குலுங்காமல் சுயபுத்தியுடன் செய்து முடித்த "விவேகத் தமிழர்களின்" பொதுப்புத்தி மட்டத்தில் விளைந்து பெருகிய இயக்கங்கள் தமது முத்திரைகளை இவ்வாறாகப் பொறித்துக் கொண்டன.

விடுதலை இயக்கத்துக்கான தகுதிகளாக கொலை. கொள்ளை. ஆதிக்கம் என்பன தலைவிரித்தாடின. எனவே இத்தகைய இயக்கங்களிடையே தமது தகுதிப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்காக "ஏகபோக"மாக்கிக் கொள்ள நினைத்துத் தம்முள் மோதிக் கொண்டனர். குட்டி முதலாளித்துவ குணாம்சமான பழிவாங்கும் பண்பு மேலோங்கியது. எனவே எந்தப் பிசாசுடனும் கூட்டுச் சேர்ந்து தமக்கிடையேயான பழிவாங்கும் படலத்தை விடாது தொடர்ந்தனர். 'இரத்தத்துக்கு இரத்தம்' என இது குரங்கின் வால் போல் நீண்டு தொடர்ந்த தொடர் கதையாகிவிட்டது.

## மனித - ஜனநாயக உரிமைகள் எதிர் சுயநிர்ணய உரிமை

### செண்பகன்

இத்தகைய பழிவாங்கும் படலம் என்பதில் அந்நிய நாட்டு உளவு நிறுவனங்களுடன் ஊடாடுவதில் தொடங்கி உள்ளூர்ப் பேரினவாத அரசாங்கங்களுடனும் அளவளாவி சமாதான சமரசம் செய்தாலென்ன யுத்த பேரிகை தொடர்ந்தாலென்ன அவ்வியக்கங்களுக்கிடையிலான பழிவாங்கல் படலம் தொடக்கமோ முடிவோ இன்றித் தொடர்ந்து செல்வது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கைக்கெதிரான அமெரிக்கா. இந்தியா. இலங்கை சிங்களப் பேரினவாத அரசுகளின் கோடிக்குள் கூடிக் குதூகலித்துக் குசலம் விசாரித்து போராடப் புறப்பட்டு அவரவர் இயங்க இணைந்த இயக்கங்களிடையேயான மோதல்-காட்டிக்கொடுப்பு-துரோகம் என்பன தமிழினத்தின் போரில் தொடர்கின்றன.

தமிழ்மக்கள் மத்தியில் ஒன்றுபட்டு நின்று- வேற்றுமையில் ஒற்றுமை கண்டு- பல்வேறு வர்க்கத்தரப்பினரையும் பரந்த ஐக்கிய வெகுசனத் தளத்தில் இணைத்து- அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் இந்தியப் பிராந்தியப் பேரரசினையும் சிங்கள பௌத்த பேரின வெறியையும் எதிர்த்து- ஒருமுகப்பட்டு நின்று சுயநிர்ணய உரிமைக்கான பொதுப் போராட்டத்தில் கைகோர்ப்பதை விடுத்து அந்நியருக்கும்- எதிரிகளுக்கும் நல்லவர்களாகவும் போராடப் புறப்பட்ட தம்மிடையே தம் சகோதரர்களையே பகைவர்களாகவும் கருதிக்கொள்ளும் தமிழ் விடுதலை வீரர்களின் விவேகம் எத்தன்மையது என்பதை விளங்கிக் கொள்வதில் அதிக சிரமம் இருக்காது.

அரசியலின் அரிச்சுவடி எதிரி யார்! நண்பன் யார் என்பதை வேறுபடுத்திப் புரிந்து கொள்வதிலேயே ஆரம்பமாகிறது. இந்த அரிச்சுவடியை நாம் அறியத் தவறியது மட்டுமன்றி இத்தனை இழப்புகளின் பின்னருங் கூட ஆராய மனமின்றி அடாவடித்தனம் புரிவதுடன் சகோதரர்களுக்கிடையே பழிவாங்கல் தொடர்கிறது. எதிரிகளுடன் கூடலும் குலாவலும் இனிதே நடைபெறுகின்றன.

மனித உரிமைமீறல் என்பதை ஒரு எதிரி தனக்குச் சாதகமாகவும் ஜனநாயக மீறலை இன்னொரு எதிரியோ- அதே எதிரியோ வேண்டியபடி தனக்கு வசப்படுத்தியும். உலகமயமாதலுக்கு உள்ளக சுயநிர்ணயமென அமெரிக்காவும் அதன் பெப்சி-கொக்கோகோலா முதலாளிக் கூட்டத்தினரும் தமது விருப்பிற்கேற்ப வளைக்கக் கூடியவாறு எமது போரும் சமாதானமும் தொடர்வது மிக ஆபத்தானதாகும்.

பொது உலகுக்குக் காட்டப் புறப்பட்டு அமெரிக்க மசாசூசெட்ஸ் மாநிலப் பிரகடனம் எனத்தொடங்கிய எமது சுயநிர்ணயப் போர் இப்போது அதை உலகுகளின் கழுகுப்பார்வைக்குள் அகப்பட்டது மாத்திரமன்றி விஷவட்டத்துக்குள் இழுத்து வீழ்த்தப் பட்டிருக்கிறோம். அபிமன்யு தனது யுத்த ஆசான் துரோணரின் பத்ம வியூகத்தில் மாட்டுப்பட்டதுபோல் இன்று விடுதலை இயக்கங்கள் சர்வதேசஏகாதிபத்திய வேடன் விரித்த வலைக்குள் அகப்பட்டுள்ளன.

இத்தகைய நெருக்கடியிலிருந்து மீள்வதெனில் குட்டி முதலாளித்துவ குரோத குணாம்சங்களிலிருந்து விடுபட்டு. பாட்டாளி வர்க்க விஞ்ஞானபூர்வமான- சர்வவியாபக உண்மையான மாக்ஸிச லெனினிச மார்க்கத்தில் அரசியலை அறிந்து கொள்வதும் அணிதிரள்வதுமே ஒரே வழியாகும்.

மக்களின் மனித உரிமை. ஜனநாயக உரிமையை பறித்து சுயநிர்ணய உரிமைக்குப் போராடுவதென்பது 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வேண்டுதல்' போலாகும்.

எனவே சுயநிர்ணய உரிமையின் சாராம்சம் என்பது சுயசார்புடன் மனித-ஜனநாயக உரிமைகளை மதிப்பது மட்டுமேயாகும். அதுவே அந்நிய தலையீடுகளிலிருந்து தவறுவதற்கும் நாம் அனைவரும் 'வேற்றுமையில் ஒற்றுமை' காணவுமுள்ள ஒரே மார்க்கமாகும். ●

# சதாமை ஆட்சி பீடமேற்றியதும் இறக்கியதும் அமெரிக்கா

## முன்னாள் சீ.ஐ.ஏ. அதிகாரி றோஜர் மொறிஸ் வாக்குமூலம்

கியூபாவில்1963ஆம் ஆண்டு ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்தும் முயற்சியில் தோல்வி கண்டது அமெரிக்கா. பின்பு ஈராக்கில் ஒரு இரத்தக் களரிச் சதியைச் செய்து அன்றைய சோவியத் ஆதரவு அப்துல் கரீம் காசிமின் ஆட்சி கவிழ்க்கப் பட்டது. காசிம் கம்யூனிஸ்ட்டுக்களை தனது அரசின் முக்கிய பதவிகளில் அமர்த்தியிருந்தார். அவர் இயந்திரத் துப்பாக்கியினால் சுட்டுக் கொலை செய்யப் பட்டார். இதன் மூலம் ஈராக் பாத் கட்சியின் கைகளிற் சென்றடைந்தது.

அச்சமயம் சதாம் கெய்ரோவில் சட்டம் பயின்று கொண்டிருந்தார். சீ.ஐ.ஏ. சதி செய்யத் திட்டமிட்டிருந்த இடங்களில் கெய்ரோவும் ஒன்றாகவிருந்தது.

ஐந்து வருடங்களின் பின் - 1968இல் - சீ.ஐ.ஏ. பாத் கட்சிக்குள் அகமட் கசன் அல்பக்கர் தலைமையில் ஒரு கிளர்ச்சியைத் தூண்டியது. அவரிடமிருந்து சதாம் அதிகாரத்தைக் கைப்பற்றி 1979இல் ஆட்சி பீடமேறினார்.

ஒரு கட்டத்தில் சதாம் சீ.ஐ.ஏ. யின் கொடுப்பனவு பட்டியலில் இடம் பெற்றிருந்தார்.

ஈராக்கில் நீண்ட சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்து ஒரு ஜனநாயக ஆட்சியைத் தற்போது ஏற்படுத்தியுள்ளதாகத் தம்பட்டம் அடிப்பவர்கள். இதே சதாம் ஆட்சியை அதிகாரத்தில் அமர்த்தியதும் அதே அமெரிக்காதான் என்பதைத் தற்போது கூறுவதில்ல்ல. இந்த அப்பட்டமான உண்மைகளை எல்லாம் தமது ராட்சத பிரசார ஊடகங்களின் இடை விடாத குரல்களாலும் எழுத்துக் களாலும் மறைத்துக் கொள்கின்றனர்.

மொறிசின் குற்றச்சாட்டைப் பற்றி சீ.ஐ.ஏ. பேச்சாளர் ஒருவரிடம் வினவிய போது அவர் எதுவும் கூற மறுத்து விட்டார்.

கம்போடியாவில் 1970இல் அமெரிக்க ஊடுருவலைத் தொடர்ந்து சீ.ஐ.ஏ. அதிகாரியான றோஜர் ●




# கணனி யுகத்தில் வர்க்கப் போராட்டம் ஓயுமா?

மாக்ஸியத்தின் முக்கியமான முடிபுகளில் ஒன்று இன்று வரையிலான நாகரிக மனித சமுதாயத்தின் வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்பதாகும். தனியுடமை தொடங்கிய காலந்தொட்டு வேலைப் பிரிவினை. மனிதர் உழைப்பை மனிதர் சுரண்டுதல் என்பன இருந்து வந்துள்ளன. பலருடைய உழைப்பைச் சிலர் சுரண்டுவதற்கு ஏற்படுத்தப்பட்ட சமுதாயங்களில் அரசு என்ற ஏற்பாடு தேவையாகியது. ஆதிக்கத்தில் உள்ள சிலரது நலன்களைக் காக்கவும் சுரண்டல் முறையைப் பேணவும் அரசு பயன்பட்டு வந்துள்ளது. அரசு என்ற ஒன்று இருப்பதற்கான காரணமே மனித சமுதாயம் ஏற்றத்தாழ்வின் அடிப்படை மீது அமைந்துள்ளதுதான்.

ஒரு குறிப்பிட்ட வர்க்க அமைப்பால் மேற்கொண்டு சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்ய இயலாது போகும் போதும் தொடர்ச்சியாகச் சமூகத்தின் மேம்பாட்டை உறுதி செய்ய இயலாது போகும் போதும் அது நெருக்கடிகட்கு உள்ளாகிறது. இது கலவரங்களாகவும் கிளர்ச்சிகளாகவும் வடிவம் பெறுகிறது. இங்கே சுரண்டப்படுகிற வர்க்கத்துக்கு எதிராகப் போரிடுகிறது. எனினும் சுரண்டப்படும் வர்க்கத்தால் சுரண்டும் வர்க்கத்தின் இடத்திற் தன்னை நிலைநிறுத்திச் சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்க இயலாது போனதையே அடிமைமுறைச் சமுதாயத்திலும் நிலமானியச் சமுதாயத்திலுங் கண்டிருக்கிறோம்.

உற்பத்திச் சாதனங்களின் தனியுடமை உள்ளளவும் மனித உழைப்பின் சுரண்டலை ஒழிக்க இயலாது. உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடமை என்ற சிந்தனை முதலாளியத்தின் தோற்றத்தின் பின்னரே இயலுமானது தற்செயலானதல்ல. அது தவிர்க்க இயலாத ஒன்று. ஒவ்வொரு சுரண்டும் வர்க்கமும் தன்னாற் சுரண்டப்படுகிற சமூகத்துக்குப் புதிய திறமைகளையும் அறிவாற்றலையும் வழங்குவதற்கு ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. உற்பத்தித் திறனைப் பெருக்கி லாபத்தை அதிகமாக்குவதே அந்த நோக்கு.

சுரண்டப்படும் வர்க்கம் அந்த அறிவைத் தனது உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு மட்டுமே பயன்படுத்துவதுடன் நிற்க இயலுமா? அது சுரண்டலைப் பற்றியும் சுரண்டுவதை அனுமதிக்கும் சமூக அமைப்பைப் பற்றியும் மேலும் அறிகிறது. அது தனது நலன்களையும் தனது விடுதலையையும் தனது அரசியல் அதிகாரத்தையும் நாடுகிறது. முதலாளிய சமூகத்தில் சுரண்டப்படும் வர்க்கமான தொழிலாளர் அனுபவிப்பதாகக் கூறப்படும் உரிமைகளும் சமூக வாய்ப்புகளும் அதற்கு முந்திய சமூகங்களில் உள்ளதை விட அதிகமானவையே ஆனாலும் அது முந்தைய சமுதாயங்களை விட அதிகளவில் நிச்சயமற்ற ஒரு எதிர்காலத்துடன் கடுமையான சுரண்டலுக்கு உட்படுகிறது என்பது அந்த உண்மையின் மறுபக்கம்.

மேலோட்டமாகப் பார்க்கிற போது தெரிகிற சமூக நலன்கள் யாவும். கூர்ந்து நோக்கினால் முதலாளியத்தின் ஆதிக்கத்துக்கும் லாபத்துக்கும் உதவும் தேவை கருதியே உள்ளதை நாம் காணலாம். தனது லாபத்துக்கு ஒரு சிறு தீங்கு ஏற்படும் போது கூட அதைக் காப்பதற்காக முன்னர் தான் வழங்கிய நலன்களை மறுப்பதற்கு முதலாளியம் தயங்கியதில்லை. இதை விளங்கிக் கொள்வதற்கு வரலாற்றில் வெகுதூரம் போகத் தேவையில்லை. ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் உழைக்கும் மக்கள் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வென்றெடுத்த பல உரிமைகள் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளில் பறிக்கப்பட்டுள்ளன. இவை மிக வஞ்சகமாகத். தொழிலாளர் இயக்கங்களையும் தொழிற்சங்கங்களையும் பலவீனப்படுத்துவதன் மூலம் நடந்தேறியுள்ளன.

மூன்றாமுலக நாடுகளில் இது மிகவும் அப்பட்டமாகவே நடந்துள்ளது. கடந்த கால் நூற்றாண்டினுள் மூன்றாமுலகின் தொழிலாளர் உரிமைகள். தேசிய இனங்களின் உரிமைகள் பெண்களின் உரிமை ஆகிய யாவும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதை நாம் காணலாம்.

முதலாளியம் தனது சுரண்டல் முறையை மாற்றி வருகிறது. தொழில்நுட்பத்தின் மூலம் மேலை நாடுகளில் உடல் உழைப்பின் சுமை குறைந்து 'அறிவு சார்ந்த' உழைப்பின் அளவு கூடியுள்ளது என்று கூறப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. மேலை நாடுகளில் குறைக்கப்பட்ட உடலுழைப்பினளவுக்கு மூலதனம் மூன்றாமுலக நாடுகளில் உள்ள உழைப்பைப் பறிப்பதற்கு முதலிடப்பட்டு வந்துள்ளது.

நவீன தொழில்நுட்பம். கணனிகளால் இயங்குகிற பொறிகள் போன்றவை உற்பத்தித் திறனைக் கூட்டுகிறது உண்மை. ஆனால் அவை செய்ததெல்லாம் உழைப்பின் தன்மையைச் சிறிது மாற்றியுள்ளதே ஒழிய உழைப்பின் தேவையை இல்லாமலாக்கியதல்ல.

எனவே நடந்துள்ளது என்னவென்றால் முதலாளியம் ஒரு புறம் ஒரு சில நிறுவனங்களது கைக்குள் முடங்கி வருகிறது. முதலாளியக் கம்பனிகளது தொகை சுருங்குகிறது. பெருமுதலாளியம் ஏகபோக முதலாளியமாகிறது. அது ஏகாதிபத்தியமாக வடிவெடுக்கிறது. அரச யந்திரத்தின் அனுசரணையுடன் அது இயங்குகிறது.

உலகெங்கும் பரவி வருகிற சில ராட்சசக் கம்பனிகள் சிறிய கம்பனிகளை அழிக்கின்றன அல்லது விழுங்கித் தம்முட் பகுதியாக்குகின்றன. மறுபுறம் எங்கே மிக மலிவாக உழைப்பைச் சுரண்ட முடியுமோ அங்கே தமது மூலதனத்தைக் கொண்டு செல்கின்றன. மூன்றாமுலக நாடுகளின் பொருளாதாரத்தின் மீது தமது இரும்புப் பிடியை அவை பலவாறு வலுப்படுத்துகின்றன. மூன்றாமுலக நாடுகளில் சுரண்டல் மிக உக்கிரமாக இருப்பதனாலேயே முதலாளிய நாடுகளிற் தொழிலாளர்களது குறைந்தபட்சத் தேவைகளையாவது நிறைவு செய்ய முடிகிறது.

மூன்றாமுலக வறுமைச் சூழல் சமூக மாற்றத்துக்கான கிளர்ச்சியாக மாறாமற் தடுக்கத் தேசியவாதம். பிரதேசவாதம். மொழி வெறி. மத வெறி போன்றவற்றை ஊக்குவிப்பதில் மேனாட்டுப் பெரு முதலாளியமும் அதற்குக் காவலாக உள்ள அரசுகளும் மும்முரமாகச் செயற்படுகின்றன. இதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களை ஒடுக்கப்பட்ட நிலையில் வைத்திருக்க அவற்றுக்கு முடிகிறது. அது போக. மூன்றாமுலக அரசியல் நெருக்கடி அரசியல் அகதிகளையும் பொருளாதார அகதிகளையும் உருவாக்குகிறது. இந்த அகதிகள் மேலை முதலாளிய நாடுகளில் மலிவான கூலி உழைப்பாளராகின்றனர். இவர்களும் உள்நாட்டுத் தொழிலாளரும் இணையவிடாது தடுக்க நிறவாதமும் பல்வேறு 'அந்நிய' விரோத ஃபாசிசச் சிந்தனைகளும் தட்டி விடப்படுகின்றன.

இதன் விளைவாகவே. இன்று உலகளாவிய முறையில் தேசிய இன அடிப்படையிலும் மத அடிப்படையிலும் பிரதேச அடிப்படையிலும் நாடுகளுக்கிடையிலும் மனிதர் மனிதருடன் மோதுகின்றனர். இதன் மூலம் அடிப்படையான பிரச்சனைகள் மறக்கடிக்கப்படுகின்றன. உண்மையாகவே தம்மை ஒடுக்குவது யார் என்பது பற்றிய அக்கறை இல்லாமல் மனிதர் தம்மிடையிலான அற்ப வேறுபாடுகளை முன்னிட்டு மோதுகின்றனர். இதற்கான உள்ளூர் அரசியல் நிறுவனங்கள் யாவும் இன்று மேலைநாடுகளின் பூரண ஆசியுடனேயே இயங்குகின்றன.

வர்க்கப் போராட்டத்தில் முதலாளியம் தொழிலாளவர்க்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில். மற்றைய சமூக ஒடுக்குமுறைகளை ஊக்குவித்து வளர்த்து விடுகிறது. இதற்கு உதாரணமாகச் சொல்வதானால் நூறாண்டுகள் முன்பு பிரித்தானியக் கொலனி ஆட்சிக்கு எதிரான சக்தியாக இருந்த சிங்கள பௌத்தமும் இந்திய இந்து மதச் சார்பான தேசியவாதமும் இன்று மேலை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

www.padippakam.com



# சாவதற்கன்றி உயிர்வாழ்வதற்காய் விழித்தெழுவோம்

## கொலைக் கலாச்சாரத்திற்கு முடிவு கட்டுவோம்

- எஸ். மூர்த்தி -

அண்மைக் காலமாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும். ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி) உறுப்பினர்களும். அரசாங்க உளவுப்பிரிவைச் சேர்ந்தவர்களுமென பலர் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். அவர்கள் பேரினவாதத்திற்கு எதிராக அவர்களது இயக்க வாழ்க்கையை தொடங்கியதாக கொள்ளப்பட்டாலும் பின்னர் பேரினவாத அரசாங்கங்களுடன் சேர்ந்தது மட்டுமன்றி அவ்வரசாங்கங்களின் நிகழ்ச்சி நிரல்களை ஏற்றுக் கொண்டும் நடக்கலாயினர்.

தமிழ் இயக்க அரசியலில் கடந்த 20 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக அரசியல் முரண்பாடு காரணமாக பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வித்தியாசமான அரசியல் கருத்துக்களை கொலைகள் மூலம் இல்லாமலாக்கலாம் என்ற நம்பிக்கையிலும் துரோக நடவடிக்கைகள். காட்டிக் கொடுப்புகள் எனப்படுபவற்றை தடுத்து நிறுத்த முடியுமென்ற நோக்கத்திலும் தனிநபர் அல்லது அரசியல் படு கொலைகள் தொடர்கின்றன.

பயங்கரவாதத்திற்கும் விடுதலைக்கான அல்லது புரட்சிகர ஆயுத நடவடிக்கைகளுக்கும் வித்தியாசம் இருப்பது போன்று தனிநபர் அல்லது அரசியல் படுகொலைகளுக்கும் புரட்சிகர அல்லது விடுதலை நடவடிக்கைகளினால் உயிர்க்கொலை இடம்பெறுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு நடவடிக்கை புரட்சிகர நடவடிக்கையா அல்லது பயங்கரவாதமா என்பது தனிநபர் படுகொலையா அல்லது போராட்ட நடவடிக்கைகளினால் இடம்பெற்ற கொலையா என்பது பெரும்பாலும் வெளிவெளியாகத் தெரியும். சில வேளைகளில் அவற்றைத் தீர்மானிப்பதற்கும் சந்தர்ப்பத்தையும் நிலைமைகளை நோக்க வேண்டியிருக்கும். சில வேளைகளில் தவறுகளாகவும் இருக்கும்.

எது எவ்வாறெனினும் பயங்கரவாதமும் தனிநபர் அல்லது அரசியல் படுகொலைகள் விடுதலைக்கான அல்லது புரட்சிகர வழிமுறையாகாது. அவற்றினால் எந்தவொரு அரசியல் இலக்கும் விடுதலையும் அடையப்பட முடியாது. அந்நடவடிக்கைகளுக்கு முடிவும் ஏற்படாது. அவற்றினால் போராட்டத்திற்கான ஆதரவை விட எதிர்ப்பே அதிகரிக்கும். போராட்டத்தை பலவீனப்படுத்த எதிரிகளுக்கு வாய்ப்பு அதிகமாகிவிடும்.

விடுதலைப்போராட்டம் எவ்வளவுக்கெவ்வளவு கறாராக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு போராட்டம் வெற்றியை நோக்கி முன்னேறும். அதேபோன்று போராட்டம் எவ்வளவுக்கெவ்வளவு ஜனநாயகப்படுத்தப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மக்களை அணிதிரட்டி போராட்டத்தைப் பலப்படுத்த முடியும். போராட்டத்தைப் பலப்படுத்துவதன் மூலமே காட்டிக்கொடுப்பு. துரோகம் என்பவற்றை அரசியல் ரீதியாக தோற்கடிக்க முடியும்.

பயங்கரவாதமும். தனிநபர் கொலைகளும் "எதிரிகளையும் துரோகிகளையும்" அச்சுறுத்தும் நடவடிக்கைகளாக மட்டுமே இருக்கும். போராட்டத்திற்குப் பலத்தையும் சேர்க்காது. விடுதலையை அண்மிக்கவும் முடியாது.

இவையெல்லாம் ஒரு அமைப்பின் கொள்கையையும் நடைமுறையையும் பொறுத்ததாகும். அந்த அடிப்படையிலேயே விளைவுகளும் அமையும்.

தமிழ் இயக்கங்களினால் "தமிழ்த் துரோகிகள்" என்று பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இயக்க முரண்பாடுகளினால் இயக்கங்களுக்கிடையே நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். ஒரே இயக்கத்திற்குள்ளும் நூற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர். ஆயுதப்படையினராலும் பலர் கொலை செய்யப்பட்டனர்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பல தமிழ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஈ.பி.டி.பி.. ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி). ரெலோ உறுப்பினர்களும் ஏற்கனவே தமிழ் இயக்கங்களில் உறுப்பினர்களாக இருந்து பின்னர் அரசாங்கத்தின் உளவுப் பிரிவில் வேலை செய்கிறவர்களில் பலரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் புலிகள் இயக்கமே பொறுப்பாகும் என்று ரெலோ தவிர்ந்த தமிழ் அமைப்புக்கள் கூறுகின்றனர். சில ரெலோ உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் புலிகளுக்கு தொடர்பில்லை என்று ரெலோகூறியுள்ளது. அரசபடைகளுடன் இயங்கும் தமிழ் அமைப்பைச் சேர்ந்தவர்களே பொறுப்பு என ரெலோகூறியுள்ளது.

ரணில் அரசாங்கம் புலிகள் மீது வெளிப்படையாக குற்றம் சாட்டவில்லை. ஜனாதிபதி சந்திரிகா புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இடம்பெற்று வரும் கொலைகளுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை நடத்தும்போது அரசாங்கங்கள் இடம்பெறும் கொலைகள் பற்றி பெரும்பாலும் மௌனம் சாதிப்பதுண்டு. யுத்தம் நடைபெறும் போது எல்லாவற்றுக்கும் புலிகளே பொறுப்பு என்று கூறுவது உண்டு.

சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் தானே பொறுப்பு எனக் கூறிக் கொள்ள அரசுகொலைகளைச் செய்பவர்களை கண்டுபிடிக்க வேண்டும். சட்டப்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். கொலைகள் இடம்பெறாது தடுக்கவும் வேண்டும். இல்லாவிட்டால் ஆட்சியிலிருந்து ஒதுங்கிக் கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு கொலையையும் புலிகள் இயக்கமே செய்திருக்கிறது என்று புலிகளுக்கு எதிரான அமைப்புகளும். விசேடமாக யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆசிரியர்கள் எனப்படுபவர்களும் அமைப்புகளும் கண்டித்து அறிக்கை விடுகின்றனர். பிற அமைப்புகளும் அவ்வாறே கண்டிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். புலிகள் இயக்கம் ஒவ்வொன்றையும் மறுத்து வருகிறது. புலிகள் இயக்க ஆதரவாளர்கள் புலிகள் இயக்கத்திற்கும் கொலைகளுக்கும் சம்பந்தமில்லை என்று கூறுவதுடன் பிற அமைப்புகளும் நபர்களும் அவ்வாறே கூற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலை பேரினவாதத்திற்கும் பெருமுதலாளியத்திற்கும் இனவாதத்திற்கும் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்துக்கு தொடர்ந்தும் ஆரோக்கியமாக இருக்கப் போவதில்லை.

சிங்கள தேசியவாத அரசியலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க முதல் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 1971. 1988. 1989 கால ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது பலர் ஜே.வி.பி.யினராலும் அவர்களுக்கு எதிரானவர்களாலும் எதிரும் புதிருமாக கொல்லப்பட்டனர். ஐ.தே.கட்சி. பொதுசன ஐக்கிய முன்னணி முரண்பாடுகளாலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்த தென்மாகாண அமைச்சர் ரஞ்சித் என்பவர் பின்னர் பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மேல்மாகாண சபை உறுப்பினர் சுணில் மெண்டிஸ் என்பவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதைவிட தனிப்பட்ட குரோதங்களினாலும் ஒப்பந்தக்காரர்களினூடாக பலர் கொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

உயிர் வாழ்வதற்காய் விழித்தெழவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவசியமாகிறது. அரசியல் வாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கொலைக் கலாசாரத்தினை அகற்றுவதற்கு உயிர்வாழ்வை உறுதி செய்வதற்கான பண்பாட்டை கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது.

கொலைகளுக்கு எதிர் கொலைகள்.

ஒப்பந்தக் கொலைகள். கொலைஞர்களைக் கண்டித்தல். கொலைஞர்களைப் பாதுகாத்தல் போன்ற கொலைகளை மையப்படுத்திய பண்பாட்டிலிருந்து விட்டகழ்வோம்.

உயிர்வாழ்வை மையப்படுத்திய பண்பாட்டை கட்டி வளர்ப்போம். ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்போம். எதிர் நடவடிக்கைகளாலுமன்றி பண்பாட்டு வேலைகளினூடாக கொலைப் பண்பாட்டை மக்களின் வாழ்விலிருந்து அகற்ற முடியும். அதற்கான பண்பாட்டு இயக்கங்களை பல முனைகளிலும் மட்டங்களிலும் முன்னெடுப்போமாக. ●



அண்மைக்காலங்களில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் புளொட் உறுப்பினரை முதலாவது படத்திலும். ஈ.பி.ஆர்.எல்.எப்.(வரதர் அணி) சிரேஷ்ட தலைவர்களின் ஒருவரான ந.சுபந்திரனை இரண்டாவது படத்திலும். தென் மாகாண சபை அமைச்சர் ரஞ்சித் அவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

---

### தமிழ் ஊடகங்கள் பற்றி....

7ஆம் பக்க தொடர்ச்சி...

நமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதும் அதேவேளை ஊடகங்களின் பிற்போக்கான அரசியலை விமர்சிப்பதும் ஒரே வேளையில் முன்னெடுக்கப்பட வேண்டும். இங்கே பாராளுமன்ற அரசியல் மேடையையும் பாராளுமன்றத்தையும் எவ்வாறு ஒரு புரட்சிகர இயக்கம் அல்லது கட்சி பயன்படுத்துகிறதோ அவ்வாறே ஊடகங்களையும் பயன்படுத்த வேண்டும்.

ஊடகங்களை நாம் பயன்படுத்தும் போது ஊடகங்களும் நம்மைப் பயன்படுத்துகின்றன என்பது பற்றி நாம் அசட்டையாக இருக்க முடியாது. எந்த ஊடகத்தின் மூலமும் நமது கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கும் போதும் அந்த ஊடகத்தின் மூலம் எவரைச் சென்றடைய விரும்புகிறோம் என்பது பற்றியும் எவரைச் சென்றடைகிறோம் என்பது பற்றியும் நமக்குத் தெளிவு அவசியம். இந்த அடிப்படையிலேயே நாம் கூறுகிற விடயத்தின் உள்ளடக்கமும் கூறுகிற முறையும் அமைய இயலும்.

ஒரு ஊடகத்தின் தன்மைக்கேற்றபடி நமது கருத்து வெளிப்பாட்டு முறை வேறுபடலாம். ஆனால். நமது கருத்துக்கள் நிலைப்பாட்டினின்று வழுவுமானால். அது தவறானது. அதன் மூலம் ஊடகங்கள் நம்மைப் பயன்படுத்த நாம் அனுமதிக்கின்றவர்களாவோம்.

சில இடதுசாரித் தலைவர்களிடம் விளம்பர மோகம் அதிகம். எங்கு மேடை கிடைத்தாலும் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ள முந்திக் கொள்ளுகிற இவர்களது தன் முனைப்பை ஊடக உரிமையாளர்கள் எளிதாகவே அறிந்து கொள்கிறார்கள். எனவே தங்களுடைய எதிரிகளைத் தாக்குவதற்கு இத்தகைய இடதுசாரித் தலைவர்களைப் பாவிக்க அவர்கள் தவறுவதில்லை. இதன் மூலம் தலைவர்கட்குத் தனிப்பட்ட முறையில் விளம்பரம் கிட்டினாலும் அவர்களது கட்சியோ இயக்கமோ கொள்கையோ அந்த ஊடக வசதி மூலம் பயனடைவதில்லை. எப்போது ஒரு ஊடகம் ஒரு கட்சியோ அதன் தலைமையோ தனது தயவிற் தங்கியிருப்பதாக எண்ண இடமேற்படுகிறதோ. அப்போது ஒரு கட்சி தனது சுயாதீனத்தையும் கொள்கையையும் வற்புறுத்தத் தவறுமானால். அப்போதே அக் கட்சி தனது கொள்கையைச் சமரசம் செய்யத் தொடங்கி விடுகிறது.

ஒரு புரட்சிகரக் கட்சியின் பிரசார முறைக்கும் அதன் அரசியலுக்கும் அடிப்படையான ஒரு ஒற்றுமை இருக்க வேண்டும். அதன் அரசியல் வெகுசன அரசியல் என்றால். அதன் பாதை மக்கள் புரட்சிகரப் பாதை என்றால். அதன் பிரசார முறையின் அழுத்தமும் முதலாளிய ஊடகங்களினின்று விலகியே அமைய முடியும்.

கட்சிப் பத்திரிகை. துண்டுப் பிரசுரங்கள். பொதுக் கூட்டங்கள் என்பவற்றை விட முக்கியமாக. மக்கள் மத்தியில் கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதும் செய்திகளையும் கருத்துக்களையும் சிறு சிறு குழுக்களாகக் கூடி விவாதிப்பதும் விமர்சிப்பதும் முக்கியமானவை. மக்களை அரசியல் மயப்படுத்துவதில் கீழ்மட்டப் பணிகளின் முக்கியத்துவம் பெரிது. இதன் மூலம் முதலாளிய ஊடகங்களின் பிரசாரத்துக்கு எதிரான மாற்றுப் பிரசாரம் புரட்சிகர கட்சியால் மட்டுமன்றிப் புரட்சிகரக் கட்சியின் வழிநடத்தலின் கீழ் வெகுசன மட்டத்திலிருந்தே எழுவது இயலுமாகிறது.

வாசிப்பு என்பது அந்தரங்கமான விடயமாக இல்லாமல் மற்றவர்களுடன் பகிரக் கூடிய ஒன்றாக விரிவுபடும் போது. படைப்புக்கும் வாசகனுக்கும் உள்ள உறவுக்கு ஒரு சமூகப் பரிமாணம் ஏற்படுகிறது. இது கல்வியறிவு குறைந்த பகுதிகட்கு அவசியமான ஒன்றாயினும் பிற இடங்களிலும் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒலிப் பேழைகள். வீடியோச் சித்திரங்கள் என்பனவும் பயனுள்ள மாற்று வசதிகளாகும். முதலாளிய அடக்குமுறை அரசு ஒன்று உருவாகும் வரை நாம் மாற்று வழிகளைத் தேடாமலிருக்க முடியாது. எப்போதும் எந்த நேரத்திலும் ஒரு அடக்குமுறை ஆட்சி ஏற்படலாம் என்பது நமது மனதில் இருத்தப்பட வேண்டிய விடயமாகும். வெளிவெளியாகக் கருத்துக்களைக் கூறவும் பிரசுரிக்கவும் இயலாத நிலை ஒன்று வரு முன்னே அதை எதிர்கொள்வதற்கான மாற்று வழிகளை நாம் விருத்தி செய்ய வேண்டும். அவை முதலாளிய 'கருத்துச் சுதந்திரம்' உள்ளபோது வெளிவெளியாகவும் அச் சுதந்திரம் முற்றாக மறுக்கப்படும்போது தலைமறைவாகவும் இயங்கக் கூடியவையாக அமைவது முக்கியமானது.

உலகமயமாதலுக்கு எதிரான போராட்டத்தில் இணையம் (இன்றர்நெற்) பயன்பட்டுள்ளது உண்மை. அது இனிப் பயன்படும் போது கூடிய கண்காணிப்பு மட்டுமன்றித் திட்டமிட்ட குழப்பல் வேலைகட்கும் ஆளாகக் கூடும். எனவே இணையத் தளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவது சட்டரீதியான வேலைகள் போன்று பயனுள்ளது. அதையே நம்பியிருப்பது மற்ற வேலைமுறைகளை நிராகரிப்பது போன்றது.

நமது அணுகுமுறை எவ்வாறிருக்க வேண்டுமென்பதை நமது ஐக்கிய முன்னணித் தந்திரோபாயங்களுடன் ஒப்பிடுவது பயனுள்ளது. எப்போது. எவ்வாறு நம்மால் மாற்றுக் கருத்துடையவர்களுடனும் சில வேளைகளில் இணைந்து செயற்பட முடிகிறது? ஒற்றுமைக்கான அடிப்படை என்ன? வேறுபாடுகள் எவ்வாறு கையாளப்படுகின்றன? இக் கேள்விகள் முதலாளிய வெகுசன ஊடகங்களைக் கையாளும் விடயத்துக்குரியன.

எவ்வாறு ஒரு கட்சி தனது அரசியற் தளத்தை விரிவுபடுத்துகிறது? எவ்வாறு தனது அரசியல் நிலைப்பாட்டில் உறுதியாக நின்று வெகுசன அரசியலை முன்னெடுக்கிறது? இவை ஒரு கட்சி தனது கட்டுப்பாட்டில் உள்ள தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவது தொடர்பானவை.

எந்தவொரு கேள்விக்கும் முன்கூட்டியே விடைகளை யாரும் வைத்திருக்க இயலாது. ஒரு புரட்சிகர இயக்கமும் ஊடகங்களும் பற்றிய கேள்வி நடைமுறை சார்ந்தது. அந்த நடைமுறையே சரியான அணுகுமுறை எது. பிழையானது எது என்று நமக்கு உணர்த்துகிறது.

www.padippakam.com



# எழுத்தாளர் தெணியான் பற்றிய ஒரு மதிப்பீடு



### ஆசிரியர் குறிப்பு

நடைமுறையில் இருந்துவரும் மணிவிழாக் கலாசாரம் பற்றி புதியபூமி சாதகமான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. நிலவுடமை வழிவந்த மேட்டுக் குடியினர் மத்தியில் பெருவிழாவாக நடாத்தப்படும் மணிவிழாப் பாணியில் மக்கள் எழுத்தாளர்களுக்கும் நடாத்த வேண்டுமா என்பது ஒரு கேள்வியாகும். அதற்குப் பதிலாக ஒரு எழுத்தாளனின் அல்லது கல்வியாளனின் சமூகப் பங்களிப்பை புதிய தலைமுறையினருக்கு ஒரு சரியான மதிப்பீடாக்கி எழுத்தாகவும் எளிமையான நிகழ்வாகவும் கொடுப்பது பற்றி சிந்திப்பது ஒரு மாற்றுச் சிந்தனையாக அமைய முடியும். மணிவிழாக் கண்ட எழுத்தாளர் "தெணியான்" பற்றிய ஒரு மதிப் பீட்டை சுவிஸ் நாட்டிலிருந்து பொதிகை பி .ஜெயா என்பவர் அனுப்பியிருக்கிறார். அவரது நீண்ட மதிப்புரையிலிருந்து ஒரு பகுதியை வாசகர்கள் முன் வைக்கின்றோம்.

முற்போக்கு இலக்கிய உலகிலே இலங்கையைத் தவிர்த்து இந்தியா. மலேசியா. சுவிஸ். பிரான்ஸ். கனடா போன்ற பிற நாடுகளிலும் அதிகம் பேசப்படுபவர் "தெணியான்" ஆவார்.

இவரது பேனா கிட்டத்தட்ட 115 சிறுகதைகள். 6 நாவல்கள். குறு நாவல்கள். கதைகள். கட்டுரைகள் என்பவற்றை வடித்துள்ளது.

"தெணியான்" தான் சார்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக! இயன்ற வரை கருத்தியல் ரீதியான காரண காரியங்களை தனது கதைகளில் கருவாக்கம் செய்து பெற்றெடுத்துள்ளதை காண முடிகிறது. "கழுகுகள்" என்ற நாவல் ஓர் தாழ்த்தப்பட்டவரை ஆஸ்பத்திரி டாக்டர் நடாத்திய இழிநிலையான கேவலத்தை உலகுக்கு தெரியப்படுத்துகிறார். டொக்டர் முருகானந்தம் அவர்கள் "கழுகுகள்" நாவலில் சீறிப்பாயும் தெணியானை பார்த்தோம் எனக் கூறினார்.

சாதியத்தின் கொடுமை. அரக்கத்தனமான அடக்குமுறை. ஜனநாயகப் பண்புகட்கு மதிப்பளிக்காத ஏற்றத் தாழ்வு செயற்பாடுகளை எதிர்த்து குரல் கொடுப்பதோ. பேனாவின்மையை சிந்தவிடுவதில் தப்பிருப்பதாக உணர முடியவில்லை.

ஓர் ஒடுக்கப்பட்டவரால்தான் தனது சமூகம் பற்றிய ஆய்வுகளை. வரலாற்றுப்பாதிப்புகளை சரியாக பதிவாக்கம் செய்ய முடியும். அந்த வகையில் தெணியானை முதன்மைப் படுத்தலாம்.

தீண்டாமை என்பது குறிப்பிட்ட சமூகத்து மக்களினது கடும் போராட்டங்களினால் இன்றைக்கு பெருமளவு நசுக்கப்பட்டுவிட்டது. இதற்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முக்கிய பங்காற்றியது. S.T.நாகரட்ணம். கிருஷ்ணபிள்ளை ஆசிரியர். செந்திவேல் போன்றவர்களும். பேராசிரியர் கைலாசபதி. முருகையன். சண்சார்பு கம்யூனிஸ்ட்டுக்கள் போன்ற "உயர் சாதியை" சார்ந்தவர்களும் பங்காற்றியுள்ளதை நினைவுகூறல் சிறந்தது.

"வஞ்சி" என்ற சிறுகதையில் பிள்ளைகளை காலை உணவை கொடுத்து பாடசாலைக்கு அனுப்புவதற்காக கைக்குழந்தையுடன் அப்பக்கடைக்கு வந்து புட்டு கேட்டபோது! அப்பக்கடை கிழவி சுளகில் புட்டை அவித்து கொட்டியபடி இருக்கிறாளே தவிர அவளுக்கு பிட்டு கொடுக்காது எல்லா பிட்டையும் பெட்டியினுள் அடுக்கி தனது வியாபாரத்தை நோக்காது கடற்கரையில் நிற்கும் "போராளிகட்கு" கொடுப்பதற்கு எடுத்துச் செல்லும் காட்சியும். பொதுவுடமை பேசி தங்களை வளர்த்துக் கொண்டவர்களையும். ஊரைப் பழித்தவர்கள் தனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தும்! அவர்களும் தனது பேனாவுக்கு விதிவிலக்கல்ல என்பதை தெணியானின் எழுத்துக்களில் காண முடியும். அடிப்படையில் "தெணியான்" ஓர் ஒடுக்கப்பட்டவர். ஒடுக்குமுறைக்கு எதிரான ஓர் "போராளியாகவே" பார்க்க முடிகிறது.

"சாதியம்" என்பது கடந்த கால விடயம். இதைப்பற்றி "தேசிய விடுதலை" கால கட்டத்தில் பேச வேண்டுமா? இது போராட்டத்தை பின்தள்ளமாட்டாதா? என்ற வினா எழுகிறது. சாதியம் பலருக்கு அனாவசிய மான விடயமாகத் தெரியலாம். ஆனால் அதைச்சார்ந்த "சமுதாய மக்கட்கு" அவசியமான விடயமாக இருப்பதை "தெணியானின்" பேனா குறிப்பிட்டு நிற்கிறது.

ஐரோப்பாவிலே சாதிய அபிமானிகள் யாழ். சாதி அடக்குமுறை. கொலைகள் பற்றி இங்குள்ள பட்டிமன்றம். கருத்தாடல் நிகழ்வு மூலம் ஐரோப்பிய மக்கட்கு தெரியப்படுத்தி வருகிறார்கள். இந்நிகழ்வு பலரது வரவேற்பை பெறத் தொடங்கி விட்டது.

"தெணியான்" மேன்மேலும் இலக்கிய உலகிற்கு ஆக்கமான படைப்புக்களை கொடுக்க வேண்டும்.

சுவிற்சலாந்து
பொலிகை ப. ஜெயக்கொடி

## யாழ். குடாநாட்டு..

7ஆம் பக்க தொடர்ச்சி...

இலுப்பை. புன்னை. வேம்பு மர நெய்களை உற்பத்தி செய்யும் முயற்சியைத் தொடங்கினால் பெருமளவில் தேங்காய். எள் நெய்களை மீதப்படுத்த லாம். இறக்குமதி செய்யும் தாவர நெய்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

### (இ) இரசாயனத் தொழில்கள் :

### (i) சுண்ணாம்புக்கல்

யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணக்கல் பாறைகளால் ஆனது. பயிர்ச் செய்கைக்காக கலட்டிப் பூமியை (நிலமட்டத்திற்கு மேலாக சுண்ணம் பாறைகள் அமைந்துள்ள நிலத்தைக் கலட்டிப் பூமி என்பர்) அகழும்போது பெருமளவில் சுண்ணத் துகள்கள் கிடைக்கப் பெறுகின்றன.

சுண்ணாம்புக்கற்கள் சீமெந்து தயாரிக்கத் தேவையான மூலப் பொருளாகிறது. இப்படிப் பயன் தரும் பாறைகளை. கற்களை வீதிகள் அமைக்கவும் வீடுகள் கட்டவும் வீணடிக்கிறோம். வீதிகளை இலங்கையின் பிற பகுதிகளில் அமைக்க உபயோகிக்கும் கருங்கற்களையே குடாநாட்டு மக்களும் பயன்படுத்தி வந்தால் வீதிகள் நீண்ட நாட்களுக்கு உறுதியாகவிருக்கும். மழை காலங்களில் கரைந்து போய்விடாது. இது போலவே வீடுகளைக் கட்டுவதற்கும் மற்றைய பகுதிகளில் செய்வது போல செங்கற் களைப் பயன்படுத்தினால் சீமெந்து போன்ற அந்நியச் செலாவணியைத் தேடித் தரும் தொழிலிற்கு மட்டும் உபயோகிப்பது நல்லது. செங்கற்கள் கொண்டு வீடுகளைக் கட்டுவது செலவு குறைவானது. குடாநாட்டிலும் செங்கல்லை உற்பத்தி செய்ய முயலலாம். இப்போது வன்னியில் முத்தையன் கட்டுக் குளத்தருகே ஓடு உற்பத்தி நடைபெறுகிறது. இது போல ஓடு. செங்கல் உற்பத்தியை குடாநாட்டில் (ஒட்டிசுட்டான் பகுதியில்) நடவடிக்கை மேற்கொள்ள யோசிக்கலாம். பனிக்கட்டி உற்பத்தித் தொழிற்சாலைக்கு வேண்டிய உப பொருள்களில் ஒன்று கல்சியம் குளோரைட்டு. இதனை எமது பகுதியில் பெறப்படும் சுண்ணாம்புக்கற்களைக் கொண்டு தயாரிக்கலாம்.

### (ii) கண்ணாடித் தொழிற்சாலை

வல்லிபுரக் கோவில் (பருத்தித்துறை) சூழ்ந்துள்ள பகுதியில் காணப்படும் மணல் சிறந்த கண்ணாடியைத் தயாரிக்கத் தகுதி வாய்ந்தது என்று கருதப்படுகிறது. யாழ்ப்பாணப் பகுதிகளில் உள்ள கண்ணாடித் தொழிற்சாலைகள் அநேகம் உடைந்த கண்ணாடியை உருவாக்கிப் பெறப்படும் கண்ணாடிப் பொருள்களையே தயாரிக்கின்றன. ஆனால் பலவகை வடிவக் (Plate glass) கண்ணாடி தயாரிக்க உவந்த மணல் வல்லிபுரக் கோவிலருகே காணப்படுகிறது. இந்தப் பாரிய முதலீடு கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தொழிலை தனியாரைக் காட்டிலும் அரசு மேற்கொள்வது உயர்ந்தது.

### (iii) வாத்திய உபகரணங்கள்

நாதஸ்வர. தவில் கலைஞர்கள் பெருந் தொகையில் வாழ்வது இணுவில். அளவெட்டி ஆகிய ஊர்களில் மட்டுமே. ஆனால் இவர்கள் தங்கள் தவில். நாதஸ்வரம் ஆகியவற்றிற்கான உதிரிப் பாகங்களையும் வாத்தியங்களையும் தென்னிந்தியாவிலிருந்தே தருவிக்கின்றனர். இதன் காரணமாக இத் தொழிலுக்குத் தேவையான வாத்தியங்களையும் உதிரிப்பாகங்களையும் எங்கள் பகுதியிலேயே உற்பத்தி செய்ய முயலலாம். இதனால் அந்நியச் செலாவணியை ஓரளவிற்கு மீதப்படுத்தலாம்.

### (iv) ஆயுள்வேத, சித்த வைத்திய மருந்துகள்

இந்த இரு முறைகளுக்கும் தேவைப்படும் மருந்துகள். மூலிகைகளிலிருந்தே பெறப்படுகின்றன. இந்த மூலிகைகள் இயற்கையாக உற்பத்தியாகின்றன. இவற்றைக் கொண்டே மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் இவை தற்போது அருகி வந்துவிட்டன. இதனால் காலப் போக்கில் இந்த வைத்திய முறைகளும் இப்பகுதியில் மறைந்துவிடும். ஆகவே இவற்றை நிலைநிறுத்த மூலிகைத் தோட்டங்களை வளர்க்க வேண்டும். அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். வைத்தியர்கள் மூலிகைத் தோட்டங்களுக்கும் சென்று தங்களுக்குத் தேவையான மருந்து மூலிகைகளை வாங்கிக் கொள்ளலாம். தாளை. கற்றாளை போன்றவையும் பூமத்தை போன்றவையும் காலப்போக்கில் அருகிவிடும். இருமலுக்குப் பயன்படுத்தப்படும் ஆடாதோடையும். நொச்சி போன்றவையும் காலம் செல்லச் செல்ல இல்லாது போய்விடும். ஆகவே இவற்றை எல்லாம் நாம் பாதுகாக்க வேண்டும். துளசி. வில்வம் போன்றவை வழிபாடு செய்து வருபவரால் அழியாது தொடர்ந்து நிலைபெற்று இருக்கின்றன. இவை கூட அநேக மருந்துப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன. திரிகடும் என்கிற மூன்று பொருள்களிலிருந்தும் மருந்துகள் தயாரிக்கலாம். ஆங்கில. ஹோமியோபதி. யூனானி மருந்துகளும் தாவர மூலிகைகளிலிருந்து பெறப்படுகின்றன.

### (v) நறுமணவீட்டும் மலர்த் தோட்டங்கள்

மலர்ச் செடிகளை வளர்க்க உலர் வலயப் பிரதேசங்கள் பொருத்தமானவை. நறுமணமூட்டும் மலர்ச் செடிகளை வளர்த்து மலர்களைச் சேர்த்து விற்பதாலும். வாசனைச் சாறுகளைப் பெற்றும் விற்பதாலும் அதிக லாபம் பெறலாம். இவற்றைப் பயன்படுத்தும் பழக்கத்தை யுவதிகளுக்கு ஊட்டினால் இறக்குமதி செய்யப்படும் வாசனைப் பொருள்களில் நாட்டம் குறையலாம். ●

## உதவும் கரங்கள்..

4ம் பக்க தொடர்ச்சி..

அமெரிக்கா இந்த மண்ணில் அமைதியை விரும்புகிறது என்றால் அதன் காரணம் போர் மூலம் தனக்காகச் சாதிக்கக் கூடியதை அது சாதித்து விட்டது என்பதும் இனியும் போர் தொடருமனால் அது தனக்குச் சாதகமான ஒரு ஆட்சி தொடராமற் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை வரலாம் என்பதுமே தான். என்றாலும் இந்த அமைதிக்குப் பிந்திய சூழல் தனது பொருளாதாரச் சுரண்டலுக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதிலும் அது கவனமாக இருக்கிறது. இதையே அதன் கடந்த ஒரு வருட கால நடத்தை காட்டி வந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை. விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த இயலாதுபோன காலந்தொட்டுச் சிங்களப் பேரினவாத ஆட்சியுடன் சமரசம் செய்கிற ஒரு போக்கு ஓங்கத் தொடங்கியது. அமெரிக்க ஏகாதிபத்தியம் போலவே இந்திய மேலாதிக்கமும் ஒரே சமயத்தில் எதிரும் புதிருமான பலவேறு சக்திகளை ஊக்குவித்தே வந்துள்ளது. விடுதலைப் புலிகளைத் தவிர்த்துத் தமிழ்த் தேசியவாதம் பேசுகிறவர்களை எப்படியாவது தனது கட்டுப்பாட்டுள் கொண்டுவர முடியும் என்ற நிச்சயமும் சிங்களப் பேரினவாதிகளைத் தனக்கு நெருக்கமாக்கிக் கொள்ளும் தேவையுமே இந்தியாவின் கடந்த பதினைந்தாண்டு கால இலங்கைக் கொள்கையின் அடிப்படையாகும்.

இலங்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் வருவதனால் தனது பிராந்திய மேலாதிக்க நோக்கமும் பொருளாதார ஆதிக்கமும் பலவீனமடையும் என்பதால் ஒரு புறம் அமெரிக்காவுக்கு ஆப்பு வைக்கிற காரியங்களிலும் மறுபுறம் அமெரிக்காவை நேரடியாகப் பகைக்காமலும் இந்திய ஆட்சியாளர்கள் நடந்து கொள்கிறதை நாம் காணுகிறோம்.

இலங்கையின் சமாதான முயற்சிகளைக் குழப்புவதில் இந்தியாவின் கவனம் அதிகமாக இருந்ததைப் பாவித்து ஜப்பான் சமாதான முயற்சிகளில் தனது பங்கை அளிக்க முன்வந்தது. அதன் நோக்கங்களை நாம் எந்த விதமான நல்லெண்ணத்தினதும் பௌத்த மதத்தினதும் அடிப்படையில் வைத்துக் குழப்பிக் கொள்ளலாகாது.

இந்தியா இலங்கையில் நேரடியாகவே தன் மூலதனத்தை விஸ்தரித்து வருகிறது. 1980களிலிருந்து ஜப்பானும் பலவேறு துறைகளில் தனது பொருளாதார ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகிறது. இலங்கையில் ஒரு வலுவான தொழில் உற்பத்தித் தளம் இல்லாத நிலையில் தமது உற்பத்திகளை இங்கே கொட்டிக் குவிப்பதில் இரண்டு நாடுகளுக்கும் மிகுந்த கவனம் உள்ளது. இங்கே சீனாவுடனும் அவர்கள் போட்டியிட வேண்டியுள்ளது.

ஒட்டுமொத்தமாக. இன்று இலங்கையில் தமது பொருளாதார ஆதிக்கத்தைச் செலுத்துகிற தேவையும் இராணுவ-அரசியல் மேலாதிக்கத்தையும் நிறுவும் நோக்கில் அமெரிக்காவும் இந்தியாவும் மும்முரமாக நிற்பதையும் தனது தடுமாறும் பொருளாதாரத்தை நிலைநிறுத்தத் தனது பொருட்களைச் சந்தைப் படுத்தும் நிர்பந்தத்தால் ஜப்பானும் இலங்கையின் அமைதி சூழலைப் பாவிக்க மும்முரமாக உள்ளன.

இலங்கைக்கு வாக்களிக்கப்பட்டுள்ள 450 கோடி டொலர் (ரூபா 4500.000.000/-) ஒன்றும் நன்கொடையல்ல. அதிற் 97%க்கும் மேலான பகுதி கடன். இது அந்நியச் செலாவணியிற் பெறப்பட்டு அந்நிய செலாவணியில் மீளச் செலுத்தப்பட வேண்டும். அற்பளவிலான நன்கொடையும் பலவேறு நிபந்தனைகட்குக் கீழே திரும்பவும் உதவி வழங்கும் நாடுகட்கே போய்ச் சேரும்.

கடன் தொகையுங் கூட. உதவி வழங்கும் நாடுகளுக்கே முடிவிற் போய்ச் சேர்ந்து விடும் என்பது பற்றியும் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இத்தனை வருடகால அழிவின் போது இலங்கை அரசாங்கத்தைக் கண்டித்தும் போரை நிறுத்த வலியுறுத்தியும் எதுவுமே செய்யாத அமெரிக்காவும். யப்பானும் ஐரோப்பிய நாடுகளும் இன்று புலிகள் மீது செலுத்தும் அழுத்தத்தின் தேவை என்ன?

அவர்களுடைய 'கடனுதவி'யை வழங்குவதற்கான அவசரம். அவர்களுடைய பொருளாதாரத்தின் ஏற்றுமதி நெருக்கடியைச் சமாளிப்பதில் இந்த உதவிக்கு உள்ள பங்கை அவர்கள் குறைத்து மதிப்பிடவில்லை என்பதையே காட்டுகிறது. இந்தக் கடனுதவி மூலம் இலங்கையைக் காப்பாற்றுகிற நல்லெண்ணம் என்ற தோற்றத்தை வழங்கிக் கொண்டே நாட்டைக் கொள்ளையடிக்கிற வேலையையும் துரிதப்படுத்த முயல்கிறார்கள்.

இலங்கை அரசாங்கங்கள் எல்லாமே முதலாளிய வர்க்கத்தின் ஒரு பகுதியின் குறுகியகாலப் பொருளாதார நன்மையையும் நிதி நெருக்கடியையும் பேணுவதற்காகவும் கடனுதவி கேட்டு விழுந்தடித்து ஓடுவது வழமை ஆகிவிட்டது. நாம் எவ்வளவு பெரிய பிச்சைக்காரர்கள் என்பது பற்றிப் பெருமைப்படும் அளவுக்கு நமது நாட்டின் சுய மரியாதை கீழிறங்கி விட்டது. இது அரசியல்வாதிகளிடம் மட்டுமன்றி வெகுசன அபிப்பிராயமாகவும் மாறுமளவுக்கு நாட்டின் ஊடகங்களும் அயல் உதவியில்லாமல் பொருளாதார மீட்சி இல்லை என்ற எண்ணத்தை உண்டாக்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் வாஷிங்ற்றனில் நடந்த உதவி வழங்கல் மாநாட்டுக்குப் போக அனுமதி மறுத்த அமெரிக்கா கூட விடுதலைப் புலிகள் வந்தே தீர வேண்டும் என்று இரந்தும் மிரட்டியும் பார்த்துள்ளது. ஜப்பானும் நோர்வேயும் கூட இரந்தும் வற்புறுத்தியும் தோல்வி கண்டுள்ளன.

இடைக்கால நிருவாகம் பற்றி விடுதலைப் புலிகள் இவ்வளவு உறுதியாக நிற்பது அரசாங்கமும் அதற்கு உதவத் துடிக்கும் அந்நியக் கரங்களும் எதிர்பார்த்திராதது.

அயல் உதவி என்பது எத்தகைய மோசடி என்பது பற்றி விடுதலைப் புலிகள் அறிவார்களோ தெரியாது. எனினும் உதவி என்ற பேரில் தமது ஆதிக்கம் உள்ள பகுதிகளில் தமது அரசியல். படைவலிமைகட்கும் அதற்கான பொருளாதாரத் தளத்திற்கு அதிக பாதிப்பு இல்லாமலும் இருப்பது பற்றிய அக்கறை அவர்களிடம் இருப்பதையே அயல் உதவி என்ற மாய வார்த்தையாலும் அதன்மூலம் தமக்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படும் நிதி ஒதுக்கீட்டாலும் நிதானம் தவறாமல் இருப்பது வரவேற்கத்தக்கது.

அதுமட்டுமன்றி எதிர்காலத்திலும் உதவி என்ற பேரில் அயல் நாடுகள் இந்த நாட்டைச் சூறையாடுகிற முயற்சிகள் ஒவ்வொன்றும் பற்றியும் குறிப்பாக வடக்கு கிழக்கின் மக்களின் பொருளாதாரச் சுயசார்புக்கு ஆப்பு வைக்கும் காரியங்கள் பற்றியும் அவர்கள் உறுதியுடன் செயற்படுவார்களாயின் அவர்கள் இந் நாட்டின் மக்கள் அனைவருக்கும் நன்மை செய்வோராவார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 | ஜூன் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 59

නව-ප්‍රජාතන්ත්‍රවාදී පක්ෂය NEW-DEMOCRATIC PARTY
25
பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சிகள்
யூலை 06-2003 காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை
யாழ்ப்பாணத்தில்

# சைவத்தின் பெயரால் எதையும் செய்யலாம்

வடபுலத்தின் கைதடி சைவ அநாதைகள் இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து உரும்பிராய் சிறி நாகபூசணி சிறுவர் இல்லத்திலும் சிறுமிகள் மீதான பாலியல் பலாத்காரம் இடம் பெற்றிருக்கிறது. நீண்ட நாட்களாக நடாத்தப்பட்டு வந்த இக் கொடூரம் அண்மையில் தான் அம்பலத்திற்கு கொண்டு வரப்பட்டது. அத்துடன் நீதிமன்றத்தின் மூலம் சம்மந்தப் பட்டவர்கள் விளக்க மறியலில் இருந்தும் வருகின்றனர். அங்கு வேலை செய்தவர்கள். காவலாளிகள் மட்டுமன்றி நிர்வாகிகளும் இப் பாலியல் கொடூரத்தைப் புரிந்ததாக கூறப்படுவது மககள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த இல்லங்களிலே தஞ்சம் பெற்ற சிறுவர்கள்.சிறுமியர்கள் பெற்றோரை இழந்தவர்கள் மற்றும் இடப்பெயர்வு ஏழ்மை காரணமாக நிர்க்கதியான வர்கள். சைவத்தின் பெயராலும் தொண்டின் பெயராலும் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு எத்தகைய இழி காரியத்தில் இறங்கியிருக் கிறார்கள் இக் கொடியவர்கள்.

கைதடி சைவ அநாதைச் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற பாலியல் பலாத்காரத்தில் காவலாளி முதல் சக்திக்கு கிரீடம் வைத்த நிர்வாகி வரை நால்வர் மீது குற்றம் சுமத்தப் பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் காவலாளியின் தலையில் கட்டிவிட்டு சக்தியான பிரமுகர் தப்பித்துக் கொள்ளவும் பிணையில் வந்து கொள்ளவும் முயன்றுள்ளார். அவருக்கு தமிழ் அமைச்சர் முதல் இந்து சமயப் பேரவைத் தலைவர் பிரமுகர்கள் முழு மூச்சாய் நின்று கருமம் ஆற்றியும் நீதிமன்றத்தின் முன் பலிக்கவில்லை. இந்தப் பிரமுகர்களுக்கு நடைபெற்ற கேடுகெட்ட சம்பவத்தை விட அதில் சம்பந்தப்பட்ட சில பிரமுகர்களது அந்தஸ்து கௌரவமே முக்கியமான. தாகக் காணப்படுகிறது. ஏதோ அநாதைச் சிறுவர்கள் தானே நடந்தால் நடந்து விட்டுப் போகட்டுமே என்ற மனோநிலையில் இந்த உயர் சைவப் பிரமுகர்கள் அதனை மூடி மறைத்து பூசி மெழுக முற்பட்டுள்ளனர். அதற்கு நீதிமன்றமும் சட்டமும் இடங் கொடுக்காததால் கண்டபடி திட்டிப் பிரசாரம் செய்கிறார்களாம். ஊர். சாதி கூறி 'இவன் அவன் எல்லோ'. "அவருக்கு அவ்வளவு திமிரோ" என்றெல்லாம் பிரசாரம் செய் கிறார்கள் என்று அறிய முடிகிறது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் படியேறிப் படிக்காமலே பட்டம் வழங்கப்பட்ட இந்து சமயப் பிரமுகர் மிக மும்முரம் காட்டிக் கொள்கிறார். இந்து சமய அமைச்சர் கொழும்பு வரை அலுவல் பார்த்தும் பயன் தரவில்லை. எனினும் கைதடி வழக்குச் சம்பந்தப்பட்ட சாவகச்சேரி நீதிமன்றத்தில் சில மாற்றங்களைச் செய்வதில் தற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளார் என்று நீதிமன்ற வட்டாரங்களில் பேசிக் கொள்ளப் படுகிறது. ஏழைகளை. ஆதரவற்றவர்களை. தாழ்த்தப்பட்டவர்களை சாதி. பணம். பதவி. அந்தஸ்து கொண்டு சைவத்தின் பெயரால் எப்படியும் நடத்தலாம் எந்தக் கொடூரத்தையும் நிகழ்த்தலாம் என்பதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. ●

# வெஞ்சர் தோட்டத்தில் கொலை

## பிற்போக்கு தொழிற்சங்கங்களுக்காக சக தொழிலாளியை பலி கொடுப்பதா?

தொழிற்சங்கத்திற்கு ஆள் சேர்க்கும் போட்டியில் நோர்வூட் வெஞ்சர் தோட்டத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பலர் காயமடைந்துள்ளனர். இ.தொ.கா.விற்கும் இலங்கைதேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கும் இடையிலான போட்டியினால் ஏற்பட்ட கைகலப்பினாலேயே அவ்வாறு ஒருவர் பலியாகியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் தனது வாக்கு வங்கியை பெருப்பிப்பதற்காக தோட்டத் தொழிலாளிகளை தன்வசம் இழுத்துக் கொள்வதற்காக மறைந்த காமினி திஸாநாயக்கவின் மகனான பெருந்தோட்டத் தொழில் பிரதிய மைச்சர் நவின் திஸாநாயக்க பல விதமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் அதிகமான தொழிலாளர் களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் அவர் இறங்கியுள்ளார்.

தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங் களை அமைக்கவும் விரும்பிய தொழிற் சங்கங்களில் அங்கத்தினராவதற்கும் இருக்கும் உரிமையை யாரும் தடுக்க இயலாது. இ.தொ.கா. தலைமை பிற்போக்கானது. அதற்கு எதிராக செயற்படுவதாக நம்பிக் கொண்டு பேரினவாத அடிப்படையை கொண்ட இ.தே.தோ.தொ.சங்கத்தில் அங்கத் தினராவதற்கு தொழிலாளர்கள் முண்டியடித்துக் கொண்டு செல் வதற்கு எவ்வித நியாயமும் இருக்க முடியாது. அச்சங்கத்தில் சேர்வதற் காக ஒரு தொழிலாளியை பலி கொடுத்ததும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அந்த இரண்டு பிற்போக்கான தொழிற்சங்கங்களில் ஒன்றில் சேர் வதற்காக தொழிலாளர்கள் தங்களுக்குள் பிளவை ஏற்படுத்திக் கொண்டதும். அடித்துக் கொண்டதும். சக தொழிலாளியை கொலை செய்ததும் மிகவும் அறிவீனமற்ற விடயங்களாகும்.

பெருந்தோட்டங்களில் திட்டமிட்ட பேரினவாத குடியேற்றங்களை ஏற்படுத்திய காமினி திஸாநாயக்கவின் அரசியலை முன்னெடுக்கும் வாரிசே நவின் திஸாநாயக்க மக்களுக்கும் நாட்டிற்கும் பாதிப்பை ஏற்படுத்தப் போகும் மேல்கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விடாப்பிடியாக இருக்குத் நீர் மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரியவின் மருமகனாவார். அரசியல் லாப நோக்கில் மேல்கொத்மலைத் திட்டத்தை எப்படியாவது நடைமுறைப் படுத்தி விட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடன் நவின் திஸாநாயக்க இருந்து வருகிறார்.

இ.தொ.கா.விலிருந்து விலகி அடிபட்டவரின் தொழிற்சங்கத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இணைய வேண்டுமா? அவர் பணத்தை வாரி இறைத்து தொழிற்சங்கத்திற்கு ஆள் சேர்க்கிறாராம். அவரின் நயவஞ்சக சூழ்ச்சிக்கு தொழிலாளர்கள் பலியாகக் கூடாது.

இ.தொ.கா. முதல் ம.ம.மு. உள்ளாக ஏறக்குறைய எல்லா தொழிற் சங்கங்களும் பிற்போக்கு தொழிற்சங்க வாதத்தில் மூழ்கியுள்ளன. அவற்றினால் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை ஒரு போதும் வென்றெடுக்க முடியாது. சம்பள உயர்வு போராட்டங்களில் மலையக தொழிற் சங்கங்களின் கையாலாகாத்தனம் நன்கு நிரூபிக்கப்பட்டு விட்டது. அவை தோட்டக் கம்பெனிகளிடம் தொழி லாளர்களைக் காட்டிக் கொடுத்த வரலாற்றை கொண்டுள்ளன.

எனவே அச்சங்கங்களில் அங்கத்தினராக இருப்பதற்கும் அவற்றில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு சேர்வதற்கும் அதன் தலைவர்களின் விருப்பத்திற்காகவும் தொழிலாளர்கள் பிளவுபடுவதும். மோதிக் கொள்வதும். கொலை செய்து கொள்வதும் அறியாமை ஆகும்.

அந்த பிற்போக்கு தொழிற்சங்கங்களை நிராகரித்து தோட்டக் கம்பெனிகளுக்கும். ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கும் சவால் விடக்கூடிய தொழிலாளர் வர்க்கத்தை எப்போதும் சரியாக. நேர்மையாக பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய புரட்சிகரத் தொழிற் சங்கத்தை கட்டி வளர்ப்பதே இன்று தோட்டத் தொழிலாளர்களின் முன்னுள்ள முக்கிய கடமை ஆகும்.

அக்கடமையை நிறைவேற்றுவதற்காக செய்யப்படும். போராட்டங்களும். தியாகங்களும் எப்போதும் பெறுமதியானவை. ஏனெனில் அது தோட்டத் தொழிலாளர்களின் விடுதலைக்கான வித்தாகவே இருக்கும்.

### மாக்ஸிசத்தின்.....

9ஆம் பக்க தொடர்ச்சி...

முதலாளிய சக்திகளது ஆசிகளுடன் இன்னும் மோசமான குறுகிய இனவாதத்தைக் கடைப்பிடிப்பதையும் இந்தத் "தேசியவாத" வெறிக்கும் மேலை நாடுகளின் பெருமுதலாளிய அரசுகட்கும் உள்ள நெருக்கம் பற்றி இப்போது இரகசியமில்லை.

பலவாறான உள் முரண்பாடுகளின் விளைவாகத் தொழிலாளரது உரிமைப் போராட்டங்கள் வலுவிழந்தும் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை பின்னடைவுக்குட்பட்டும் உள்ளது. எனவே. முதலாளியத்தைப் பொறுத்தவரை தொழிலாளி வர்க்கத்தை அடக்கி ஆளுவதற்குத் தேசிய இனப்பிரச்சினை போன்றவை இரண்டு விதமாக உதவுகின்றன.

ஒருபுறம் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் தொழிலாளர் இன அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டு நசுக்கப்படுகின்றனர். மேலாதிக்கச் சமூகத்தின் தொழிலாளரது உரிமைப் போராட்டங்கள் தேசியவாதம் தொடர்பான பிரச்சினைகளைக் காட்டித் திசை திருப்பி மழுங்கடிக்கப்படுகின்றன.

எந்த விதமான தொழில்நுட்ப வளர்ச்சியாலும் முதலாளியச் சுரண்டலை நிறுத்த முடியாது. சுரண்டல் தொடரும் வரை போராட்டம் தொடரும். எனவே முதலாளியம் சொல்வதெல்லாம் தனது ஒடுக்குமுறை பற்றியும் சுரண்டல் பற்றியுமான தெளிவு வர்க்க அடிப்படையிலான ஒரு போராட்டமாக மாறாமற் கவனித்துக் கொள்வதுதான்.

மூன்றாமுலக நாடுகளின் பொருளாதார நலிவும் அதிலிருந்து மீளும் நோக்கில் அந்நிய முதலீட்டுக்கு அவை போட்டி போடுவதும் மேனாட்டுப் பெருமுதலாளிகட்கு மிக வாய்ப்பானது. இவ்வாறு பெருமுதலாளியச் சுரண்டல் உக்கிரமாகிறது.

எனவே நாம் இன்று பல்வேறு சமூக முரண்பாடுகளாகக் காண்பனவெல்லாம் வர்க்கப் போராட்டத்தின் அம்சங்களே. அதில் முக்கியமான விடயமென்னவென்றால் இப் போராட்டத்தில் மேனாட்டுப் பெருமுதலாளியம் திட்டமிட்டபடியே பல்வேறு வேடங்களில் உழைக்கும் வர்க்கங்கள் ஒடுக்கப்படுகின்றன.

எனவே இவ்வாறான ஒடுக்குமுறைகட்கு எதிரான போராட்டத்தில் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டியுள்ளது. ஒருபுறம் ஒடுக்குமுறையை நிபந்தனையின்றி எதிர்ப்பது. மறுபுறம் சமூகங்களிடையில் பகையில்லாத முறையில் பிரச்சினையைத் தீர்ப்பது.

ஏனெனில் ஏகாதிபத்தியம் (அதாவது மேனாட்டுப் பெருமுதலாளியம்) பாவிக்கும் போர் உபக்கிரமத்தின் முக்கியமான பண்பு ஏதென்றால் மக்கள் மத்தியிலான முரண்பாட்டை வளர்த்து சுரண்டப்படும் உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தும் அதன் விளைவான ஒடுக்குமுறைப் போரின் மூலமும் அதன் திரைமறைவிலும் தனது சுரண்டலுக்குப் பாதகமில்லாது கவனித்துக் கொள்வதுமாகும்.

மற்றப்படி. நமது பின்தங்கிய நிலைக்குக் காரணம் நவீன தொழில்நுட்பம் இல்லாதது அல்ல. நவீன தொழில்நுட்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும். பெருமுதலாளியம் வர்க்கப் போராட்டத்தில் தன் பங்கைச் செலுத்தியே வருகிறது. இப்போது தேவையாக உள்ளது ஏதெனில் தொழிலாளி வர்க்கம் தனது பங்கு ஏதென்று சரியாக அடையாளங் காணுவதுதான்.

# புதிய-ஜனநாயகக் கட்சியின் 25 ஆண்டுகள்

புதிய-ஜனநாயகக் கட்சி ஆரம்பிக்கப் பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. அதனை யொட்டிய ஆண்டு நிறைவு விழா யூலை ஆறாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. 1978ம் ஆண்டு யூலை மூன்றாம் திகதி இன்றைய புதிய-ஜனநாயகக் கட்சி அன்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரில் தோற்று விக்கப்பட்டது. புதிய பெயரில் உருவாக்கப்பட்ட போதிலும் பழைய மாக்சிச-லெனினிசக் கட்சியில் அங்கம் பெற்றவர்களது வெளியேற்றத் தின் மூலமே இக்கட்சி தோற்று விக்கப்பட்டது. இதன் இரண்டாவது தேசியக் காங்கிரஸ் 1991ல் தனது பெயரை புதிய-ஜனநாயகக் கட்சி என மாற்றிக் கொண்டது. 1978லிருந்து இன்றுவரையான இருபத்தி ஐந்து ஆண்டுகளில் புதிய-ஜனநாயகக் கட்சி மாக்சிசம்-லெனினிசம் -மா ஓ சேதுங் சிந்தனை வழி நின்று புரட்சிகர நிலைப்பாட்டுடன் செயற்பட்டு வந்துள்ளது. கடந்த கால் நூற்றாண்டு காலப் பகுதியானது இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடிகள் உச்சத்தை அடைந்த காலப் பகுதியாகும். அத்துடன் தேசிய இனப்பிரச்சினை பேரினவாதத்தால் ஒடுக்குமுறை யுத்தமாக்கப்பட்ட காலப் பகுதியுமாகும். இவற்றின் மத்தியிலேதான் புதிய-ஜனநாயகக் கட்சியை ஒரு மாக்சிச-லெனினிசக் கட்சியாக கட்டியெழுப்பி முன்னெடுப்பதில் மிகப் பெரும் நெருக்கடிகளையும். சவால்களையும் அச்சுறுத்தல்களையும் கடந்து வர முடிந்தது. பெரும் வரலாற்றுச் சாதனை என்றே கூறுதல் வேண்டும். இதில் மாக்சிச-லெனினிச-மா ஓ சேதுங் சிந்தனை காட்டிய ஒளியில் நம்பிக்கையுடன் கட்சியின் அவசியத்தை வலியுறுத்தி அதனைக் கட்டியெழுப்டவதில் ஆரம்ப வழிகாட்டியாக இருந்து அதன் பொதுச் செயலாளராகவும் பணி புரிந்து 1989ல் மறைந்த தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் இவ்வேளை புரட்சிகர உணர்வுடன் நினைவு கூறப் பட வேண்டியவர். மறைந்த ஏனைய தோழர்களும் புரட்சிகர நினைவுக் குரியவர்கள்.

கடந்த இருபத்தைந்து ஆண்டு களாகப் புரட்சிகரப் பாதையில் வழிநடந்து வடக்கு. கிழக்கு. மலையகம். கொழும்பு பிரதேசங்களில் புதிய-ஜனநாயகக் கட்சி உழைக்கும் மக்கள் மத்தியிலும் ஒடுக்கப்பட்ட சகல மக்கள் மத்தியிலும் நின்று செயற்பட்டு வந்திருக்கிறது. சரியான கொள்கை. திசை மார்க்கம். தந்திரோபாயம். பரந்த சக்திகளுடனான ஐக்கியம் என்பனவற்றின் ஊடே தொடர்ந்து மாக்சிசம்-லெனினிசம் -மா ஓ சேதுங் சிந்தனை வழி நின்று புதிய-ஜனநாயகக் கட்சி தொடர்ந்தும் உறுதியுடன் செயல் புரியும் என்ற திடசங்கற்பத்தை இவ் இருபத்தைந்தாவது நிறைவு விழாவில் எடுத்துக் கொள்கிறது.

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட். 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை. கொழும்பு 13.

படிப்பகம்